
www.tamilarangam.net

சரிநிகர்
SARINIHAR
# சரிநிகர்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ் 78 | ஓகஸ்ட் 10 - ஓகஸ்ட் 23, 1995 | 7.00





# அரசியல் தீர்வுப் பொதி!

பொ.ஐ.முன்னணியின் "அரசியல் தீர்வுப் பொதி" மக்கள் முன்பாக இறக்கி வைக்கப்பட்டுள்ளது. சத்து மிக்க ஒரு சமஷ்டித் திட்டம் இது வென்று பலராலும் வரவேற்கப்பட்டிருக்கும் இத் தீர்வுப் பொதி வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது என்பதில் சந்தேகமில்லை. ஜனாதிபதித் தேர்தல்களில் வெற்றி பெற்ற உடனேயே தீர்வுப் பொதியை ஜனாதிபதி முன் வைத்திருந்திருப்பாரானால் நிலைமை வேறு என்பது வேறு விடயம்.

கருத்தாடல்கள், அபிப்பிராயக் கணிப்புகள், பேச்சுவார்த்தைகள் போன்ற பல தேர்வுகளுக்குத் தோற்ற வேண்டியிருக்கும் இத் தீர்வுப் பொதியின் அடிப்படையான அம்சங்கள் வரவேற்கப் பட வேண்டியன. குறிப்பாக ஒற்றையாட்சி முறையைத் தூக்கி வீசி அரசியலமைப்பை மறுசீரமைக்கும் வகையிலான ஒரு முன்னெடுப்பு இத் தீர்வுப் பொதியுடன் ஆரம்பமாகிறது என்று சொல்லக் கூடியதாக உள்ளது.

அதிகாரப் பரவலாக்கலின் புவியியல் எல்லைகள் என்ன என்பது இன்னும் தீர்மானிக்கப்படவில்லை என்பது முக்கியமான ஒரு விஷயம். இது பேச்சுவார்த்தைகளின் போது தீர்மானிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டாலும் வட-கிழக்கு மாகாணத்தின் எல்லைகளை தமிழ், சிங்கள, முஸ்லீம் ஆகிய மூன்று இனத்துவத்தினர்க்கும் சாதகமான முறையில் மீள வரையப்படும் என்று அரசாங்கம் தெரிவிக்கிறது.

தொடர்ச்சி 16ம் பக்கத்தில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# திருமலைப் பா.உவின் அடாவடித்தனம்

முஸ்லீம் காங்கிரஸ் பா.உ. அப்துல் மஜீத் நஜீப் தலைமையில் ஒரு அடாவடி நாடகம் நடந்தேறியுள்ளது திருமலை ஆஸ்பத்திரியில்.

இந்த நாடகம் ஜுலை 31 அன்று பிற்பகலில் நடந்தேறியுள்ளது. பெண் நோயாளர்கள் தங்கிச் சிகிச்சை பெறும் எட்டாம் வாட். நேரம் ஒன்றரை இருக்கும். திடுதிடுப்பென்று சுமார் பதினைந்து இளமட்ட ஆண்கள் வாட்டுக்குள் நுழைந்திருக்கிறார்கள். கடமையிலிருந்த பொறுப்புத்தாதி சத்தம் கேட்டு நிமிர்ந்து விசாரிக்கச் சென்றிருக்கிறார். அப்போது மேலும் மூன்று ஆண்கள் தூக்கிக் கட்டிய சாரத்துடன் ஹெல்மெட்களையும் கைகளில் இடுக்கிக் கொண்டு நுழைந்திருக்கிறார்கள். அவர்களை மறித்த தாதி இந்த நேரத்தில் எங்கே செல்கிறீர்கள் என்று கேட்டதும் பிரச்சினை வெடித்து விட்டது.

''நாங்கள் எம்.பியைப் பார்க்கப் போகிறோம்'' என்றார்கள் வந்தவர்கள். ''இது பெண்கள் வாட். அனுமதியின்றி நுழைந்திருக்கிறீர்கள். ஏதாவது தேவையென்றால் என்னைக் கேட்டால் செய்திருப்பேன். வீண்கதை பேச வேண்டாம்'' என்று தாதி பதிலளித்தார்.

தாதிக்கு எம்.பியைத் தெரியாது. முதலில் வந்த கோஷ்டியில் எம்.பியும் அடக்கம் என்பது அவருக்குத் தெரியாது. ஒரு நோயாளியைப் பார்வையிட எம்.பியும் அவரது கோஷ்டியும் தாதியை நோக்கி வந்திருக்கிறார்கள். இந்தக் கோஷ்டியில் எம்.பியும் இருக்கிறார் என்ற விடயம் தாதிக்கு மெல்லப் புரிந்தது.

எம்.பியோடு நடைபயின்ற ஒருவர் தாதிக்கு அருகில் வந்தார். ''எந்த நேரத்திலும் எங்கேயும் எங்கள் எம்.பியைச் சந்திக்க எங்களுக்கு உரிமை இருக்கிறது தெரியுமா?'' என்று உரிமைப் பிரச்சினையைக் கிளப்பினார். வெலவெலத்துப் போனார் தாதி.

மேசையிலிருந்த பைல்கள் வீசப்பட்டன. சிற்றூழியர்கள் திகைத்துப் போனார்கள். எம்.பியின் முன்னால் அவரது ஆட்கள் இப்படி நடக்கிறார்களே என்ற பயம் கலந்த திகைப்பு அவர்களுக்கு.

ஒருவர் தூஷணை வார்த்தைகளால் தாதியைத் திட்டினார். நான் நினைத்தேன் என்றால் உனது உடுப்புக்களை (நிர்வாணமாக்குவதா அல்லது உத்தியோகத்தைப் பறிப்பதா... சொன்னவருக்குத்தான் வெளிச்சம்) கழற்றி யாழ்ப்பாணம் அனுப்புவேன் என்றார்.

''புலிகள் மேல் உள்ள கோபத்தை இந்தப் பெண்மீது காட்டுகிறார்களே; பாவம் என்ற நினைப்புடன் சிற்றூழியர்கள் பார்த்துக் கொண்டிருக்க அந்த நபர் பற்களை நறநறவென்று கடித்தபடி அந்தத் தாதியைத் தாக்கக் கை ஓங்கியிருக்கிறார். உடனே சிற்றூழியர்கள் அவரைத் தடுத்துள்ளனர்.

இத்தனைக்கும் கௌரவ.பா.உவும் கூடவே நின்று ஒவ்வொரு காட்சியாக ரசித்திருக்கிறார். தனது கையாளைக் கட்டுப்படுத்தவோ, பெண் என்ற வகையிலாவது அந்தத் தாதியை விடுவிக்கவோ முயலவில்லை.

விஷயம் ஆஸ்பத்திரி பூராகப் பரவியது. அடுத்த நாள் முதலாம் திகதி எவரும் வேலைக்குச் செல்லவில்லை. டாக்டர்கள் உட்பட சிற்றூழியர்கள் வரையில் சகலரும் ஒன்றுபட்டு வேலைக்குச் செல்ல மறுத்து விட்டனர்.

இந்தளவு தூரம் வளர்ந்ததைக் கண்ட கௌரவ. பா.உ. சடையல் முயற்சிகளில் இறங்கியிருக்கிறார். ஆஸ்பத்திரி நிர்வாகமோ சம்பந்தப்பட்டவர் நேரில் வந்து மன்னிப்புக் கேட்காதவரை வேலைக்குத் திரும்பப் போவதில்லை என்று உறுதியாகக் கூறிவிட்டது.

நகரசபைத் தலைவரும் தலையிட்டார். விடயம் சுகாதார அமைச்சுவரை சென்று விட்டது. சம்பந்தப்பட்ட நபர் கொழும்புக்குப் போய்விட்டார் என்றொரு கதை அவிழ்த்து விடப்பட்டது. ஊழியர்கள் மசியவில்லை.

பகல் ஒருமணியளவில் பா.உ தோழர்கள் புடைசூழ வந்தார். தோழர்கள் ஆஸ்பத்திரி ஊழியர்களைக் கண்களால் சுட்டுக் கொண்டிருந்தனர். அறையில் வைத்து மன்னிப்புக் கேட்பதாகப் பேரம் பேசப்பட்டது. ஊழியர்களோ விடவில்லை. இங்கேயே வைத்து மன்னிப்புக் கேட்கலாம் என்றனர்.

வேறு வழியில்லை. கௌரவ. பா.உ. தலைகவிழ்ந்திருக்க பொலிஸார், பொதுமக்கள் புடைசூழ்ந்திருக்க அந்தச் ''சண்டியர்'' பகிரங்க மன்னிப்புக் கோரினார். ''எங்கள் ஊழியர்கள் எவருக்காவது எதிர்காலத்தில் விபரீதம் நேர்ந்தால் அதற்கு நீங்களே பொறுப்பு. உங்கள் சகாக்களின் பார்வை சரியாக இல்லை...'' என்று கூறியபடியே ஊழியர்கள் கடமைக்குத் திரும்பியுள்ளனர்.

வி.

# அரசியல் தீர்வுக்கு ஐ.தே.கவும் ஆதரவு?

இனப் பிரச்சினைக்குத் தீர்வாக அரசாங்கம் முன்வைத்துள்ள பிராந்திய சபைகள் திட்டம் ஐக்கிய தேசியக் கட்சியினுள் கூர்மையான பிளவொன்றை ஏற்படுத்தக் காரணமாகியுள்ளதாகத் தெரிய வருகிறது. இப் பிரச்சினையில் குறுகிய அரசியல் இலாபத்தைக் கருதாது நாட்டின் பொது முன்னேற்றத்திற்காகத் தீர்வுத் திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனக் கூறும் பிரபல பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் ஐ.தே.கவினுள் தோன்றியிருப்பது இப் பிளவுக்குக் காரணமாகியுள்ளதாகத் தெரிய வருகிறது.

பிராந்திய சபைத் தீர்வுத் திட்டத்தின் கர்த்தாக்களை அரசியல் ரீதியாகத் தாம் ஏற்றுக் கொள்ளாவிடினும் அத் தீர்வுத் திட்டம் மிக நல்ல யோசனைத் தீர்வுத் திட்டமென்பதால் அதற்கு இடையூறு செய்யக்கூடாது என்பது அனுர பண்டாரநாயக்கவின் கருத்தாகவுள்ளதென அனுர பண்டாரநாயக்கவிற்கு நெருங்கிய வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது. ஐ.தே.கவின் தலைவர் ஏ.சீ.எஸ். ஹமீதின் நிலைப்பாடும் அதற்குச் சமமானதாகும். இதற்குப் புறம்பாக எதிரான நிலையில் கருணாசேன கொடித்துவக்கு, றொனீ டீ மெல், சறத் அமுனுகம, மஹிந்த சமரசிங்ஹ, ரிறோன் பெனான்டோ ஆகிய பாராளுமன்ற உறுப்பினர்களது கருத்து இருப்பதாகவும் அறிய வருகிறது.

ஐ.தே.க.வின் தலைவர் ரணில் விக்ரமசிங்ஹவின் நிலைப்பாடு இன்னும் தெரியவரவில்லை. கட்சித் தலைவர் இரு பக்க அழுத்தத்திற்குள் சிக்கியிருப்பதாகத் தெரியவருகிறது. தீர்வுத் திட்டத்திற்கு முன் வைக்கப்படும் பயனுள்ள திருத்தங்களினூடாக அதற்குப் பலமளிக்க வேண்டுமெனக் கூறுபவர்கள், இச் சந்தர்ப்பத்தில் ஐ.தே.க இனவாத வழியொன்றை எடுத்தால் கட்சியின் எதிர்காலத்திற்கு இதனால் கடும் பாதிப்பு ஏற்படலாம் என்ற கருத்தைக் கொண்டுள்ளனர். ஆனாலும் எவ் வழியிலாவது அரசாங்கத்தை ஆட்டங்காணச் செய்ய வேண்டுமென நினைப்பவர்கள் இனவாத நடைமுறைகளினூடாகவாவது அந் நோக்கத்தில் வெற்றி பெற வேண்டுமென நினைக்கும் நிலைப்பாட்டில் இருப்பதாகவும் தெரிய வருகிறது.

ஐ.தே.க இச் சந்தர்ப்பத்தில் பின்பற்றப்போகும் நிலைப்பாட்டின் மீது உலக நாடுகள் கவனமாக இருப்பதுடன் இச் சந்தர்ப்பத்தில் இனவாத நிலைப்பாடொன்றில் நின்று ஐ.தே.க செயற்பட்டால் சர்வதேச ஆதரவை அது முற்றாக இழந்து விடுமென்பது விமர்சகர்களின் கருத்தாகவுள்ளது.

தலைப்புச் செய்தி - றாவய - 950806

# சுதந்திர இலக்கிய விழா 1995

**நான்காவது சுதந்திர இலக்கிய விழாவையொட்டி ஆக்க இலக்கியப் படைப்பாளிகளுக்கான விருது வழங்கல். விருது வழங்கல் இரு பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளது.**

1) 01-01-1994 இல் இருந்து 31-12-1994 வரையான காலப்பகுதியில் கவிதை, சிறுகதை, நாவல், மொழிபெயர்ப்பு இலக்கியம் ஆகியதுறைகளில் வெளியாகிய சிறந்த நூல்களுக்கான விருது வழங்கல்.

- 0 படைப்பாளிகள் இலங்கையராய் இருத்தல் வேண்டும்.
- 0 வெளிநாட்டில்வதியும் படைப்பாளிகளின் நூல்களும், வெளிநாடுகளில்வெளியிடப்பட்ட நூல்களும் இதனுடன் சேர்த்துக்கொள்ளப்படும்.
- 0 அமைப்புக்குழுவே நூல்களை சேகரித்து மதிப்பீடு செய்யும். இருப்பினும் தவறுகளை தவிர்க்கும் முகமாக எழுத்தாளர்கள் தமது நூல்களைப்பற்றிய விபரங்களை தந்துதவுமாறு வேண்டுகிறோம்.

**2) புதிய எழுத்தாளர்களுக்கான விருது வழங்கல்**

சிறுகதை, கவிதைத் துறைகளில் புதிய எழுத்தாளர்களுக்கான போட்டி ஒன்றை நடாத்தி சிறந்த படைப்புகளுக்கு விருது வழங்கல்.

**போட்டி முடிவுத் திகதி 31-08-1995.**

இது தொடர்பான மேலதிக விபரங்களுக்கும்; விண்ணப்பப்படிவங்களுக்கும் சுயமுகவரி இடப்பட்ட, முத்திரை ஒட்டப்பட்ட, நீண்ட கடித உறையொன்றை கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

அமைப்புக்குழு,
புதிய எழுத்தாளர் போட்டி,
சுதந்திர இலக்கிய விழா-1995
இல 61, பழைய கொட்டாவ வீதி,
மிரிஹான,
நுகேகொட.
தொலைபேசி-811927

# சர்வதேச ஒத்துழைப்பு!

யுத்தம் சமயத்துடன் தொடர்பு பட்டிருப்பது எப்படி என்பது எனக்கு விளங்கவில்லை. பௌத்த சமயம் மட்டுமல்ல எந்தச் சமயமுமே மனிதப் படுகொலைகளுக்கு எதிரானதாகும். யார் செய்தாலும், எக் காரணத்திற்காகச் செய்யப்பட்டாலும், யுத்தத்தை சமயங்கள் நியாயப்படுத்துகின்றன என நான் கேள்விப்படவில்லை.

சில நாயக்க தேரர்கள் யுத்தத்திற்கு ஆதரவான கருத்துக்களைத் தெரிவிப்பதை நான் கண்டுள்ளேன். அவர்கள் யுத்தத்தை ஆசீர்வதிக்கின்றனர்.

மறுபிறவியை ஏற்றுக் கொள்ளும் பௌத்த சமயத்தவர்கள் என்ற முறையில், அடுத்த பிறவியில் யாழ்ப்பாணத்தில் பிறந்தால் என்ன நடக்கும் என அவர்கள் சிந்திக்காதது ஏன்? என்று நான் கேட்க விரும்புகின்றேன்.

நிலைமை இப்படியே போனால், அடுத்தது பௌத்த சமயத்தை அழிக்கச் சதி ஆரம்பிக்கப்படுகிறது என்பதையும் கூட நாம் ஏற்றுக் கொள்ள வேண்டியிருக்கும். இதற்காக அந்நிய நாட்டு அமைப்புகள், ஏனைய சமயங்கள் மீது குற்றஞ் சாட்டப்படும். பௌத்த சமயத்தினர் எனக் கூறித் திரிந்து யுத்தத்திற்கு வாழ்த்துத் தெரிவிக்கும் மஹாநாயக்கர்கள் பற்றி என்ன சொல்ல?

பம்பரகந்தே சிறிவிமல தேரர்

ஹிரு - 950806

# பேராதனைப் பல்கலைக் கழக மாணவர் கைது

பேராதனைப் பல்கலைக்கழகப் பொறியியல்பீட மாணவர்களான, நந்தகுமார், இரவிதரன் ஆகியோர், கண்டி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். மே மாதம் முதல்வாரம் பேராதனைப் பல்கலைக்கழக அக்பர் மாணவர் விடுதி பொலிஸாரினால் சுற்றிவளைக்கப்பட்டு கதிர்காமநாதன் நந்தகுமார் (25, வல்வெட்டித்துறை) தாமரைக் கண்ணன் (25), இரவீந்திரன் (28 அச்சுவேலி) ஆகியோர் கைது செய்யப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டனர். மூன்று மாதங்களின் பின் மீண்டும் ஓகஸ்ட் எட்டாம் திகதி மதியம் 12 மணியளவில் பல்கலைக்கழகத்திற்கு வந்த புலனாய்வுத் துறையினர் இம்மூன்று மாணவர்களையும் அழைத்து நீங்கள் விடுதலை செய்யப்பட்டதை, செஞ்சிலுவை சங்கத்தினரிடம் உறுதிப்படுத்த வேண்டுமெனக் கூறி, கண்டி பொலிஸ் நிலையத்திற்கு வருமாறு இம்மூவரையும் அழைத்தனர். இம்மாணவர்கள் தாங்கள் விடுதலை செய்யப்பட்டது தொடர்பாக எழுத்து மூலமாகக் கடிதம் ஒன்றைத் தருவதாகவும், பொலிஸ் நிலையத்திற்கு வரவேண்டியதில்லை என எடுத்துக் கூறியும் பொலிஸார் பலாத்காரமாக அவர்களை அழைத்துச் சென்றுள்ளனர். விசாரணையின் பின் பொலிஸ் நிலையத்தில் கதிர்காமநாதன் நந்தகுமார் மீண்டும் தடுத்துவைக்கப்பட்டார். இதன் பிறகு ஓகஸ்ட் ஐந்தாம் திகதி மதியம் 11 மணியளவில், அக்பர் விடுதியில் உள்ள நந்தகுமாரின் அறைக்கு மீளவும் வந்த பொலிஸார், நந்தகுமாரினுடைய விரிவுரைக் குறிப்புகளை எடுத்துக் கொண்டதுடன் அவற்றை திருப்பிக் கொடுப்பதற்காக அதே அறையில் இருக்கும் இரவிதரன் (25, அச்சுவேலி) என்ற மாணவனைப் பொலிஸ் நிலையத்திற்கு வருமாறு கூட்டிச் சென்றனர். ஆனால், விரிவுரை குறிப்புகள் மட்டுமல்ல விரிவுரைக் குறிப்புகளைக் கொடுத்தனுப்பக் கூட்டிச் சென்ற இரவிதரனையும் பொலிஸார் திருப்பி அனுப்பவில்லை. நந்தகுமாரும் இரவிதரனும் தொடர்ந்தும் கண்டி பொலிஸாரால் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்; எதுவித காரணமும்தெரிவிக்கப்படாமலே!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தீர்வுத் திட்ட வரலாறும் நீலன் திருச்செல்வமும்

நீலன் திருச்செல்வம் அவர்கள் சர்வதேசப் புகழ்பெற்ற சட்ட நிபுணர் என்பதில் தமிழர்களுக்கு என்றுமே பெருமை.

அண்மையில் 'தாய்நாடு' பத்திரிகையும் (ஜுன் 1 -15) வேறு பத்திரிகைகளும் கடந்த தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் கொழும்பு தமிழ் வேட்பாளரையும், பின்னர் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசின் வெளிவிவகார அமைச்சரான லக்ஷ்மன் கதிர்காமரையும் ஜனாதிபதி சந்திரிகா அம்மையாருக்கு அடையாளம் காட்டியது நீலன் திருச்செல்வம் அவர்களே என்று செய்தி வெளியிட்டிருந்தன. நீலன் வெறும் சட்ட மூளை மட்டுமல்ல தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினராக இருந்து கொண்டே மாற்றுக் கட்சி அரசையும் வழிநடத்திச் செல்வதிலும் பங்கு வகிக்கிற அளவுக்கு தமிழர் வரலாறு காணாத ஒரு இராஜதந்திரியாகவும் மேம்பட்டிருப்பதையே இச் செய்தி சுட்டிக் காட்டியது. இவற்றை எல்லாம் மிஞ்சிடும் வகையில் அண்மைக் காலத்தில் நீலன் திருச்செல்வம் அவர்களின் செல்வாக்குப் பற்றிய பல தகவல்கள் வெளிவந்திருக்கின்றன. அவற்றின் உச்சக்கட்டம் ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் முன்வைத்திருக்கிற தீர்வுத்திட்டம் நீலன் திருச்செல்வம் அவர்களதும் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அவர்களதும் குழந்தை என்கிற சேதிதான்.

இதுபற்றி இரட்டிப்பு மகிழ்ச்சி அடைகிற பல தமிழர்கள் இருக்கிறார்கள். தமிழரான நீலன் அவர்களை இன்னும் கூட சிலர் நீலனும், ராஜதந்திரியும் பாண்டவர்களது ஆலோசனுமாகிய கிருஷ்ண பரமாத்மாகவே காண்கிறார்கள். சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் நீலத்தையல்ல.

நீலன் அவர்களை வியந்து போற்றுகிற தமிழர்கள், முன்னர் முன்வைக்கப்பட்ட தீர்வுத் திட்டங்கள் போலல்லாமல் இத் தீர்வுத் திட்டம் நீலன் அவர்கள் சம்பந்தப்பட்டிருப்பதால் தமிழர்களுக்கு சாதகமான அரசியல் தீர்வாக, அவரால் வளர்த்தெடுக்கப்படும் என்கிறார்கள். இப்போ முதல்முறையாக அரசின் பக்கத்தில் பொறுப்பாகவும் உத்தரவாதமானதுமாகவும் ஒரு தமிழ் மூளை உள்ளது என்பதே அவர்களது வாதமாக உள்ளது.

முன்னர் பண்டா - செல்வா ஒப்பந்தம் (1957) முன்வைக்கப்பட்ட போது மேற்படி தீர்வுத் திட்டம் தமிழ் மக்களது உரிமைப் போராட்டத்தை பின்தள்ளிடவும், எதிர்ப்பில்லாமல் கிழக்கு மாகாணத்தில் சிங்களக் குடியேற்றங்களைத் துரிதப்படுத்தவும் வாகனங்களில் சிங்கள சிறீ போன்று சிங்களத் திணிப்பை தீவிரப்படுத்திட்வுமான ஒரு திரைமறைப்பாக பயன்படுத்தப்பட்ட பின் எஸ். டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க அவர்களால் அது கிழித்தெறியப்பட்டது.

மேற்படி பண்டா - செல்வா தீர்வுத் திட்டத்தின் பின் நிகழ்வுகளாக இடம்பெற்ற சுதந்திரக் கட்சி அரசினதும் எதிர்க் கட்சியான ஐ.தே.கவினதும் ஏட்டிக்குப் போட்டி தமிழர் விரோத நடவடிக்கைகளே 1958ம் ஆண்டு கலவரத்தின் தோற்றுவாயாயின. இதற்கு உதாரணமாக திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள், சிங்கள சிறீ இயக்கம் ஜே.ஆர் அவர்களது இனக் கொலை நோக்கமுள்ள கண்டிப் பாத யாத்திரை என்பவற்றை இங்கு குறிப்பிடலாம்.

பின்னர் அப்போது தமிழரசுக் கட்சியினரான எம்.திருச்செல்வம் அவர்கள் அமைச்சராகவும். அப்போது காங்கிரஸ்காரரான எம்.சிவசிதம்பரம் உப சபாநாயகருமாக பதவி வகித்த ஐ.தே.க. அரசு ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைத்தது. டட்லி - செல்வா ஒப்பந்தம் என குறிப்பிடப்பட்டதும் பண்டா-செல்வா ஒப்பந்தத்தின் நீர்த்துப் போன சுரத்தற்ற வடிவமுமான டட்லி - செல்வா தீர்வுத் திட்டம் எம். திருச்செல்வம் அவர்களது 'மூளையின் குழந்தை' என அப்பொழுது பரவலாகப் பேசப்பட்டது.

உண்மையில் இத் திட்டமும் ஐ.தே.க அரசை நீடிப்பதற்காக தமிழர்களை ஏமாற்றிடவும் மலையக மக்களை நாடுகடத்தும் சட்டமூலங்கள், அடையாள அட்டை மசோதா போன்ற தமிழர் விரோத நடவடிக்கைகளுக்குமே திரைமறைப்பாக பயன்படுத்தப்பட்டு பின்னர் டட்லி சேனநாயக்க அவர்களால் குப்பைத் தொட்டியில் வீசப்பட்டது.

இத் திட்டத்தின் பின் நிகழ்வுகளும் மீண்டுமொரு தமிழர் விரோத இனக் கலவரத்தை வளர்த்தெடுக்கிற ஆபத்தாக உருவாகியது. இம்முறை பாத யாத்திரையை நடாத்தியது. ஐ.தே.கவும் ஜே.ஆர் அவர்களுமல்ல. இன்றைய பிரதம அமைச்சர் சிறிமாவோ அம்மையார் தலைமையிலான சிறீலங்கா சுதந்திரக் கட்சியும், என்.எம். பெரேரா, பீட்டர் கெனமன் தலைமையிலான இடதுசாரிகளுமாவர். 'டட்லியின் வயிற்றுள் மசாலை வடை' என்பது இவர்களது கோஷமாக இருந்தது. திருமதி சிறிமாவோ அம்மையார் அன்று போர்க்கோலம் கொண்டது வெறும் நியாயமான தமிழ் மொழி உபயோக மசோதாவுக்கான சட்டவிதிகள் ஆக்கப்படுவதற்கு எதிராகவே. இந்த ஊர்வலத்தினதும் சிறிமாவோ அம்மையாரது இனவெறி நிலைப்பாட்டின் அவமானச் சின்னமொன்று அலரி மாளிகைக்கு முன்புறமாக சற்றுத் தள்ளி காலிவீதியில் சிறிமாவோ அம்மையாரின் அரசினால் நிறுவப்பட்டுள்ளது.

மேற்படி இனவாத ஊர்வலத்தில் அப்போது கம்யூனிஸ்ட் கட்சி வாலிபர் முன்னணித் தலைவரும் பின் ஜே.வி.பி புரட்சித் தலைவராக மிதந்தவருமான ரோகண விஜேவீரவும் கலந்து கொண்டமை முரண் நகையாகும்.

முன்னைய தீர்வுத் திட்டங்கள் தமிழர் விரோதமாகப் பயன்பட்டதும் பின்னர் கிழித்தெறியப்பட்டதும், அவை எதிரும்'' புதிருமாக தூண்டிவிட்ட இனவாதமும் இன்றும் நமது நினைவில் தெளிவாகவே உள்ளது. இப்படி அரசுகளால் தொடர்ந்தும் வளர்க்கப்பட்ட இனவாதமே தமிழரது விடுதலைப் போரிலும் இனவாத சறுக்கல்களுக்கு வழி வகுத்தது.

சிங்கள பௌத்த இனவாதம் தமிழர் விரோத இனக் கலவரங்களாகவும், இனக் கலவர அச்சுறுத்தல்களாகவும் வளர்ச்சி பெற்று அரச பயங்கரவாதமாக பின்னர் உறுதிப்பட்டது. அதுவரை தமிழர்களது போராட்ட வழி காந்திய அகிம்சை வழியாகவே இருந்தது. சிங்கள பௌத்த இனவெறி அரசினதும் அமைப்புகளதும் பயங்கரவாதமே ஈற்றில் தமிழர்களை வன்முறையின் திசையில் தள்ளியது. எந்த வன்முறையும் பயங்கரவாத தளம்பல்களில் இருந்து தப்பிவிட முடியாது.

இது தமிழர்களை வன்முறைக்கும் பயங்கரவாதத்துக்கும் தள்ளிய அரச பயங்கரவாதத்தை நிறுத்துவதிலிருந்தே எந்த அரசியல் தீர்வுத் திட்டமும் ஆரம்பிக்கப்பட முடியும் எந்பதைத் தெளிவுபடுத்துகிறது. தமிழர்களது சுயநிர்ணய உரிமை பற்றியது அடுத்த விடயமாகும்.

தலைசிறந்த ராஜதந்திரியும் மூளைசாலியுமான நீலன் அவர்களுக்கு இது தெரியாததல்ல. இன்று என்ன நிகழ்கிறது? நீலன் - பீரிஸ் தீர்வுத் திட்டம் விடுதலைப் புலிகளை அரசியல் ரீதியாகவும் இராணுவ ரீதியாகவும் தோற்கடிக்கும் முயற்சியுடன் இணைக்கப்படுகிறது. ஜனாதிபதி அம்மையாராலேயே தீர்வுத் திட்டத்துடன் சமாதானத்துக்கான யுத்தம் என்கிற கோஷம் முன்வைக்கப்படுகிறது. இத் தீர்வுத் திட்டம் பாராளுமன்றத்திலும் சர்வசன வாக்கெடுப்பிலும் வெற்றி பெறுமா பெறாதா அதற்கு முன்பே யுத்தத்தை வென்றெடுப்பதற்கும் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் முக்கிய சரத்தான வடகிழக்கு இணைப்பை எல்லைமாற்றம் என்கிற பெயரால் சீர்குலைப்பதற்குமான ஒரு கருவியாக பயன்படுத்தப்படப் போகிறது.

பொது மக்கள் மீது எறிகணை வீச்சு, அரச பயங்கரவாதமான விமான குண்டுவீச்சு என்பதை தொடர்வதற்காகவே ஒரு திரைமறைப்பாகவும் தீர்வுத் திட்டம் ஏற்கனவே பயன்படுத்தப்பட்டு வருகிறது.

நீலன் திருச்செல்வம் அவர்கள் இத் தீர்வுத் திட்டமும் யுத்தத்தினதும் அரச பயங்கரவாதத்தினதும் கருவியாகாமல் சமாதானத்தினதும் சகவாழ்வினதும் கருவியாவதற்குப்



பொறுப்பெடுக்க வேண்டியவர். தனது தந்தையாரைப் போல பயன்படுத்தி விட்டு இலகுவில் தூக்கி வீசக்கூடிய கறிவேப்பிலையாக திரு. நீலன் திருச்செல்வம் அவர்கள் இல்லை என்று நம்புகிறோம்.

அண்மையில் லெபனானில் குடிமக்கள் இலக்குமீதான றொக்கட் தாக்குதல் ஒன்றுக்காக இஸ்ரேலிய சியோனிச அரசின் ஜனாதிபதியும், பிரதமருமே மன்னிப்புக் கோரினர்.

ஆனால் இன்று வரை யாழில் இடம்பெற்ற நவாலித் தேவாலய வளாகக் குண்டுவீச்சு படுகொலைகள் பற்றியோ ஏனைய விமானக் குண்டு, எறிகணைத் தாக்குதல்கள் தொடர்பான பொதுமக்கள் படுகொலைகள் பற்றியோ தமிழர்களுக்கு நீதி வழங்கவிருப்பதாக பெரிய குரலில் கூச்சலிடும் அரசு தமிழ் மக்களிடம் மன்னிப்புக் கோரவோ, இதுவரை இத்தகைய தமிழர்களுக்கெதிரான பயங்கரவாதத்தை நிறுத்திடவோ இல்லை. அதற்கு மாறாக இது தொடர்பான சர்வதேச குரல்களைக் கூட நசுக்கிட அரசின் வெளிவிவகார அமைச்சர் அவர்கள் போர்க்கோலம் கொண்டார்கள்.

முப்படைகளின் பிரதம தளபதியான ஜனாதிபதி அவர்களே நவாலி தேவாலய வளாக விமான குண்டுவீச்சு பயங்கரவாதத்தில் படுகொலை செய்யப்பட்ட பெண்கள் சிறுவர்கள் மாணவர்களின் உடல்களை புறந்தள்ளி விட்டு நவாலி தேவாலாயத்தின் சுவர்களும் கூரைகளும் சேதமடையவில்லை என அறிக்கை விடுகிறார்கள். இத்தகைய நடவடிக்கைகளையே தமிழர்கள் அரச பயங்கரவாதம் என்கிறார்கள்.

அரசின் ஆலோசகர் நீலன் திருச்செல்வம் அவர்களுக்கு இது சம்மதமான தொன்றா?

நீலன் அவர்கள் கைது தீர்வுதிட்டம் போரின் கருவியாக இருப்பதற்கு துணைபோகக்கூடாது. அவர் துணிவுடன் அத்திட்டம் சமாதானத்தின் கருவியாவதை உறுதிப்படுத்திட வேண்டும். இவ்வகையில் அவர் பின்வருவனவற்றை நடைமுறைப்படுத்தும்படி தான் -ஆலோசனை நல்கும் அரசை நிர்ப்பந்திக்க வேண்டும்.

**1. பொதுமக்கள் மீதான விமான எறிகணைத் தாக்குதல்களை நிறுத்துதல்.**

**2. யுத்த நிறுத்தம்**

**3. தீர்வுத்திட்டத்தின் அடிப்படையில் அரசு, விடுதலைப்புலிகள், முஸ்லீம் தலைமை கலந்து கொள்ளும் பேச்சுவார்த்தைகளை அரசியல் தலைமை மட்டத்தில் ஏற்பாடு செய்தல்.**

**4. மலையக மக்களது நலன்களை கருத்தில் கொண்டு பதுளை மாவட்டத்தையும் சப்பிரகமுவ மாகாணத்தின் தோட்டப்பகுதிகளையும் மத்திய மாகாணத்துடன் இணைத்தல்.**

**5. ஒதுக்கப்பட்ட தென்னிலங்கை சிங்கள மக்களுக்கு பயனுள்ள வகையில் மொனராகலை மாவட்டத்தை தென்மாகாணத்துடன் இணைத்தல்.**

இத்தகைய அணுகுமுறை மூலம் மட்டுமே நீலன் - பீரிஸ் தீர்வுத் திட்டம் இனங்களுக்கிடையே சமாதானத்துக்கும் சகவாழ்வுக்கும் வித்திடும் அடிப்படையாக மேம்படமுடியும்.

**வ.ஐ.ச.ஜெயபாலன்**



www.tamilarangam.net



# தென்கிழக்கு மாகாணம்:

# முஸ்லிம் தேசத்தின் மீதான தூக்குக் கயிறு

- மருதூர் பஷீத்

**மருதூர் பஷீத்**

கிழக்கில் மருதமுனையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். முஸ்லிம் மக்களின் சமூக அரசியல் கலாசார இருப்புக் குறித்துப் பல தளங்களிலும் கடந்த இருபது வருடங்களாகப் பங்காற்றி வருபவர். அவ்வப்போது கவிதைகளும் எழுதியுள்ளார், சரிநிகரில் ஆரம்பகாலம் முதல் முஸ்லீம் மக்கள் தொடர்பாக எழுதி வருபவர். உத்தேசிக்கப்பட்டுள்ள தென்கிழக்கு மாகாண உபசபை, அது தொடர்பாக முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாடு பற்றிய தனது வன்மையான விமர்சனத்தை முன் வைக்கிறார் பஷீத். இது தொடர்பான ஏனைய கருத்துக்களை முஸ்லிம் காங்கிரஸிடமிருந்தும் முஸ்லிம் மக்கள் பிரச்சினையில் அக்கறையுடன் ஈடுபட்டுள்ளோரிடமிருந்தும் எதிர்பார்க்கிறோம்.


ஆ-ர்

பெருமதிப்பிற்குரிய முஸ்லிம் காங்கிரஸ் தலைமைக்கு!

அஸ்ஸலாமு அலைக்கும்! தாங்கள் தற்போது பிரபலப்படுத்தி வருகின்ற ''தென்கிழக்கு மாகாண சபையின்'' வடக்கு எல்லையான மருதமுனையில் இருந்து இம்மடலை வரைகிறேன்.

ஏறத்தாழ எட்டு வருடங்களாக வடக்கு, கிழக்கு முஸ்லிம்களாகிய நாமும், தாங்களும் வடக்கு கிழக்கில் முஸ்லிம்களுக்கு என தனியான அரசியல் அதிகார அலகு அவசியம் என்று கோரிக்கை எழுப்பி வந்திருக்கிறோம். இந்தக் கோரிக்கைக்கான எங்களது பூரண ஆணையை ஒவ்வொரு தேர்தலின் போதும் நாங்கள் உறுதியாக வழங்கி வந்திருக்கிறோம். உண்மையில், நீங்கள் இன்று புகழ்கின்ற தென்கிழக்கு மாகாணத்திற்குள் அடங்கவிருக்கின்ற அம்பாறை மாவட்ட முஸ்லிம்களிலும் பார்க்க, இந்த ''தென்கிழக்கு மாகாணத்திற்கு ''வெளியே வாழ்கின்ற வடக்கு, கிழக்கு முஸ்லிம்கள் தான் முஸ்லீம் காங்கிரசுக்கும், தனியான முஸ்லிம் அதிகார அலகுக் கோரிக்கைக்கும் தங்களுடைய ஆதரவை தீவிரமாகவும், அர்ப்பணிப்புடனும் வழங்கி வந்திருக்கிறார்கள். இப்போது இந்த உண்மையை நீங்களும் அறிவீர்கள். இருந்தும் இப்போது நீங்கள் இந்த முஸ்லீம்களைக் கைவிட்டு ''தென்கிழக்கு மாகாணத்திற்கு'' உடன்பட்டிருப்பதை மௌனமாகவோ அல்லது ஆர்வமாகவோ ஏற்றுக் கொள்வது என்பது முழு வடக்கு, கிழக்கு முஸ்லீம்களுக்கும் இழைக்கின்ற துரோகமாக இருக்கும்.

கடந்த காலங்களில் உங்களால் மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கின்ற சில குறிப்பான நடவடிக்கைகளை இப்போது உங்களுக்கு நினைவூட்டுவது அவசியம் என்று கருதுகிறேன். 1986, நவம்பரில் உங்களால் கூட்டப்பட்ட முஸ்லீம் காங்கிரஸின் ஆறாவது வருடாந்த மகாநாட்டிலிருந்து தொடங்குவோம். முஸ்லீம் காங்கிரஸை ஆரம்பித்த காத்தான்குடி மர்ஹூம் அஹமட் லெப்பை ஹாஜியாருக்கும் முஸ்லீம் காங்கிரஸின் அன்றைய முக்கிய உறுப்பினர்களுக்கும் முறையாகத் தெரிவிக்காமல் நீங்கள் திட்டமிட்டுக் கூட்டிய அந்த ஆறாவது மாகாநாடு குறித்து அன்று கடுமையான விமர்சனங்கள் எழுந்தன. ஒரு கட்சி பின்பற்ற வேண்டிய சாதாரண ஒழுங்கு முறைகளையே உதாசீனப்படுத்தி விட்டு, மிகப் பெருமளவில் அம்பாறை மாவட்ட முஸ்லிம்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டு நீங்கள் மத்திய குழுவையும் ஏனைய குழுக்களையும் அமைத்ததை வடக்கு, கிழக்கிலிருந்த முஸ்லிம்கள் விமர்சனத்துடன் நோக்கினார்கள். எனினும் எமக்கென ஒரு தனியான அரசியல் கட்சி அவசியம் என்ற உணர்வு எம் அனைவரிடமும் மேலோங்கி இருந்ததால் உங்களின் இத்தகைய நடவடிக்கைகளை சர்ச்சைக்குள்ளாக்க யாரும் விரும்பவில்லை. அம்பாறை மாவட்டத்திலிருந்து, மன்னார் மாவட்டம் வரை நாங்கள் அனைவரும் மிகுந்த அர்ப்பணிப்புடனும், தியாகங்களுடனும் முஸ்லீம் காங்கிரஸை, அந்த பசுமையான ''மரத்தை'' வளர்த்தெடுத்தோம். இதை வளர்ப்பதற்கு எங்களது வாக்குகளையும், சொத்துக்களையும் மட்டும் நாங்கள் வழங்கவில்லை; இவற்றுக்கும் மேலாக, எங்கள் உதிரத்தையும் உயிர்களையும் அர்ப்பணித்தோம். எங்கள் வீடுகளையும், வியாபாரத் தளங்களையும் இழந்தோம். எங்கள் வயற்காணிகளையும், கடல்வளங்களையும் கால்நடைகளையும் இழந்தோம்; தொழுது



கொண்டிருக்கும் போதும் தூங்கிக் கொண்டிருந்த போதும் எங்கள் அன்புக்குரியவர்களைப் பலி கொடுத்தோம்; இறுதியில் வடக்கிலிருந்து நாம் வெளியேற்றப்பட்டோம்.

இவ்வாறு முழு வடக்கு, கிழக்கு முஸ்லிம்களினாலும் வளர்த்தெடுக்கப்பட்ட முஸ்லீம் காங்கிரஸை நீங்கள் உங்களது தனிப்பட்ட சொத்தாக உங்களது அதிகாரத்திற்குட்பட்ட அமைப்பாக கருதி வந்திருக்கிறீர்கள். 'முஸ்லீம் காங்கிரஸ் இவ்வளவு செல்வாக்கு பெறுவதற்கு உங்களது சிந்தனையும், அறிவும் தான் காரணம் என்று நீங்கள் இறுமாப்புடன் கருதுகிறீர்கள். இந்த இடத்தில் நாம் மீண்டும் ஒன்றை ஞாபகமூட்ட விரும்புகிறோம். 1977 பொதுத் தேர்தலின் போது நீங்கள் ''முஸ்லிம் ஐக்கிய முன்னணி'' என்ற அமைப்பை ஏற்படுத்தி போட்டியிட்டீர்களே! அந்தத் தேர்தலில் நீங்கள் பெற்ற வாக்குகள் எத்தனை? வடக்கு, கிழக்கு முஸ்லிம்கள் மத்தியில் உங்களுக்கு கிடைத்த ஆதரவு எப்படிப்பட்டது? என்பதை ஒருமுறை நினைவில் கொண்டு வாருங்கள். ஒரு விலாசமற்ற நபர் போன்று நீங்கள் இதே வடக்கு-கிழக்கு முஸ்லிம்களினால் தூக்கி எறியப்படவில்லையா? முஸ்லீம் காங்கிரஸின் வெற்றிக்கு உங்களது சிந்தனையும், அறிவும் தான் காரணம் என்றால் அந்த சிந்தனையும் அறிவும் ''முஸ்லீம் ஐக்கிய முன்னணியை பிரபலப்படுத்துவதற்கு ஏன் அன்று உதவவில்லை? எனவே புரிந்து கொள்ளுங்கள்! முஸ்லீம் காங்கிரஸின் வெற்றிக்கு நீங்கள் அல்ல காரணம், வடகக்கு கிழக்கு முஸ்லீம்களாகிய நாங்கள் தான் காரணம் . இந்த எளிய உண்மையை நீங்கள் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். முஸ்லீம் காங்கிரஸை உங்கள் சொந்த சொத்தாகக் கருதி, வடக்கு, கிழக்கு முஸ்லிம்களின் அரசியல் தலைவிதியை உங்களின் சொந்த நலன்களுக்கு ஏற்ப தீர்மானிப்பதற்கு உங்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்!.

வடக்கு, கிழக்கு முஸ்லிம்கள் இவ்வளவு இழப்புக்ளுக்கு மத்தியில் ஏன் முஸ்லீம் காங்கிரசுக்கு தங்கள் ஆதர்வை வழங்கினார்கள் என்பதை உங்களுக்கு மீண்டும் ஞாபகமூட்ட விரும்புகிறோம்; வடக்கு, கிழக்கில் உள்ள தமது பாரம்பரிய வாழ்விடங்களின் மீது தமது உரிமைகளை நிலைநாட்டலும், அங்கு பூரண உரிமைகளுடன் கூடிய சமூகமாக, பாதுகாப்புடனும், கௌரவத்துடனும் வாழ்வதற்கும் தமக்கென தனியான அரசியல் அதிகார அலகு தேவை என்று வடக்கு, கிழக்க முஸ்லிம்கள் கொண்டிருந்த தேசிய உணர்வின் வெளிப்பாடாகவே முஸ்லீம் காங்கிரஸின் மீதான அவர்களின் ஆதரவு அமைந்திருந்தது. இந்த உண்மையை நீங்களும் மறுக்க மாட்டீர்கள். ஏனெனில் 1987ம் ஆண்டிலிருந்து மிக அண்மைக் காலம் வரை நீங்களும் இந்தக் கோரிக்கையை அடிக்கடி வெளிப்படுத்தி வந்திருக்கிறீர்கள். தமிழ்க் கட்சிகளுடனான பேச்சுவார்த்தைகளின் போதெல்லாம் நீங்கள் இந்தக் கோரிக்கையை முன்வைத்து வந்திருக்கிறீர்கள். இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் தோல்விக்கு வடக்கு, கிழக்கில் வாழ்கின்ற முஸ்லிம்களின் நலன்களைக் கவனத்திற் கொள்ளாததே ஒரே காரணம் என்று நீங்கள் கருத்துத் தெரிவித்து வந்திருக்கிறீர்கள். இவ்வாறு உணர்ச்சி ததும்பும், அறிவார்ந்ததொனியிலும் வடக்கு, கிழக்கு முஸ்லிம்களுக்கான தனியான அரசியல் அதிகார அலகு குறித்து பேசி வந்த நீங்கள், இன்று ''தென்கிழக்கு மாகாணம்'' என்ற ஒரு குறுகிய நிர்வாக எல்லைக்கு தலையாட்டியிருப்பதற்கு என்ன காரணம் கூறப் போகின்றீர்கள்?

1987இல் இந்திய - இலங்கை ஒப்பந்தம் அமுல் செய்யப்பட்டபோது, வடக்கு, கிழக்கு முஸ்லிம்களின் நலன்களை அந்த ஒப்பந்தம் கவனத்தில் கொள்ளவில்லை என்று கூறி அதை எதிர்த்தீர்கள், ஆனால் அந்த ஒப்பந்தத்தின் கீழ் நடத்தப்பட்ட மாகாணசபை தேர்தல்களில் போட்டியிட்டீர்கள், கிழக்கில் நூற்றுக்கணக்கான முஸ்லிம்கள் தமிழ் விடுதலை அமைப்புகளினால் கொல்லப்பட்ட போது, முஸ்லிம்களுக்கு என தனியான இராணுவப் பிரிவு அமைக்கும்படி ஆவேசக் கோரிக்கை விடுத்தீர்கள், பின்னர் முஸ்லிம்கள் புனித யுத்தத்தில் (ஜிஹாத்தில்) ஈடுபடுவதற்கான அனுமதியை வழங்குமாறு உலமாக்களுக்கு ஒருவாரக் கெடு வழங்கினீர்கள், எனினும் அதன் பின்னர் அவை குறித்து நீங்கள் இன்றுவரை வாய்திறக்கவேயில்லை; அஷ்ரப்-தொண்டா ஒப்பந்தம் குறித்து பரபரப்பான அறிக்கைகள் கொடுத்தீர்கள், அந்த ஒப்பந்தத்திற்கு என்ன நடந்தது என்று இன்றுவரை யாருக்கும் தெரியவில்லை, பின்னர் சந்திரிகா-அஷ்ரப் என்ற ''புகழ் மிக்க'', (ஆனால், ஒருபோதும் வெளியிடப்படாத) ஒப்பந்தம் குறித்து மார் தட்டினீர்கள், அந்த ஒப்பந்தம் வடக்கு, கிழக்கு முஸ்லிம்களுக்கான தீர்வையும் கொண்டிருக்கின்றது என்று ஒவ்வொரு தேர்தல் மேடையிலும் முழங்கினீர்கள், அந்தத் தீர்வானது நாங்கள் ஒரு போதும் கேட்டிராத '' தென்கிழக்கு மாகாணம்'' என்ற குறைமாதக் குழந்தையை ஒத்தது என்பதை இப்போது நாங்கள் புரிந்து கொண்டோம்.

உங்கள் அரசியல் என்பது பாராளுமன்ற ஆசனத்தைக் குறியாகக் கொண்ட வெறும் சந்தர்ப்பவாத அரசியல்தான் என்பதை நீங்கள் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வந்திருக்கிறீர்கள். கடந்த காலங்களில் எதிர்க்கட்சியில் இருந்த போதிலும் அரசாங்கத்திற்கு ஆதரவாகவே செயற்பட்டீர்கள். இப்போது, அரசாங்கத்தின் ''பங்காளிக்'' கட்சியாக இருக்கின்ற நிலையில், உங்களுக்குக் கிடைத்திருக்கின்ற அமைச்சுப் பதவிகளையும், பணிப்பாளர் பதவிகளையும் பேணிக் கொள்வதற்காக, வடக்கு, கிழக்கு முஸ்லிம்களின் ''தனியான அரசியல் அதிகார அலகு'' என்ற தேசியக் கோரிக்கையைக் கைவிட்டுள்ளீர்கள். 1987ம் ஆண்டிலேயே வடக்கு, கிழக்கு முஸ்லிம்களுக்கான தனியான அரசியல் அதிகார அலகு பற்றி கொள்கையளவில் தமிழ்க் கட்சிகள் ஏற்றுக் கொண்டிருந்த போது, அதைப் பெற்றுக் கொள்வதற்காக தொடர்ச்சியாக உழைத்திருப்பதே உங்களது அரசியல் கடமையாக இருந்திருக்க வேண்டும். இதற்கு மாறாக, இன்று ''தென்கிழக்கு மாகாணம்'' என்ற குறுகிய நிர்வாக அலகை ஏற்றுக் கொள்ள முடிவு செய்திருப்பதன் மூலம், ஆட்சியிலுள்ள அரசாங்கத்திற்கு நீங்கள் முற்றிலும் சரணடைந்துவிட்டீர்கள் என்பதை மேலும் துல்லியமாக வெளிப்படுத்தி இருக்கிறீர்கள். பொலன்னறுவையில் நூற்றுக்கணக்கான முஸ்லிம்கள் கொல்லப்பட்டபோது நீங்கள் நடத்திய ''கறுப்பு வெள்ளி'' துக்கதினம் அரசாங்கத்திற்கு எதிரானதல்ல என்று நீங்கள் அடிக்கடி கூறிக் கொண்டீர்கள். முஸ்லீம் காங்கிரஸின் 11வது வருடாந்த மகாநாட்டில் கட்சியின் முக்கிய உறுப்பினர்களுக்கே தெரிவிக்காமல், அப்போதைய ஜனாதிபதி பிரேமதாசவையே அடுத்த தேர்தலிலும் ஆதரிக்கவிருப்பதாகக் கூறினீர்கள். பின்னர் டி.பி. .விஜேதுங்க ''சிறுபான்மை இனங்கள் ஒட்டுண்ணிகள்'' என்று வெளிப்படையாகத் தாக்கிப் பேசிய போது, அவருடைய பேச்சை சிங்கள ஜனநாயகவாதிகளும் ஐ.தே.க முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் கூட எதிர்த்தபோது, நீங்கள் மட்டும் அதற்கு வேறு அர்த்தம் கொடுத்து நியாயப்படுத்தினீர்கள். இவ்வாறு உங்களது இந்தக் குறுகிய கால அரசியல் வாழ்வு முழுவதிலும் நீங்கள் சிங்கள ஆட்சியாளர்களுக்கு பணிந்து போகின்றவர்களாகவே இருந்து வந்திருக்கிறீர்கள் . இதன் இன்றைய தொடர்ச்சியாகத்தான் இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம் வெளியிடப்படுவதற்கு முன்பே, அந்தத் திட்டத்தை பூரணமாக ஆதரிப்பதாக நீங்கள் வெளியிட்ட வானொலி அறிக்கையும் அமைந்திருக்கிறது. இவ்வகையில், வடக்கு, கிழக்கு முஸ்லிம்களோ, அல்லது நீங்களோ இதுவரைக்கும் முன்வைக்காத ''தென்கிழக்கு மாகாணம்'' என்ற அமைப்பும் கூட சிங்கள ஆட்சியாளர்களால் தான் முன்மொழியப்பட்டது என்றும், அதை எப்போதும் போன்று நீங்கள் பணிவுடன் ஏற்றுக் கொண்டிருக்கிறீர்கள் என்றும் நாங்கள் கருதுவது சரியானதுதான்.

உங்களின் அரசியல் சூதாட்டங்கள் எதுவும் வெற்றிகரமாக நடைபெற்றதில்லை என்பதை நீங்கள் அறிவீர்கள். முன்பின் தெரியாத புஹார்தீன் ஹாஜியாரை ''மாபெரும் கொடைவள்ளல்'' என்றும் முஸ்லீம் காங்கிரஸிற்கு நிதி உதவி அளிப்பவர் என்றும் கூறி, தேசியப்பட்டியல் எம்.பியாக அவரை மாற்றினீர்கள். அதேபோன்று முகவரி அற்றுக்

→ 5

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கிடந்த சாணக அமரதுங்க, ''குர்ஆனை ஓதி விளங்குகிறார்'' என்று புகழ்ந்து அவரையும் தேசியப் பட்டியல் எம்.பியாக மாற்ற முனைந்தீர்கள். இறுதியில் இவர்கள் எப்படி நடந்து கொண்டார்கள் என்பதை நாம் அறிவோம். இத்கைய ஒரு அவல நிலைதான், இன்று நீங்கள் ஏற்றுக் கொண்டிருக்கின்ற ''தென்கிழக்கு மாகாணத்திற்கும்'' ஏற்படவிருக்கின்றது. இந்த தென்கிழக்கு மாகாணத்தினால்'' அம்பாறை மாவட்டத்திற்கு வெளியே இருக்கின்ற வடக்கு, கிழக்கு முஸ்லிம்களுக்கு எவ்வித நன்மையும் ஏற்படப் போவதில்லை என்பது ஒருபுறமிருக்க , இதனால் அம்பாறை மாவட்ட முஸ்லிம்களும் கூட நன்மை அடையப் போவதில்லை என்ற உண்மையை நீங்கள் திட்டமிட்டு மறைக்கிறீர்கள்.

உத்தேசிக்கப்பட்டுள்ள ''பிராந்தியங்களின் ஒன்றியம்'' என்ற அமைப்பில் எட்டு பிராந்தியங்கள் மட்டும் அடங்குகின்றன, இல்லையா? அப்படியானால் ஒன்பதாவதாக இருக்கின்ற தென்கிழக்கு மாகாணத்தின் கதி என்ன என்பதை எங்களுக்கு விளக்குவீர்களா? அது துணைப் பிராந்திய சபை (Sub-regional council) என்று குறிப்பிட்டிருப்பதை நீங்கள் அறிவீர்கள். உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய அரசியலமைப்பின்படி பிராந்திய சபைகள் தான் அதிகார அலகுகளாக தொழிற்படவிருக்கின்றனவே தவிர, துணைப் பிராந்திய சபை அல்ல என்பது உங்களுக்கும் தெரியும். அப்படியாயின் ''தென்கிழக்கு மாகாணம்'' என்ற துணைப் பிராந்திய சபையின் எதிர்காலம் என்ன என்பது குறித்து எமக்கு விளக்குவீர்களா? அதிகாரங்கள் எதுவும் குறிப்பிடப்படாத இந்த துணைப் பிராந்திய சபைக்காக அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள் தங்களுடைய ஆயிரக்கணக்கான ஏக்கர் பாரம்பரிய நிலங்களையும், காட்டு வளங்களையும் இழக்கவிருக்கிறார்களே; அதற்கு என்ன காரணம் கூறப்போகின்றீர்கள்? ஒலுவில் துறைமுகத்தையும், தென்கிழக்கு பல்கலைக்கழகக் கல்லூரிகளையும் பிரமாதப்படுத்துகின்ற உங்களுக்கு நீங்கள் கூறிய வார்த்தைகளையே நினைவூட்டுகிறோம். ''எமக்கு சலுகைகள் தேவையில்லை அரசியல் உரிமைகள்தான் வேண்டும்'' என்று மேடைதோறும் உணர்ச்சி பொங்க பேசினீர்களே! இப்போது முழு வடக்கு, கிழக்கு முஸ்லிம்களின் உரிமைகளையும், ஒரு துறைமுகத்திற்காகவும், பல்கலைக்கழகக் கல்லூரிக்காகவும் நீங்கள் விற்றிருப்பது ''முனாபிக்'' தனமான செயல் என்று உங்களுக்குத் தெரியவில்லையா? உத்தேசிக்கப்பட்டுள்ள தீர்வுத்திட்டத்தில் துறைமுகங்கள் அனைத்தும் மத்திய அரசின் நேரடிக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட இருப்பதால், ஒலுவில் துறைமுகம் சிங்கள ஆதிக்கத்திற்குட்படுவதையும், துறைமுகத்தைச் சூழ சிங்களக் குடியேற்றங்களும் , கடற்படைத்தளமும் அமைக்கப்படுவதையும் உங்களால் தடுக்க முடியுமா? இவற்றின் விளைவாக தமது ஆயிரக்கணக்கான ஏக்கர் பாரம்பரிய நிலங்களை இழக்கவிருக்கின்ற அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள், மீண்டும் நெருக்கடிகளுக்கும் தமது சமூக இருப்பு அபாயத்திற்குட்படுவதற்கும் இட்டுச் செல்லப்படவிருக்கிறார்கள் என்ற உண்மையை உங்களால் மறுக்க முடியுமா?

உங்களுக்குத் தெளிவாக நினைவிருக்கும் சென்ற பொதுத்தேர்தலின் போது, நீங்கள் வடக்கு, கிழக்கு முஸ்லிம்கள் மத்தியில் 'மொத்த வியாபாரம்' குறித்து, சிலேடையாகவும், அதேநேரத்தில் ஆழ்ந்த உணர்ச்சியுடனும் பேசினீர்கள். உங்களுடைய பேச்சை நாங்கள் நம்பினோம். குறிப்பாக அம்பாறை மாவட்டத்திற்கு வெளியேயுள்ள வடக்கு, கிழக்கு முஸ்லிம்கள் விசுவாசத்துடன் நம்பினார்கள். இதன் விளைவாக, அம்பாறை மாவட்டத்திலிருந்து இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமே முஸ்லீம் காங்கிரஸில் இருந்து தெரிவு செய்யப்பட்ட போது (அதிலும் இரண்டாவது பாராளுமன்ற உறுப்பினரின் தெரிவு அதிர்ஷ்டவசமானது என்பது உங்களுக்குத் தெரியும்) வடக்கு, கிழக்கின் ஏனைய பகுதிகளில் இருந்து நான்கு உறுப்பினர்கள் முஸ்லீம் காங்கிரஸிலிருந்து தெரிவு செய்யப்பட்டார்கள். முஸ்லீம் காங்கிரஸ் மேலதிகமாக (போனஸாக) ஒரு பாராளுமன்ற உறுப்பினரைப் பெறுவதற்கும் தற்போதைய அரசாங்கத்தின் ''பங்காளியாக'' மாறுவதற்கும் அம்பாறை மாவட்டத்திற்கு வெளியேயுள்ள வடக்கு, கிழக்கு முஸ்லிம்களின் வாக்குகள் தான் காரணம் என்பதை உங்களால் மறுக்க முடியாது.

இவ்வாறு உங்களுக்குக் கிடைத்திருக்கின்ற பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டு நீங்கள் செய்கின்ற மொத்த வியாபாரம் எத்தகையது என்பதை எங்களுக்கு அறியத் தருவீர்களா? உண்மையில், நீங்கள் ஒரு மொத்த வியாபாரியைப் போன்று மட்டும் அல்ல, ஒரு சில்லறை வியாபாரிக்குரிய நேர்மையுடனும் கூட நடந்து கொள்ளவில்லை, மாறாக ஒரு பிரகாசமான எதிர்காலத்தைக் கற்பனை செய்து பணம் கட்டியவர்களை, ஏமாற்றித் துரோகம் இழைக்கின்ற ஒரு கேவலமான வெளிநாட்டுத் தொழில் ஏஜென்ட் போன்று நீங்கள் நடந்து கொண்டிருக்கிறீர்கள்.

இறுதியாக ஒன்றைக் கூறி வைக்க விரும்புகிறோம். இலங்கை- இந்திய ஒப்பந்தமானது வடக்கு, கிழக்கு முஸ்லிம்களைத் திருப்திப்படுத்தாதன் காரணமாகவே தோல்வியடைந்தது என்றும், அரசியல் தீர்வு என்பது வடக்கு, கிழக்கு மக்களுக்கே தவிர ஏனைய மாகாணத்திலுள்ள மக்களுக்கு அல்ல என்றும் நீங்கள் முன்பு கூறியிருந்தீர்கள். இதே வார்த்தைகள் இன்று முன்வைக்கப்பட்டிருக்கின்ற தீர்வுத் திட்டத்திற்கும் அச்சொட்டாகப் பொருந்தக் கூடியதே. இவ்வகையில் வடக்கு, கிழக்கு முஸ்லிம்களைத் திருப்திப்படுத்தாததாகவும் ஏனைய மாகாண மக்களையும் உள்ளடக்குவதாகவும் அமைந்திருக்கின்ற இந்தத் தீர்வுத் திட்டமும் விரைவில் தோல்வியடையும் என்ற தர்க்கரீதியான முடிவுக்கு வரலாம்.



அப்போது நீங்கள் வடக்கு, கிழக்கு முஸ்லீம்களாகிய எங்களிடம் மீண்டும் வருவீர்கள். முஸ்லிம் சமூகத்தின் உரிமைகள் குறித்து உணர்ச்சி கொப்பளிக்கும் வார்த்தைகளை அள்ளி வீசுவீர்கள். எனினும் உங்கள் வார்த்தைகளில் ஏமாறக் கூடிய முஸ்லிம்கள் யாரும் அப்போது வடக்கு, கிழக்கில் இருக்க மாட்டார்கள் என்பதை நினைவில் வைத்திருங்கள்!

வடக்கு, கிழக்கு முஸ்லிம்களே! இன்று நாம் எமது அரசியல் வரலாற்றில் மிக முக்கியமான திருப்பத்தில் நிற்கிறோம். இந்தக் கட்டத்தில் கடந்த பத்தாண்டுகால எமது அரசியல் வாழ்வைத் திரும்பிப் பார்க்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கின்றது. சிங்களக் கட்சிகளினால் பிரிக்கப்பட்டு, முரண்பட்டு மோதிக் கொண்டிருந்த எம்மை முஸ்லீம் காங்கிரஸ் என்ற தனியான முஸ்லிம் அமைப்பில் ஒன்றிணைக்கச் செய்த உழைப்பு எது? சிங்களக் கட்சி சார்ந்த முஸ்லிம் அரசியல்வாதிகளின் பிடிக்குள் அகப்பட்டிருந்த நாம், அவர்களை ஒதுக்கித் தள்ளுவதற்குக் காரணமாக அமைந்த உணர்வு எது? எமக்கென சொந்த அரசியல் குறித்தே சிந்திக்க முடியாமல் தடுக்கப்பட்டிருந்த நாம், எமக்கென தனியான அரசியல் அதிகார அலகு உருவாக்கப்பட வேண்டும் என்று இப்போது உறுதியாகக் கோருகின்றோமே அந்த அளவுக்கு நாம் அரசியல் ரீதியாக முன்னேற்றமடைந்திருப்பதற்கு அடிப்படையாக அமைந்த உணர்வு எது? இவை அனைத்திற்கும் காரணம் 'எமக்கிடையே தோன்றிய தேசிய உணர்வு;

'நாம் ஒரு தனியான சமூகம், ஏனைய சமூகங்கள் போன்று, நாமும் சகல உரிமைகளும் பெற்று பாதுகாப்புடனும், கௌரவத்துடனும் வாழ்வதற்குத் தகுதி கொண்டவர்கள்' என்ற தேசிய உணர்வு. வடக்கு, கிழக்கிலுள்ள முழு முஸ்லிம்களும் ஒரேவகையான அரசியல் விதியினால் பிணைக்கப்பட்டிருக்கின்ற ஒரு தனியான தேசம் என்ற உணர்வுதான், எமக்கிடையே நிலவிய கட்சி வேறுபாடுகளையும், பிரதேச வேறுபாடுகளையும் கடந்து முஸ்லீம் காங்கிரசை ஆதரிக்கவும், எமக்கென தனியான அரசியல் அதிகார அலகைக் கோரவும் காரணமாக அமைந்தது. நாம் ஒரு தனியான தேசம் என்ற உணர்வும் அதன் அடிப்படையில் எமக்கிடையே தோன்றிய அரசியல் ஐக்கியமும்தான் எம்மை வெளியுலகிற்கு அறிமுகப்படுத்தவும் அரசியல் அரங்கில் முஸ்லீம் காங்கிரஸ் இவ்வளவு முக்கியத்துவம் பெறவும், ஏனைய கட்சிகளும் , உலகும் எமது அரசியல் குரலாக (SLME) ஐ ஏற்றுக் கொள்ளவும் காரணமாக அமைந்தது.

வடக்கு, கிழக்கு முஸ்லிம்களே! நாம் ஒரு தனியான தேசம் என்ற உண்மையைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். பத்து ஆண்டுகளுக்கு முன்பும் , நாம் இதே வாழிடங்களில் இதே பொருளாதாரத்துடன் இதே கலாசார அம்சங்களுடன் இதே மதத்துடன் இதே முஸ்லிம்களாகத்தான் வாழ்ந்தோம். ஆனால் அப்போது எமக்கிடையே ஏற்படாத அரசியல் ஒற்றுமையும், தனியான அரசியல் அதிகார அலகுக்கான கோரிக்கையும் இப்போது ஏற்பட்டமைக்குரிய காரணம் என்ன என்பது பற்றி நாம் உணர்வுபூர்வமாகவும், தெளிவாகவும் புரிந்து கொள்ள வேண்டும். இத்தகைய புரிதலைப் பெறுவதன் மூலமாகத்தான் எமது அரசியல் வாழ்வு குறித்து நாம் சரியான தீர்மானத்தைப் பெறுவது சாத்தியமாகும். 'நாம் ஒரேவகையான அரசியல் விதிக்குட்பட்டிருக்கின்ற தனியான தேசம்' என்ற உணர்வு எம்மத்தியில் தோன்றியதே, இம்மாற்றங்கள் ஏற்படுவதற்கான அடிப்படைக் காரணமாக அமைந்திருந்தது. ஒரு சமூகம், எப்போது தன்னை அரசியல் ரீதியாக ஒன்றிணைத்து, தனக்கென தனியான அரசியல் அதிகார அலகைக் கோருகின்றதோ அப்போதே அச்சமூகம் ஒரு தேசமாக மாறிவிடுகின்றது. இதன் பின்னர் இந்தத் தேசிய உணர்வை வளர்த்தெடுப்பதும் அதன் அடிப்படையில் மேலும் வலுவாக மக்களை ஒன்றிணைத்து அவர்களது தேசிய உரிமைகளை வென்றெடுப்பதுமே அம்மக்களின் அரசியல் தலைமைக்குரிய கடமையாகிவிடுகின்றது. இந்த அடிப்படையில் தான் நாம் முஸ்லீம் காங்கிரஸிற்கும் அதன் தலைமைக்கும் எங்கள் ஆதரவைத் தெரிவித்து வந்திருக்கின்றாம்.

எனினும் முஸ்லீம் காங்கிரஸின் தலைமை எமது தேசிய உரிமைகளுக்கும் நலன்களுக்கும் மாறாக செயற்பட்டு வருகின்றது. எமது தேசிய உரிமைகளை வென்றெடுப்பதற்கு பல்வேறு வழிகளிலும் உறுதியாகப் போராடுவதற்குப் பதிலாக, அவற்றைக் கைவிட்டு தனது சொந்த நலன்களை உயர்த்திக் கொள்கின்ற வழிகளில் செயற்பட்டு வந்திருந்தது. முஸ்லீம் காங்கிரஸின் தலைமை , வடக்கு, கிழக்கு முஸ்லிம்களின் உண்மையான தேசியத் தலைமையாக செயற்படுவதற்குப் பதிலாக, குறுகிய சுயநலம் கொண்ட சந்தர்ப்பவாத அரசியல் தலைமையாக மாறிவிட்டது. எமது தேச இருப்பைச் சிதைத்து எமக்கிடையே பிரிவினையை ஏற்படுத்தி, அதன் மூலம் போராடத் தேவையில்லாத ஒரு சுயநலத் தலைமையாக தன்னைத் தொடர்ந்தும் பேணிக் கொள்வதற்கும் முஸ்லீம் காங்கிரஸின் தலைமை முயற்சிக்கிறது. இதன் காரணமாகத்தான், இன்றைய அரசு முன்வைத்திருக்கின்ற, எமது தேசிய நலன்களுக்கு முற்றிலும் பாதகமாக அமைந்திருக்கின்ற ''தென்கிழக்கு மாகாணம்'' என்பதை ஏற்று அதன் மூலம் வடக்கு, கிழக்கு முஸ்லிம்களாகிய எம்மை என்றைக்குமாக அரசியல் ரீதியில் பிரிக்கவும், கூறு போடவும் முஸ்லீம் காங்கிரஸ் தலைமை முயற்சிக்கின்றது. 1985ம் ஆண்டுக்கு முன்னர் நாம் சமூக, அரசியல் ரீதியில் மோசமாகப் பின்னடைந்து இருந்தமைக்கு எமக்கிடையே நிலவிய கட்சி வேறுபாடுகளும், பிரதேச பிரிவினைகளும் தான் காரணம் என்பதைப் புரிந்து- கொள்வோமாயின், இப்போது எமக்கிடையே ஏற்படுத்தப்பட இருக்கின்ற அரசியல் ரீதியான பிரிவினையின் காரணமாக நாம் மீண்டும் அரசியல் அடிமைகளாக்கப்படுவது தவிர்க்க முடியாததாகி விடும் என்ற உண்மை புலப்படும்.

அன்று எமக்கிடையே பிரிவினையை ஏற்படுத்துவதற்கு சிங்களக் கட்சிகளில் இருந்த முஸ்லிம் அரசியல்வாதிகள் காரணமாக இருந்தார்கள். இன்று எமக்கிடையே பிளவு ஏற்படுவதற்கு முஸ்லீம் காங்கிரஸின் தலைமை முயற்சிக்கின்றது. இந்நிலையில், சிங்களக் கட்சிகளில் இருந்த முஸ்லிம் அரசியல்வாதிகளை ஒதுக்கித் தள்ளுவதற்கு, எம்மிடையே தோன்றிய தேசிய உணர்வு எப்படிக் காரணமாக அமைந்ததோ அதே தேசிய உணர்வை இன்னும் வலுவாகவும் , உறுதியாகவும் உயர்த்திப் பிடிப்பதன் மூலமாக இந்த முஸ்லீம் காங்கிரஸ் தலைமையையும் ஒதுக்கித் தள்ள வேண்டிய அவசியத்தில் இருக்கிறோம். இது சாத்தியப்பட முடியாத ஒன்றல்ல. ஒரு காலத்தில செல்வாக்கும், அரசியல் சக்தியுமிக்கவர்களாக தோற்றமளித்த, சிங்களக் கட்சிகள் சார்ந்த முஸ்லிம் அரசியல்வாதிகள் இன்று முக்கியத்துவம் அற்றவர்களாக மாற்றப்பட்டிருப்பது சாத்தியமாகியிருக்கின்றது என்றால், இன்று எமது ஆதரவின் காரணமாகவே ''சக்திமிக்கவர்களாகியிருக்கின்ற'' இந்த முஸ்லீம் காங்கிரஸ் தலைமையை நாளை அரசியல் சாக்கடைக்குள் உதைத்துத் தள்ளுவதும் எமக்குச் சாத்தியமே.

அரசியல் தலைமை என்பது நிலையான தொன்றல்ல; ஒரு சமூகத்தின் தேவைக்கும், சூழ்நிலைக்கும் ஏற்ப புதிய தலைமைகள் உருவாக்க்ப்பட்டுக் கொண்டேயிருக்கும்.

இப்போது வடக்கு, கிழக்கு முஸ்லிம்களாகிய எமக்குத் தேவைப்படுவது, தீர்க்கதரிசனமும், தேச உணர்வும் சமூக நேர்மையும் கொண்ட ஒரு புதிய தலைமை, ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் இருந்து அல்லாமல், வடக்கு, கிழக்கிலுள்ள முழு முஸ்லிம் பிரதேசங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடியதான, ஜனநாயகபூர்வமாக செயற்படக் கூடிய ஒரு கூட்டுத் தலைமை, எமது தேசிய உரிமைகளை வென்று தருவதை இலக்காகக் கொண்ட உண்மையான தேசியத் தலைமை. இத்தகைய தலைமையை உருவாக்குவதற்கு நாம் காலம் தாழ்த்தக் கூடாது.

அரசியல் தலைமை என்பது நிலையான தோன்றல்ல;
ஒரு சமூகத்தின் தேவைக்கும், சூழ்நிலைக்கும் ஏற்ப
புதிய தலைமைகள் உருவாக்கப்பட்டுக் கொண்டேயிருக்கும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## இலங்கை பாராளுமன்ற அரசியலில் பெண்கள்-9

# சமமொழி அந்தஸ்து கோரிய விவியனுக்கு 'யாழ்தேவி' என்று பட்டம் சூட்டினர் இனவாதிகள்!



**விவியன் குணவர்தன**

1956 ஆம் ஆண்டு தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட பெண் உறுப்பினர்களில் விவியன் குணவர்தன முக்கியமானவர்.

''இலங்கையின் இடதுசாரி அரசியலில் பங்கு பற்றிய பெண்களிலேயே தீப்பிளம்பு'' என விவியன் குணவர்தனவை அழைப்பர்.

விவியன் 'பொரளுகொட' பரம்பரையைச் சேர்ந்தவர். தகப்பனின் பெயர் டொன் லென்சன் குணதிலக்க, தாயின் பெயர் எமிலி எஞ்சலினா குணவர்தன. (இவர் அன்று லங்கா சமசமாஜக் கட்சியில் இருந்த பிலிப் குணவர்தன, ரொபட் குணவர்தன ஆகியோரது உடன்பிறந்த சகோதரி) விவியன் 1916 செப்டெம்பர் 18ம் திகதி பிறந்தார். தந்தை குணதிலக்க ஒரு வைத்தியர். விவியன் சிறுவயதில் தகப்பனுடன் சென்று நோயாளிகளைப் பார்த்து வருவதில் பிரியமுடையவர். கம்பஹ பெரிய ஆஸ்பத்திரி திறப்பு விழாவின் போது பிரதம அதிதியாக கலந்துகொண்ட அன்றைய தேசாதிபதி மனிங் பிரபுவின் மனைவியை வரவேற்க டொக்டர் குணதிலக்க சிறுமியான விவியனை ஏற்பாடு செய்திருந்தார்.

பிரதம அதிதிக்கு பூச்செண்டு கொடுத்து விவியன் வரவேற்கும் காட்சி கொண்ட புகைப்படம் விவியனின் வீட்டில் பல காலமாக தொங்கவிடப்பட்டிருந்தது.

**''எனக்கு விபரம் தெரியும் காலம் வந்த போது அந்த புகைப்படத்தை உடைத்து கிழித்து குப்பையில் வீசி எறிந்தேன். எனது தகப்பனார் வந்து ஏன் அப்படிச் செய்தாய் என்று கேட்ட போது ஏகாதிபத்திய பிரதிநிதியின் மனைவிக்கு பூச்செண்டு கொடுத்து வரவேற்றதற்காக நான் இன்று வெட்கப்படுகிறேன் என்றேன்.**

**எனது தகப்பன் ஆங்கிலேய விசுவாசி. அவருக்கு நான் செய்த காரியம் கோபத்தை உண்டு பண்ணியிருந்தது. எனது தந்தை எங்களுடன் சிங்களத்தில் கதைத்ததில்லை. அதேபோல் எனது தாய் ஆங்கிலத்தில் கதைத்ததில்லை. எனது தாய் தேசிய விடுதலையில் அக்கறையுடையவர்'' என்கிறார் விவியன்.**

தந்தை அரசாங்க வைத்தியராக இருந்த காரணத்தினால் பல இடங்களுக்கு மாற்றப்படுவார். எனவே விவியன் கொழும்பில் அவரது மாமனார்களான பிலிப் குணவர்தன, ரொபட் குணவர்தன ஆகியோரது அரவணைப்பில் கொழும்பு மியூசியஸ் பெண்கள் பாடசாலையில் விடுதியில் தங்கி கல்விகற்றார். பாடசாலை விடுமுறை தினங்களில் அவிஸ்ஸாவெல்லயில் இருந்த பிலிப்பின் வீட்டில் பொழுதை கழிப்பது வழக்கம். அங்கிருந்த மாக்ஸீய புத்தகங்களைப் படிக்கத் தொடங்கினார். மாமனார்களால் அரசியல் அறிவு புகுத்தப்பட்டார். இடதுசாரி சிந்தனைகளால் கவரப்பட்ட விவியன் இடதுசாரி அரசியலுக்கு பரிச்சயமாகத் தொடங்கினார்.

இதேவேளை முதலாம் உலகப்போரில் பாதிக்கப்பட்ட போர் வீரர்களின் நலன்களுக்காக ஆங்கிலேயர்களால் 'பொபி மல்' (பொபி மலர்) விற்கப்பட்டது. ஏகாதிபத்திய போருக்கு எங்களால் உடைந்தையாக முடியாது என அதனை எதிர்த்து இடதுசாரித் தலைவர்கள் 'சூரியமல்' இயக்கத்தை தோற்றுவித்து சூரியகாந்தி மலர் விற்றனர்.

ஒவ்வொரு வருடமும் யுத்தம் முடிந்து சமாதானம் ஏற்பட்ட நாளான நவம்பர் 11ம் திகதியன்று 'பொபிமல்' தினமாக கொண்டு முழு இலங்கையிலும் 5 நிமிட மௌனம் செலுத்தபபடும. பல பிரங்கி வேட்டுக்களும் தீர்க்கப்படும். சகலரும் தங்களது வேலைகளை நிறுத்தி இதில் பங்கு கொள்ள வேண்டும். விவியன் பாடசாலையில் மாணவத் தலைவியாக இருந்துகொண்டே 'சூரியமல்' இயக்கத்துக்காக பிரச்சாரம் செய்தார். பொபி மல் தினத்தன்று மௌனம் செலுத்தப்படும் நேரத்தில் தோழிகளோடு சேர்ந்து இசைக்கருவிகளை இசைத்து ஆர்ப்பாட்டம் புரிவார்.

'சூரியமல்' இயக்கத்தினூடாக அரசியலில் தீவிரமாக பங்குகொள்ள விவியன் உந்தப்பட்டார்.

**''நமது நாட்டை அந்நியர்களிடமிருந்து விடுவிக்க வேண்டும் என்ற கருத்து என்னிடம் வளரத் தொடங்கியது என்ற போதும் அன்று இந்நடவடிக்கைகளில் பெண்களின் பங்குபற்றல் என்பது குறைவாகவே இருந்தது. அன்றும் சரி இன்றும் சரி சமூகத்தில் பெண்கள் இரண்டாம்தர பாலினராகவே மதிக்கப்படுகிறார்கள். இன்னமும் பெண்களே வீட்டையும் பிள்ளைகளையும் கவனித்துக் கொண்டிருக்க வேண்டும் என்ற ஆணாதிக்க கருத்தே நிலைபெற்றிருக்கிறது. சூரியமல் இயக்கத்திலும் எங்களோடு இணைந்து ஈடுபட்ட பெண்கள் சொற்பமானவர்களே. ''நாட்டை விடுதலை செய்ய வேண்டுமானால் சூரியமல் வாங்குங்கள். ஏகாதிபத்திய எதிர்ப்பின் சின்னம் அது' என நாடெங்கும் பிரச்சாரம் செய்தோம்.''**



இவ்வரசியல் வேலைகள் விவியனின் தந்தைக்கு தெரியவந்த போது அவர் கண்டிப்பாக எதிர்த்தார். தனது சித்தி (பிலிப் குணவர்தனவின் சகோதரி) வெளியே செல்லும் போது அவருடன் வெளியில் போய் வருவதாகக் கூறி தந்தைக்குத் தெரியாமல் அரசியல் கூட்டங்களுக்கு போய் வருவார்.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் இலங்கை இடதுசாரிகள் அக்கறை கொண்டிருந்த அந்த நேரத்தில் இலங்கை வந்த கமலா தேவி சட்டோபாத்தியாய போன்றோரின் கூட்டங்களிலெல்லாம் கலந்து கொள்வார் விவியன்.

பாடசாலையில் பரீட்சையில் சித்தியடைந்த விவியனை மேற்படிப்புக்கு பல்கலைக்கழகம் அனுப்ப தந்தை அனுமதிக்கவில்லை என்ற போதும் அவர் லண்டன் பல்கலைக்கழகமொன்றில் பட்டதாரியானார். அதனை எவ்வளவு தூரம் இரகசியமாக செய்திருந்தார் என்றால்; பல்கலைக்கழக பரீட்சை முடிவு செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்டிருந்த போது அதில் தனது மகளும் சித்தியடைந்திருக்கும் செய்தி கண்ட பின் தான் தந்தைக்கே அது பற்றி தெரிந்தது.

தனது மாமனார்களோடு இணைந்து லங்கா சமசமாஜக் கட்சியில் சேர்ந்து வேலை செய்வதற்கு தந்தையிடம் அனுமதி கேட்டு அது தந்தையால் மறுக்கப்பட்டது, என்ற போதும் இரகசியமாக கட்சி வேலைகளில் ஈடுபட்டார். இந்த அரசியல் வேலைகளின் போது தான் கட்சியில் இயங்கிக் கொண்டிருந்த லெஸ்லி குணவர்தனவை சந்தித்தார். இருவரும் காதல் கொண்டனர்.

இந்த காதல் விவியனின் தந்தை குணதிலக்கவுக்கு தெரியவந்த போது கோபமடைந்தார். விவியன் வீட்டிலிருந்து வெளியில் செல்ல தடை விதிக்கப்பட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில் விவியன் - லெஸ்லி ஆகியோரை இணைத்து வைத்தது நீதிமன்றத் தீர்ப்பொன்றே. தனது காதலியான விவியன் குணதிலக்க வீட்டில் கைதியாக அடைத்து வைக்கப்பட்டிருக்கிறார் என்றும் அவரது எதிர்காலம் அதில் அடங்கியிருப்பதாகவும் ஹபியஸ் கோபஸ் வழக்கொன்றை லெஸ்லி குணவர்தன நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். லெஸ்லி குணவர்தன தரப்பில் வாதாடிய வழக்கறிஞர் பின்னாளில் இலங்கை ஜனாதிபதியாக ஆன ஜே.ஆர்.ஜெயவர்தன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

''உண்மையில் எனது தந்தை இதனை எதிர்க்க சாதிப் பிரச்சினையே முக்கிய காரணம். தந்தை கொவிகம சாதி, லெஸ்லி 'கராவ' சாதி. கொவிகமவை விட கராவ குறைந்த சாதி என்ற காரணத்தினாலேயே எனது தந்தை எதிர்த்தார். ஆனால் அதை கோர்ட்டில் சொல்ல முடியாதே. எனவே வேறுவிதமாக இதனை கையாள முயற்சித்தார்'' என்கிறார் விவியன்.

இந்த வழக்கின் போது டொக்டர் குணதிலக்க,

**''எனக்கு இன்னும் இரண்டு பிள்ளைகளுண்டு. எங்கள் குடும்பம் கோர்ட் வாசல் கூட மிதிக்காத குடும்பம் எனது குடும்பத்துக்கு இது பெரும் இழுக்கு''** என்றார்.

நீதிமன்றத்தில் லெஸ்லி,

**''நான் உங்களுக்கு சந்தர்ப்பமளித்திருந்தேனே, விவியனை அவரது மாமாவின் வீட்டுக்கு கொண்டு சென்று வைத்திருந்தீர்களாயின் 10 நாட்களின் பின் நான் முறையாக கூட்டிச் சென்றிருப்பேனே. அப்படிச் செய்திருந்தால் கோர்ட் போக வேண்டி அவசியமிருந்திருக்காதே''** என்றார்.

ஏன் இந்த திருமணத்தை எதிர்க்கிறீர்கள் என நீதிபதி கேட்ட போது திரு.குணதிலக்க,

**''எனது மகள் காதலிக்கும் நபர் தேசவிரோதக் கட்சியின் உறுப்பினர். லங்கா சமசமாஜக்கட்சி தேசவிரோதக் கட்சி எனப்பேசப்படும் ஒரு கட்சி. எனது மகள் அக்கட்சியைச் சேர்ந்த ஒருவரை கட்டினால் தேசவிரோத குற்றத்துக்கான தண்டனையை அவரும் அனுபவிக்க வேண்டிவரும். எனவே தான் எனது மக்களை அவருக்கு திருமணம் முடித்து வைக்கத் தயாரில்லை''** என்றார்.

**''எனக்கு கதைக்க சந்தர்ப்பம் வேண்டும் கோட்டார் அவர்களே. அவர் கூறும் தேசவிரோத கட்சியில் நானும் இரகசியமாக அங்கம் வகிக்கும் உறுப்பினர் என்பது என் தகப்பனாருக்குத் தெரியாது. எனவே ஒரு தேசவிரோத கட்சியொன்றின் உறுப்பினருக்கு கிடைக்கக்கூடிய அதே தண்டனை நானும் அனுபவிக்க வேண்டிய ஒன்றே''** என்றார் விவியன்.

**''நான் திரு.குணதிலக்கவை கண்டிக்கிறேன். வயதுக்கு வந்தவர்கள் தங்கள் விருப்பப்படி இணைவதற்கு உரிமையுண்டு. இவர்கள் இருவரும் பல காரணங்களால் ஒருமித்திருக்கும் போது ஏன் அவர்கள் இணைய தடுக்கிறீர்கள்''** என நீதிபதி கேட்டார்.



கோர்ட்டிலிருந்து வெளியேறிய குணதிலக்கவின் பின்னால் ஆசிர்வாதம் பெறுவதற்கு சென்ற போதும் அதனை உதாசீனம் செய்து விட்டு குணதிலக்க சென்றார்.

லெஸ்லி - விவியன் திருமணத்திற்கு நீதிமன்ற அனுமதி கிடைத்ததும் டொக்டர் குணதிலக்க நேராக ஏ.ஈ.குணசிங்க வெளியிட்ட 'சிங்க ஹண்ட' பத்திரிகை காரியாலயத்துக்கு சென்றார், ('சிங்க ஹண்ட' பத்திரிகை இடதுசாரிகளை எதிர்த்து பிரச்சாரம் செய்த பத்திரிகையாகவும் தொழிற்பட்டுக் கொண்டிருந்தது) அங்கு பிரசுரிக்கும்படி ஒரு அறிக்கையை கொடுத்தார்.

**''மாக்ஸிஸ்டுகள் என சொல்வோர் மூத்தவர்களது சொல்லை உதாசீனம் செய்யச் சொல்பவர்கள். அவர்களுக்கு எந்தவொரு ஆதரவையும் எவரும் வழங்காதீர்கள். அவர்கள் தேசத்துரோகிகள்''** என்ற தனது அறிக்கை வெளியிடப்பட்டிருந்த அப்பத்திரிகையில் 500 பிரதிகளை கொண்டு சென்று பொரளுகொட பிரதேசவாசிகளுக்கு இலவசமாக விநியோகித்தார்.

விவியனின் தனிப்பட்ட வாழ்க்கை கூட இப்படி ஆர்ப்பாட்டமாகவே இருந்தது.

விவியன் - லெஸ்லி திருமணம் 1939 ஜனவரி 30ம் திகதி நடந்தது.

விவியன் குணவர்தன 1956ல் பாராளுமன்றத்துக்குப் பிரவேசித்த போதும் 1950 தொடக்கம் கொழும்பு மாநகரசபை உறுப்பினராக இருந்திருக்கிறார்.

1952ம் ஆண்டு தேர்தலில் களனி தொகுதியில் போட்டியிட்ட போது அதே தொகுதியில் பிலிப் குணவர்தன, விமலா குணவர்தனவை நிறுத்தினார். (பிலிப் குணவர்தன லங்கா சமசமாஜக்கட்சியிலிருந்து முரண்பட்டுக் கொண்டிருந்த காலம் அது) எனவே அத்தொகுதியில் போட்டியிட்ட இரு பெண்களும் தோல்வியடைந்தனர். ஜே.ஆர். அத்தொகுதியில் வெற்றி பெற்றார்.

1956ம் ஆண்டு தேர்தலில் விவியன் வெற்றி பெற்றார். 1956ம் ஆண்டு தேர்தலில் பாராளுமன்றத்தில் தம்பதி ஜோடிகள் அங்கம் வகித்திருந்தனர். விவியன் - லெஸ்லி, மற்றும் பிலிப் - குசுமா ஆகியோரே அவர்கள். 1960ம் ஆண்டு மார்ச் மாத தேர்தலில் கொழும்பு வடக்கில் போட்டியிட்டு 844 வாக்குளாலும் 1960ம் ஆண்டு யூலை மாத பொதுத்தேர்தலில் 144 வாக்குளாலும் தோல்வியுற்றார் விவியன்.

இத்தேர்தலின் போது கொழும்பு வடக்கிலுள்ள பல கிறிஸ்தவ தேவாலயங்கள் இவருக்கெதிராக பிரச்சாரம் செய்திருந்தது.

**''விவியன் குணவர்தன எனும் மாக்ஸீயவாதிக்கு வாக்களித்தால் உங்களுக்கு நாங்கள் வழங்கும் சகாய நிதிகளை நிறுத்தி விடுவோம். இவர்களுக்கு மதமென்று ஒன்றும் கிடையாது. எவரும் அவருக்கு வாக்களிக்கக்கூடாது''.**

எனப்பிரச்சாரம் செய்திருந்தது. கொழும்பு வடக்கைச் சேர்ந்த கத்தோலிக்க தேவாலயங்களின் பிரச்சாரம் விவியனை தோல்வியுறச் செய்வதில் பெரும் பங்காற்றியிருந்தது என்றால் அது மிகையில்லை.

1956 மொழிப்பிரச்சினையின் போது தமிழ் - சிங்கள சமமொழி அந்தஸ்துக்காக போராடிய விவியனை **'யாழ்தேவி'** என சிங்கள இனவாத தரப்பினர் பட்டப்பெயர் சூட்டியிருந்தனர்.

1964ம் ஆண்டு ஜனவரிமாதம் பொரல்லையில் நடந்த இடைத்தேர்தலில் விவியன் குணவர்தன வெற்றி பெற்றார். 1965ம் ஆண்டு தேர்தல் வரையான குறுகிய காலம் பாராளுமன்றத்தில் அங்கம் வகித்ததுடன் அக்காலப் பகுதிக்குள் உள்ளூராட்சி மற்றும் வீடமைப்பு பிரதி அமைச்சராக பதவி வகித்தார். இலங்கையின் பாராளுமன்ற அரசியலில் முதற் பெண் பிரதி அமைச்சர் என்ற பெருமை விவியனைச் சேரும்.

1970ம் ஆண்டு தேர்தலில் தெஹிவளை, கல்கிஸ்ஸ தொகுதியில் போட்டியிட்டு 1967 மேலதிக வாக்குளால் வெற்றி பெற்றார்.

1977ம் ஆண்டு இரத்மலானை தொகுதியில் போட்டியிட்ட போதும் லலித் அத்துலத் முதலியினால் தோற்கடிக்கப்பட்டார். அதன்பின் அவர் எந்தத் தேர்தலிலும் பங்குபற்றவில்லை.

அரசியல் விமர்சகர்கள் பலர் கூறுவதைப் போல விவியன் தனிப்பட்ட வாழ்க்கையிலும் சரி, அரசியல் வாழ்க்கையிலும் சரி 'புரட்சிக்காரி'யாகவே இருந்திருக்கிறார்.

(விவியன் குணவர்தன பற்றிய பெரும்பாலான தகவல் 20-06-1995 அன்று அவருடனான உரையாடலின் போது பெறப்பட்டவை)

**வரும்**

**என்.சரவணன்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# விஜேவீரவுக்குப் பின்பு ஜே.வி.பிக்குள் என்ன நடக்கிறது?

கடந்த மூன்று வருடங்களில் ஏற்பட்ட முக்கியமான மாற்றங்களில் சில மக்கள் விடுதலை முன்னணி (JVP) மீதான நெருக்கடியைத் தணித்துள்ளன.

ஜனாதிபதி பிரேமதாசாவின் படுகொலையும் சந்திரிகா குமாரதுங்கவின் தேர்தல் வெற்றியும் இவற்றுள் முக்கியமானவை.

ஜே.வி.பி.யை மூர்க்கத்தனமாக அழித்தொழித்தமைக்கான பழியைப் பொதுமக்கள் இப்போதும் பிரேமதாசவிலேயே போடுகிறார்கள். அரசாங்கத்தின் கட்டளைகள் ஜனாதிபதியின் செயலகத்து மதில்களுக்கப்பால் செல்லுபடியற்றதாகி, ஜே.வி.பி. சாதாரணமான ஜனநாயக முறைகளூடாகத் தோற்கடிக்கப்பட முடியாத ஒரு நிலையில் ஜெனரல் ரஞ்சன் விஜேரத்னவின் பணிப்பிலும் வழிநடத்தலிலும் மரணப்படைகள் (Death Squads) சட்டத்துக்குப் புறம்பான வழியில் இயங்கின. விடுதலைப் புலிகளுக்கெதிரான யுத்தத்தில் ஒரு வீரனாகவே ரஞ்சன் விஜேரத்ன இன்றும் நினைவு கொள்ளப்படுகிறார்.

பிரேமதாசவின் படுகொலைக்குப் பிற்பாடு ஜனாதிபதியாகியவர் விஜேதுங்க. இவருடைய காலப்பகுதியில் ஜே.வி.பி. மறுபடியும் தன்னை மறுசீரமைத்துக் கொள்ள ஆரம்பித்தது. பலம் குன்றிய தலைவராக விஜேதுங்க இருந்தமையால் புலிகளையும் ஜே.வி.பியையும் தீர்க்கமாக எதிர்கொள்ளவோ அன்றி அவர்களை ஜனநாயக வழிக்குள் கவர்ந்திழுக்கவோ அவரால் முடியவில்லை.

சந்திரிகா குமாரதுங்காவின் வெற்றிக்கு ஜே.வி.பி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், அனுதாபிகள் அனைவரதும் பங்களிப்பு இருந்தது. குறிப்பாகத் தென்னிலங்கையில் இது பெரியளவில் இருந்தது. 1970 இலும் ஜே.வி.பி ஆதரவாளர்களும், உறுப்பினர்களும் ஐக்கிய முன்னணி அரசைப் பதவிக்குக் கொண்டுவர உதவினார்கள். எனினும் அப்போதைய பிரதமர் சிறிமா பண்டாரநாயக்கா ஜே.வி.பியை ஒடுக்க முற்படுவதாகக் குற்றம் சாட்டிக் கொண்டு ஐக்கிய முன்னணிக்கெதிராக 71இல் ஆயுதக் கிளர்ச்சியில் ஜே.வி.பி. ஈடுபட்டது. 1977 இலும் ஜே.வி.பியினர் ஐ. தே.கட்சிக்கு ஆதரவளித்தனர். எனினும் ஜே. ஆர் நியாயமற்ற முறையில் தம்மைத் தடை செய்து விட்டார் என்ற காரணத்தின் பேரில் பத்து வருடங்களுக்குப் பிறகு ஜே. ஆர் அரசாங்கத்துக்கு எதிராக கிளர்ச்சியில் ஈடுபட்டனர். 1987 இலங்கை இந்திய ஒப்பந்தம் இலங்கையின் நலன்களை இந்தியாவிடம் விற்றுவிட்டது என்பதும் ஜே.வி.பியினரின் இன்னொரு முக்கிய காரணமாகும்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா, விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் ஜே.வி.பிக்கெதிரான நீண்டகால குறுகியகால இராணுவ அரசியல் திட்டங்களை வகுக்க வேண்டியவராகவே உள்ளார்.

1970, 1977 தேர்தல் காலங்களைப் போலவே 1994 இலும் பாராளுமன்ற ஜனாதிபதித் தேர்தல்களின்போது ஜே.வி.பியிலிருந்து பிரிந்து சென்ற ஜனதா மித்துரு என்ற குழுவினரிடம் இருந்து சந்திரிகா குமாரதுங்காவுக்கு ஆதரவு கிடைத்தது. முன்னாள் பல்கலைக்கழக மாணவர் தலைவரான சம்பிக ரனவக்க ஜனதா மித்துருவின் தலைவர். சந்திரிகா குமாரதுங்காவின் ஜே.வி.பியுடனான தொடர்பு தந்திரோபாய ரீதியாக வலுவானது என்றாலும் மூல உபாய ரீதியாகப் பிழையானது. ஜே.வி.பி காலகட்டத்தின் போது பாதுகாப்புப் படையினர் ஈடுபட்ட அரச பயங்கரவாத நடவடிக்கைகளைத் துருவிப் புலனாய்வு செய்யும் நிலைக்கு அவர் தள்ளப்பட்டார். பாதுகாப்புப் படையினரிடையே இது மிகுந்த மனத்தாங்கலை ஏற்படுத்தியது. இதேநேரம் வடக்குக் கிழக்கில் மிகவும் பலமான ஒரு எதிரியையும் படையினர் எதிர் கொள்ள வேண்டியிருந்தது.

ஜே.வி.பி யினர் இப்பொழுது பல குழுக்களாக உருவாகியுள்ளனர். றோகண விஜேவீரவுக்குப் பிற்பாடு ஒரு உறுதியான தலைமைத்துவம் ஜே.வி.பிக்குக் கிடைக்கவில்லை என்பது உணரப்படுகிறது. அறுபதுகளின் பிற்பகுதியிலிருந்து விஜேவீர கட்டி எழுப்பிய பொது ஆதரவே அவருடைய ஆளுமை, கவர்ச்சி, தலைமைத்துவப் பண்புகள், காய் நகர்த்தல் திறமைகளைப் பற்றிப் பேசப் போதுமானவை. விஜேவீரவிற்குப் பின்பான ஜே.வி.பியில் மொத்தம் ஐந்து குழுக்கள் உள்ளன. ஜே.வி.பியின் 13 பேர் கொண்ட முன்னைய உயர் அதிகாரக்குழுவில்



இப்போது எஞ்சியிருப்பவர் சோமவங்ஸ அமரசிங்க மட்டுமே ஆவர். இவர்தான் இப்போதைய ஜே.வி.பியின் தலைவர் எனக் கொள்ளப்படுபவர். எனினும் 1978இல் தன்னுடைய லண்டன் பயணத்தின் போது விஜேவீர உருவாக்கியிருந்த 'கினிப்புப்புர' குழுவினர் சோமவன்ஸ அமரசிங்கவுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் காரணமாகப் பிரிந்தனர்.

ஜே.வி.பி அழிக்கப்பட்டபோது சோமவங்ஸ அமரசிங்க இலங்கையை விட்டு இந்தியாவுக்குத் தப்பி ஓடினார். இவர் தப்பி ஓடுவதற்கு இராணுவக் கப்டன் ஒருவரும் கடற்படையைச் சேர்ந்த பெண் உயர் அதிகாரியும் உதவி செய்தனர். இந்தியாவிலிருந்து பிரான்சுக்குச் செல்லும் வரையில் சோமவங்ஸ அமரசிங்கவுக்கு இந்திய உளவு சேவையான 'றோ' (Rsearch and Analysis Wing) தேவையான உதவிகளைச் செய்தது.

இப்பொழுது ஒரு அவுஸ்திரேலிய விலாசத்தைப் பயன்படுத்திக் கொண்டு ஜே.வி.பியை பரிஸ் நகரத்திலிருந்து இயக்கி வருகின்றார் சோமவங்ஸ அமரசிங்க. கினிப்புப்புர குழுவினர் இப்போது இரண்டாகப் பிரிந்து விட்டனர். இதில் பலமான ஒரு பிரிவுக்கு விஜேவீரவின் மைத்துனரான கிளரென்ஸ் பீரிஸ் தலைமை தாங்குகிறார். இவர்கள் 1994 பொதுத் தேர்தல்களின்போது அரசியல் கட்சியாகப் பதிவு பெற முயன்றனர். எனினும் அது வெற்றியளிக்கவில்லை.

சோமவன்ஸ அமரசிங்க பிரிவினர் ஆரிய புலேகொடவின் இலங்கை முற்போக்கு முன்னணி சார்பில் தேர்தல்களில் போட்டியிட்டு ஒரு தொகுதியில் வெற்றி பெற்றனர். பாராளுமன்றத்தில் இப்போது ஜே.வி.பிக்கு ஒரு உறுப்பினர் உள்ளார்.

இராணுவ ரீதியாகப் பலமிக்க ஒரு சக்தியாக ஜே.வி.பி இல்லாவிட்டாலும் அரசியல் வலிமை பெற்ற ஒரு சக்தியாகவே ஜே.வி.பி இன்னும் இருக்கிறது. 1994 தேர்தல்கள் இயக்கத்தை மீள ஒழுங்குபடுத்திக் கட்டியமைக்க ஜே.வி.பிக்கு ஒரு நல்ல வாய்ப்பை வழங்கியது. பொது முன்னணி ஆதவாளர்களிடையேயும் கணிசமான அளவு நட்பை இக்காலகட்டத்தில் ஜே.வி.பி சம்பாதித்துக் கொண்டது. இராணுவரீதியான பலத்தைப் பெற்றுக் கொள்ள ஜே.வி.பிக்குக் குறுகிய கால அவகாசமே போதுமானது.

சோமவன்ஸ அமரசிங்க பிரிவு, வீஜேவீர காலத்துப் பயங்கரத்தை இதுவரை கண்டிக்கவில்லை என்பது மட்டுமல்ல வன்முறையை இன்னும் கைவிட்டதாகத் தெரியவில்லை. முக்கியமான நிறுவனங்களை ஊடுருவுவதே ஜே.வி.பியின் இப்போதைய தந்திரோபாயம் என்று நம்பிக்கையாகத் தெரிய வருகிறது. இந்த நிறுவனங்களில் இராணுவம் மற்றும் காவல்துறை, அத்தியாவசிய சேவைகள், அரசியல் கட்சிகள், தொழிற் கட்சிகள், தொழிலாளர் நிறுவனங்கள், மத நிறுவனங்கள், மனித உரிமைகள் நிறுவனங்கள் மற்றும் மாணவர் சங்கங்களும் அடங்கும்.

நீடிக்கும் வடக்குக் கிழக்கு யுத்தம் 10,000க்கும் மேற்பட்ட படைவீரர்களைத் தமது வேலையை விட்டுத் தலைமறைவாகப் பண்ணியுள்ளது.

இப்போதுள்ள பாதுகாப்பு நிலைமைகளும், ஜே.வி.பியின் புதிய செயல்முறைகளும் ஜே.வி.பியின் மூன்றாவது எழுச்சிக்குத் தூண்டுகோலாக அமையலாம். இதற்குப் பொ. ஜ. ஐ. முன்னணியின் மேல் நம்பிக்கையிழந்து போனவர்களின் ஆதரவும் கிடைக்கக் கூடும்.

ஜே.வி.பியின் கருத்தியலும் நெருக்கடி நிலைகளை உருவாக்குவதற்காகக் காலத்துக்குக் காலம் மாறக்கூடியதொன்றாகவே இருந்து வந்துள்ளது. தன்னுடைய அரசியல் அடித்தளத்தைப் பலப்படுத்துவதற்காகத் தேசியப் பிரச்சினைகளை ஜே.வி.பி பயன்படுத்தி வந்துள்ளது. 60களின் பிற்பகுதியில் மாக்ஸியம், லெனினியம் மற்றும் மாஓ சிந்தனைகளின் கலப்பான ஒரு கருத்தியல் ஜே.வி.பியிடம் இருந்தது எனினும் 1980களின் நடுப்பகுதியிலிருந்து குறிப்பாக இந்தியப் படைகளின் இலங்கை வருகைக்குப் பிற்பாடு இந்திய எதிர்ப்பையும்,, சிங்கள இளைஞர்களின் காயம்பட்ட தேசபக்த உணர்வையும் ஜே.வி.பி தன்னுடைய வளர்ச்சிக்கு ஊக்கியாகப் பாவித்துக் கொண்டது. சிங்கள தேசியவாதக் கருத்தியலோடு ஜே.வி.பி மீண்டும் எழுச்சி பெறுவதற்கான சாத்தியப்பாடுகள் உள்ளனவா?

இல்லை என்று சொல்லிவிட முடியாது. இலங்கை அரசுக்கும் தமிழ்த் தீவிரவாதிகளுக்கும் இடையே அரசியல் தீர்வு தொடர்பாக இணக்கம் ஏற்பட்டால் ஜே.வி.பி மூலமான வன்முறைக்கும் குழப்பங்களுக்கும் சாத்தியம் உள்ளது.

ஜே.வி.பியின் கருத்தியல் பல கட்சிகள் கொண்ட ஒரு ஜனநாயக அமைப்பினுள் மக்கள் பலத்துடன் இயங்குவதுடன் ஒத்துப் போக முடியாது என்பதைத்தான் கடந்த கால அனுபவங்கள் காட்டுகின்றன. ஒரு தலைமறைவு இயக்கம் என்ற வகையில் ஜே.வி.பி பலமிக்க சக்தியாக வளரலாம். அத்தகையதொரு நிலைக்கு ஜே.வி.பி வளர்ந்து வருகிறது என்பதையே இன்றைய சூழல் சுட்டிக் காட்டுகின்றது.

றோஹான் குணரத்ன

**Sri Lanka the Lost Revolution?என்னும் றோஹான் குணரத்னவின் நூலின் புதிய பதிப்புக்கென எழுதப்பட்ட பின்னுரையின் தமிழாக்கமே இக் கட்டுரை.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மனித உரிமைகளுக்கு ஒரு இல்லம்

**1979** ஜூலையில் யாழ்ப்பாணத்தில் அவசரகால நிலை பிரகடனப் படுத்தப்பட்டது.'' ''மாட்டு வீரதுங்க'' (Bull Weeratunge) என்று அழைக்கப்பட்ட ஒரு இராணுவத் தளபதியை வடபகுதிப் பயங்கரவாதத்தை முற்றாக ஆறு மாதத்தில் அழித்து விட்டு வரும்படி அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தன வடக்குக்கு அனுப்பினார். ''மாட்டு'' வீரதுங்கவும் கடமையைச் சிரமேற்கொண்டு யாழ்ப்பாணம் சென்று அரச பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டார். இன்பம், செல்வம் போன்ற் பலரின் கொலையுடன் அப்பயங்கரவாதம் ஆரம்பமாகிற்று. (இது பற்றிய முழு விவரங்களும் இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கம் மும்மொழிகளிலும் வெளியிட்ட அவசரகாலநிலை 79 என்ற நூலில் உள்ளன).

இக்காலப்பகுதியில் தான் மனித உரிமைகள் இல்லம் (Home For Human Rights) யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகியது. வடபகுதியைப் பொறுத்தவரை முதன்முதலாகக் ''காணாமல் போன'' பாலேந்திரா தொடர்பாக மனித உரிமைகள் இல்லம் தனது பணிகளை ஆரம்பித்தது. Saturday Review மற்றும் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் (TRRO) ஆகிய வற்றின் நிறுவனர்களிலொருவரும் பின்னர் ஈழப்புரட்சி அமைப்பால் (EROS) கடத்திச்செல்லப்பட்டுக் கொலை செய்யப்பட்டவருமான க.கந்தசாமி, வழக்கறிஞர் இ. பிரான்சிஸ் சேவியர் யாழ் பல்கலைக்கழக முன்னாள் விரிவுரையாளர் சீலன் கதிர்காமர் ஆகியோர் மனித உரிமைகள் இல்லத்தின் உருவாக்கத்துக்காக ஆரம்பத்தில் முன்நின்று உழைத்தனர்.

இப்போது இ. பிரான்ஸில் சேவியர், வி. எஸ் கணேசலிங்கன் ஆகியோரது வழிநடத்தலில் இயங்கி வரும் மனித உரிமைகள் இல்லம் இதுவரை இருபதாயிரத்துக்கும் அதிகமான மனித உரிமை தொடர்பான வழக்குகளில் தன்னை ஈடுபடுத்தியுள்ளது. இலவச சட்ட உதவி, அடிப்படை உரிமைகள் மீறல் தொடர்பான வழக்குகள், காணாமல் போனோர் பற்றிய வழக்குகள் ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்வது போன்ற சட்டரீதியான எல்லா விஷயங்களிலும் பணிபுரிந்து வருகிறது மனித உரிமைகள் இல்லம்.

மனித உரிமைகள் இல்லம் 79 இல் தொடங்கப் பெற்றாலும் 81இல் தான் முற்று முழுதாக ஒரு நிறுவனமாகச் செயற்பட ஆரம்பித்தது. பிதா சிங்கராயர், களனிப் பல்கலைக்கழக விரிவுரையாளர் புல்சாரா லியனகே, மலையக மக்கள் முன்னணித் தலைவர்களில் ஒருவரான பீ. ஏ. காதர் மற்றும் 1987இல் அரசைக் கவிழ்க்கச் சதி செய்வதாக்க கூறிக் கைது செய்யப்பட்ட ''விகல்ப கண்டாயம'' என்ற குழுவினர் ஆகியோருக்கான சட்ட உதவிகளை முன் நின்று செய்தோர் மனித உரிமைகள் இல்லத்தினரே என்பதை இங்கு குறிப்பிட வேண்டும்.

ஜூலை 83 வெலிக்கடைச் சிறைப் படுகொலைகள் பற்றிய வழக்கு 85 இல் ஆரம்பமானபோது சிவில் உரிமைகள் இயக்கமும் (CRM) மனித உரிமைகள் இல்லமும் படுகொலை செய்யப்பட்டவர்களின் தரப்பில் நீதிமன்றத்தில் வாதிட்டனர். கிட்டத்தட்ட பத்து வருடங்களாக இழுத்தடிக்கப்பட்ட இவ் வழக்கில்; இறுதியாகப் படுகொலை செய்யப்பட்ட போராளிகளுக்கு நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என்று தீர்ப்பளிக்கப் பட்டது.



பிரான்ஸிஸ் சேவியர்

இவ்வழக்கு நடந்து பத்து வருடங்களில் இலங்கையின் புகழ்பெற்ற வழக்கறிஞர்களான நடேசன், சாம் கதிர்காமர் ,நிமால் சேனநாயக்க, ஜோர்ஜ் கந்தப்பா, இப்போது வெளிநாட்டமைச்சராக இருக்கும் லக்ஷ்மன் கதிர்காமர் போன்றோர் படுகொலை செய்யப்பட்ட போராளிகளின் சார்பில் ஆஜராகியிருந்தனர். மனித உரிமைகள் இல்லத்தின் பணிப்பாளர் வி.எஸ்.கணேசலிங்கம் அவர்கள், மனித உரிமைகள் இல்லத்தின் நிறுவனர் இ.பிரான்ஸில் சேவியர் அவர்கள்.

1990 ஜூன் மாதத்துக்குப் பிற்பாடு மட்டும் ''காணாமல் போன'' நாலாயிரம் பேர்களுடைய மனித உரிமை மீறல் வழக்குகளை மனித உரிமைகள் இல்லத்தினர் பொறுப்பேற்றிருந்தனர். காணாமல் போனவர்களுள் வவுனியாவிலிருந்து காணாமல் போன 231 பேரும் யாழ்ப்பாணத்திலிருந்து 168 பேரும் மன்னாரிலிருந்து 203 பேரும் திருகோணமலையிலிருந்து 490 பேரும் மட்டக்களப்பிலிருந்து 1,066 பேரும் அம்பாறையிலிருந்து 771 பேரும் அடங்குவர். இவர்களைவிட மலையகத்திலிருந்து காணாமல் போனவர்களின் 40 சிங்கள இளைஞர்களது வழக்குகளுக்கும் மனித உரிமைகள் இல்லமே பொறுப்பாக இருந்தது.

93,94ஆம் ஆண்டுகளில் மட்டுமே 143 ஆட்கொணர்வு மனுக்களும் 162 அடிப்படை உரிமைகள் மீறல் வழக்குகளும் மனித உரிமைகள் இல்லத்தினூடாகத் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. 93-94 காலப்பகுதியில் பயங்கரவாதத்தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களுடைய 192 வழக்குகளை மனித உரிமைகள் இல்லம் பொறுப்பேற்றிருந்தது. இந்தத் தகவல்கள் மனித உரிமைகள் இல்லத்தின் கட்டுக்கோப்பானதும் உடனடியாக உதவுவதுமான பணிகளைக் காட்டுகிற அதேவேளை இலங்கையில் மனித உரிமைகள் மீறல் இன்னும் பயங்கரமான நிலையில் இருப்பதையே காட்டுகிறது.

79ஆம் ஆண்டிலிருந்து ஐ. நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு இலங்கையின் மனித உரிமைகள் மீறல் பற்றி அறிக்கைகள் சமர்ப்பித்து வந்ததோடு 83 கலவரங்களுக்குப் பிற்பாடு மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பாக இலங்கை அரசைக் கண்டிக்கும் தீர்மானம் ஒன்று ஐ. நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவால் நிறைவேற்றப்படக் காரணமாகவும் விளங்கியவர்கள் மனித உரிமைகள் இல்லத்தினர்.

''நெருக்கடியும் ஆபத்துக்களும் நிறைந்ததுதான் மனித உரிமைகள் தொடர்பான பணி என்றாலும் கடந்த பதினாறு வருட அனுபவங்கள் எத்தகைய சிக்கல் எழுந்தாலும் தொடர்ந்தும் பணி புரிய வேண்டிய தேவையினையும் கடப்பாட்டையும் எம்முள் பலப்படுத்தியுள்ளன''என்று தெரிவிக்கிறார் இல்லத்தின் மூலவர்களில் ஒருவரான வழக்கறிஞர் இ. பிரான்ஸிஸ் சேவியர் அவர்கள்.

''தமிழ் மக்கள் மட்டுமல்ல ஏராளமான சிங்கள முஸ்லிம் மக்களும் எங்களுடைய இலவச சட்ட உதவித் திட்டத்தின் மூலம் பயன் பெறுகிறார்கள். அனுராதபுரம், கல்பிட்டி, திருக்கோணமலை, சிலாபம் போன்ற பல்வேறு இடங்களிலிருந்தும் சிங்கள, முஸ்லிம், தமிழ் மக்களிடமிருந்து சட்ட உதவி கோரி எமக்கு அழைப்புக்கள் வருகின்றன. எம்மால் இயன்ற அளவு விரைவாக அவர்களுக்கு உதவுகிறோம்'' என்று சேவியர் அவர்கள் மேலும் தெரிவிக்கிறார்.

ஆர்வமும் கடப்பாடும் கொண்ட பல இளம் சட்டத்தரணிகள் மனித உரிமைகள் இல்லத்தில் பணி புரிகின்றனர். அடிப்படை உரிமைகள் மீறல் காணாமற் போனோர், மற்றும் இலவச சட்ட உதவிகள் தேவைப் படும் எவரும் துணிந்து மனித உரிமைகள் இல்லத்தை நாடலாம்.

**-துடியன்-**



கணேசலிங்கம்

# பயங்கரவாதத் தடைச் சட்டம் எனும் பயங்கரம்

அண்மைக்காலங்களில் மலையகத்தைச் சார்ந்தவர்கள் பொலிசாரினால் அடிக்கடி கைது செய்யப்பட்டு வருகின்றார்கள். சிலர் தோட்டங்களிலிருந்தும் வேறுசிலர் வேலைத் தளங்களிலிருந்தும், கடைகள் பொது உணவு விடுதிகளிலிருந்தும் கைதாகின்றனர். தலைநகரிலும், வேறு நகரங்களிலிருந்தும் தொழில் புரியும் இளைஞர்கள் மலையகத்தைச் சார்ந்தவர்கள் என்ற ஒரே காரணத்துக்காகக் கைது செய்யப்படுகின்றனர். பாதுகாப்புப் படையினருக்கும் புலிகளுக்கும் இடையில் மோதல்கள் இடம் பெறும் போது மலையகப் பகுதியில் வாழ்பவர்கள் பாதிப்புக்குள்ளாகின்றனர். இந்நிலை முன்னைய ஆட்சிக்காலத்தில் காணப்பட்டதுடன், தற்போதைய ஆட்சியிலும் நீடித்து வருகின்றது.

வழமையாக, யாராவது கைது செய்யப்படுவாராயின் குற்றவியல் சட்டக் கோவைக்கமைய கைது செய்யப் படல் வேண்டும், பொலிசார் மலையகத்தைச் சார்ந்தவர்களைக் கைது செய்யும் போதும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ்க் கைது செய்கின்றனர். இச் சட்டத்தின் பயங்கரத் தன்மை பற்றி ஞாபகப்படுத்தவே பயங்கரவாதத் தடை சட்டம் 1979ம் ஆண்டு பயங்கரவாத நடவடிக்கைகள் குறித்து உருவாக்கப்பட்ட விசேட சட்ட மூலமாகும்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ்க் குற்றங்களுக்கான தண்டனை ஆயுள் தண்டனையாகவும் ஒரு குறித்த கால எல்லைக்குட்பட்ட 20 வருடங்களுக்கு மேற்படாத அதேசமயம் 5 வருடத்திற்கு குறையாத சிறைத் தண்டனையாகவும் இருக்கலாம்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் அமுலாக்கப்பட முன்பாக மேற்கூறப்பட்ட குற்றங்களுக்குத் தண்டனை வழங்குவதற்குச் சட்டங்கள் இருந்தன. ஆனால் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் குற்றவாளிக்குத் தண்டனை வழங்குவதுடன், அக்குற்றவாளியின் சொத்துக்களை அரசுடைமையாக்குவதற்கும் இச் சட்டம் வழிசெய்கிறது.

இச்சட்டத்தின் கீழ் இழைக்கப்பட்ட குற்றத்தைப் பற்றிப் பொலிசாருக்கு அறிவிக்காமல் இருப்பது குற்றமாகக் கணிக்கப்படுகின்றது. அத்துடன் அவ்வாறான குற்றத்திற்கு ஆகக் கூடிய தண்டனை 7 வருட சிறைத் தண்டனையாகும்.

வழமையான சட்டத்தின் கீழ் ஒரு நபர் கைது செய்யப்பட்டால் 24 மணித்தியாலங்களுக்குள் நீதிபதியொருவர் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட வேண்டும். ஆனால் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் ஒருவர் கைதானால் அவர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படாமல் தொடர்ந்து பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்படலாம். எனினும் 72 மணித்தியாலங்களுக்குள் ஒரு நீதிபதிமுன் அவர் ஆஜர் செய்யப்பட வேண்டும்.

மேற்கூறப்பட்ட காலத்துக்கப்பால ஒரு நபரை பொலிஸ் நிலையத்தில் வைத்திருக்க வேண்டுமானால் தடையாணை பெறப்பட வேண்டும். சம்பந்தப்பட்ட அமைச்சரின் கட்டளைக் கமைய மூன்று மாத காலத்துக்கு ஒருவரை தடுப்புக் காவலில் வைத்திருக்க முடியும். ஆனால் அக்காலகட்டம் 18 மாதங்களுக்கு மேல் அதிகரிக்க முடியாது. யாராவது ஒரு நபர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் ஒரு குற்றத்தை இழைத்தவர் எனக் கருதப்பட்டால் சம்பந்தப் பட்ட அமைச்சர் அவரைத் தனது ஆலோசனையின் பெயரில் தடுத்து வைக்க முடியும்.

இச்சட்டம் அமுலுக்கு வந்த சமயம், இச்சட்டத்தின் கீழ் சம்பந்தப்பட்ட அமைச்சரினால் பிறப்பிக்கப்பட்ட கட்டளை நீதிமன்றத்தில் விவாதிக்கப்பட முடியாது. ஆனாலும் சட்ட தீர்ப்புகள் இந்நிலையை மாற்றியுள்ளன.

நீதிமன்றத்தில் ஒருவர் சாட்சியளிக்கும் போது அவர் எவ்வாறு சாட்சியளிக்க வேண்டும் என்பதை சாட்சிச் சட்டக் கோவை விளக்குகிறது. (Evidence Ordinance) வழமையான சட்ட்த்தின் கீழ் குற்றஞ் சாட்டப்பட்ட ஒரு நபருக்கு, ஒரு சில உரிமைகளைச் சட்டம் வழங்கிய போதும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் இவ்வாறான நிலை கிடையாது. வழமையான சட்டத்தின் கீழ் குற்றவாளி பொலிசாருக்கு வாக்குமூலம் கொடுக்கும் போது தான் குற்றம் புரிந்ததாக வெளிப்படுத்து... எந்தவொரு வாக்குமூலத்தையும் சாட்சியத்தில் பெற முடியாது. ஆனால் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் பொலிசாரால் பலவந்தமாகப் பெறப்படும் எந்தவொரு வாக்கு மூலமும் சாட்சியமாகப் பயன்படுத்தப்படலாம்.

அவசரகால நிலை நடைமுறையில் இருந்தாலும், இல்லாவிடினும் பயங்கரவாதச் சட்டத்தை அமுலாக்க முடியும்.

பொலிசாரால் கைது செய்யப்பட்டவர்களின் பெற்றோர்களுக்கோ, உறவினர்களுக்கோ, எக்காரணத்தினால் இவர்கள் கைது செய்யப்பட்டார்கள் என அறிய முடியாத நிலை உண்டு. எமது அரசியல் யாப்புக்கிணங்க கைது செய்யப்பட்ட நபருக்குத் தான் கைது செய்யப்பட்ட காரணத்தை அறிய உரிமை உண்டு. ஆனால் நடைமுறையில் இவ்வாறு நடப்பதில்லை.

கைதான ஒரு நபரின் பெற்றோருக்கோ, உறவினர்களுக்கோ கைதாகிய நபர் எங்கு தடுத்து வைக்கப் பட்டுள்ளார் என்பதை அறிய முடியாமல் இருக்கின்றது.

அவசரகாலச் சட்டம் நடைமுறையில் இருக்கும் போது பொலிஸ்மா அதிபர், பிரதி பொலிஸ் மா அதிபர், பொலிஸ் அத்தியட்சகர், அல்லது உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோரால் கைதான நபர் தடுத்து வைககப்பட்டிருக்கும் இடம் அவர்களால் தீர்மானிக்கப்பட வேண்டும்.

கைது செய்யும் நபரின் அடையாளம் பற்றி கைது செய்யப்படும் நபரோ, அல்லது அவரின் பெற்றோர், உறவினரோ விசாரணை செய்தால், கைது செய்பவரின் அடையாளம் காணப்பட வேண்டும். அவ்வாறு கைது செய்யப்படும் நபருக்குத் தான் கைது செய்யப்படும் காரணத்தையும் கைதான நபர் கேட்கும் பட்சத்தில் தன்னுடைய அடையாளம் அடங்கிய விபரங்களை எழுத்தில், கைது செய்த திகதி, நேரம், இடம், கைது செய்யும் நபரின் பெயர், பதவி கைதான நபர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் இடம் அடங்கிய விபரங்கள் எழுத்தில் கொடுக்கப்பட வேண்டும்.

பலர் அனாவசியமாகத் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருப்பதுடன், அவர்களுக்கெதிராக எவ்வகையான குற்றச் சாட்டுக்களும் சுமத்தப்படாமல் வருடக்கணக்காகக் காத்திருக்கிறார்கள்.

சட்டமா அதிபர் கைதானவர்களுக்கு எதிராகக் குற்றப் பத்திரிகைகளை தாக்கல் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதும் பெரும் தாமதப் பட்டுத்தான் இடம் பெறுகிறது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ்க் கைதானவர் சம்பந்தமாக ஆலோசனை செய்து மேல் நடவடிக்கை எடுப்பதற்கு ஆலோசனைச் சபை ஒன்று இயங்குமென்பது சொல்லப்பட்டாலும் கூட நடைமுறையில் இப்படியொரு ஆலோசனைச் சபை இயங்குவதில்லை.

**ஏ. பி. கணபதிப்பிள்ளை**
**சட்டத்தரணி, நுவரெலியா**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**யாழ்ப்பாணப் பல்கலைக் கழக, உள மருத்துவத்துறைத் தலைவர் பேராசிரியர் தயா சோமசுந்தரம் அவர்கள் வட புலத்து மக்களின் உளநலம் பற்றி, ஆனி மாதம் 1993இல் சமர்ப்பித்த அறிக்கையின் சாராம்சத்தை இங்கு வெளியிடுகிறோம்.**

**யுத்தத்தின் விளைவாகக் குழந்தைகள், முதியோர் மற்றும் பொதுமக்களின் உளநிலையில் ஏற்படும் தாக்கங்கள், மனவடு (Trauma) போன்றவை வடபுலத்துச் சமூகத்தில் எவ்வகையான விளைவுகளை ஏற்படுத்துகின்றன என்பது பற்றிய சிரிய சிந்தனையே பேராசிரியர் சோமசுந்தரத்தின் ஆய்வறிக்கையாகும்.**

ஆ-ர்.

# யுத்தத்தின் இன்னொரு முகம்

மனநோய் பற்றிய களங்கமனப் பான்மையால் புறக்கணிக்கப்பட்டு, விலக்கி, கதைக்காமல் வைக்கப் பட்டிருந்த ஒரு விஷயத்தை இன்று நாம் ஒன்று கூடி ஆராய்வதாய் இருந்தால், அது எங்கள் வரலாற்றிலே ஒரு முக்கிய மைல்கல் என்றே கருதவேண்டி உள்ளது. இவ்வாறு செயற்படக்கூடிய நிலைக்கு வளர்ந்திருப்பதன் காரணம் எங்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கும் உளவியல் விழிப்புணர்வும் மனப்பாதிப்புகளை ஏற்கும் மனப்பான்மையும் என்று கூறலாம். மேலும் இக்காலத்தில் போர் அனர்த்தங்கள் தோற்றுவிக்கும் உளப்பிரச்சினைகள் சமூக மட்டத்திலும் வேலைத்தளங்களிலும் எமது உறவினர் குடும்பங்கள் மத்தியிலும், ஏன் எங்கள் அன்றாட வாழ்க்கையிலும் விளைவுகளை உருவாக்கி வருவதை நாங்கள் நேரடியாகக் கண்டு அனுபவிக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகியுள்ளோம். ஆகவே மனப்பாதிப்புகளைப் பற்றி உணரத் தொடங்குவது காலத்தின் இயல்பு எனலாம்.

இப்பிரதேசத்தில் தற்போது நிலவும் உளசுகாதார தேவைகளை ஆராய்ந்து பார்த்தால் அதை இருமுக்கிய பகுதிகளாக வகுக்கலாம். முதலாவதாக எல்லாக் காலங்களிலும் பொதுவாக நிகழும் மனநோய்களும் அவற்றுக்கான சிகிச்சையும். இரண்டாவதாக, சமகாலத்துப் போர்சூழலால் ஏற்பட்ட உளத்தாக்கங்களும் அவற்றுக்கான பரிகாரமும். இதில் இரண்டாவதாகக் குறிப்பிட்ட யுத்த நெருக்கீடுகளும் அவை மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் விளைவுகளையும் பற்றிய விடயம் உலகளாவிய ரீதியில் மருத்துவ சமூக நிபுணர்களால் உணரப்பட்டு வருகின்றது.

உளமருத்துவப் பேராசிரியர் ரஃபேல் (Raphael) அனர்த்தங்களை விளக்கும் போதனா நூலில் குறிப்பிடுகின்றார்: கூடிய மரணங்களும், அழிவுகளும், இழப்புகளும், துயரமும், இடம்பெயர்வும், மீளக்குடியமர்த்தலும் மனிதனால் உருவாக்கப்படும் பேரனர்த்தமான போராலே நிகழ்கின்றன. மனிதன் மனிதனைக் கொல்லுவது, அது நேரடிச் சண்டையிலோ அல்லது பயங்கரநவீன ஆயுதங்கள் மூலமாக நடந்தாலும் கொடூரமான அங்கவீனப்படுத்தும் காயங்களையும், எதிர்பாராத அகால மரணங்களையும் ஏற்படுத்துகின்றன. இவ்வாறான திடீர் இறப்புக்களால் ஏற்படும் துயரங்கள் குணமடைவதற்கு ஏதுவான உளவளத்துணை உதவியோ, கலாசார சடங்குகளின் ஆதரவோ கிடைப்பது அரிது. அதைத் தவிர போரானது சொந்த வீடுகளையும், வதிவிடங்களையும் வேலை வாய்ப்புகளையும், அப்பாவி பொதுமக்களின் உயிர்களையும் அழிக்கின்றது.''

ஆகவே எமது பிரதேசத்திலும் போரானது பாரிய உளப்பிரச்சினைகளை மக்கள் மத்தியில் உருவாக்கியிருப்பது வியப்பில்லை. பாமர மக்களை மட்டுமல்லாமல் போர் புரிபவர்களில் கூட பல உள எதிர் தாக்கங்களை ஏற்படுவதை ஆய்வுகள் நிரூபித்துள்ளன. உண்மையில் அனர்த்தங்களுக்குப்பின் தோன்றும் கோளாறுகள் பற்றிய விளக்கமும் சிகிச்சை முறைகளும் முதலாம் மகாயுத்தத்தில் தொடங்கி நடந்து வரும் போர்களில் பங்குபற்றிய இராணுவத்தினரை அவதானித்து, ஆராய்ந்ததன் மூலம் அறிய வந்துள்ளன. நெருக்கீட்டுக்குப் பின்னான மன வடுநோய் இதில் குறிப்பிடத்தக்கதாகும். (Post -Traumatic stress Disease). இவ்வாறான உளப்பிரச்சினைகளைப் பரவலாக பலதரப்பட்ட மக்களில் சிறுவர் தொடக்கம் வயோதிபர் வரை வெவ்வேறு கோணங்களில் பிரதிபலித்திருப்பதை இங்கே நடத்தப்பட்ட பல ஆய்வுகள் அறியத் தந்துள்ளன. உதாரணமாக, நித்திரை குழப்பம், உறவுகளில் சச்சரவு, குடும்பத் தகராறு, செயலாற்றலில் குன்றல், அவநம்பிக்கை, மனச்சோர்வு, உளம்சார் உடல் நோய்கள் மதுத் துர்ப்பாவனை, தற்கொலை முயற்சி போன்ற பலவித மான நடத்தைகள் பலராலும் வெளிக்காட்டப்படுகின்றன. ஆகவே சமூக நலனில் அக்கறை கொண்ட சகலரும் இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் எதிர்கொள்ள வேண்டிய முறைகளை ஆராய்ந்து திட்டமிட்டு நடைமுறைப்படுத்தல் அவசிய மாகும்.

இக்கொடிய போரின் ஆரம்பத்துடன் உளநலச் சேவைகளிலும் பலபின்னடைவுகள் ஏற்பட்டன. இன்றைய நிலையில் வடபிராந்தியத்தில் மொத்த சனத்தொகையான 13 லட்சத்து 15ஆயிரத்து 401 பேருக்கு யாழ் பல்கலைக்கழக மனநோய் பீட நிபுணர் ஒருவரே சேவையாற்றுகிறார். கடந்த பத்தாண்டுகளாக மட்டக்களப்பில் மனநோய் பிரிவுக்கு மனோவைத்தியர் இல்லை. தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலை போர் காரணத்தால் இடம்பெயர்ந்து மூன்று வருடத்திற்கு மேலாக மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த வைத்திய சாலையில் (Green Memorial Hospital) இயங்கி வருகின்றது. இக்கட்டான சூழ்நிலையில் சமூக களங்க மனப்பான்மையையும் பொருட்படுத்தாது எமது மனநோயாளருக்கு தஞ்சம் கொடுத்ததற்கு இவர்களுக்கு நாமும் எமது சமூகமும் எப்பொழுதும் நன்றியுடையவர்களாக இருக்கின்றோம். இது தமிழ்ப் பிரதேசத்தில் முன்னோடியாகத் திகழ்ந்த சரித்திரப் புகழ் மிக்க வைத்தியசாலை என்பது குறிப்பிடத்தக்கது. நாம் தெல்லிப்பழையில் இருந்து வெளியேறும் போது பெறுமதி வாய்ந்த உபகரணங்கள் கட்டில்கள், தொழில்வழி சிகிச்சைப் நிலையப் பொருட்கள் என்பவற்றை இழக்க நேரிட்டது. மேலும் வட பிராந்தியத்தில் நீண்ட காலமாக நிலவும் உளவைத்திய அதிகாரிகளின் வெற்றிடங்கள் இன்றுவரை நிரப்பப்படவில்லை. இவ்வெற்றிடங்களைச் சில தொண்டர்கள் மூலம் நிரப்பி வருகின்றோம். குவேக்கர்கள் (Quakers) அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் (TRRO) போன்ற சில அரச சார்பற்ற நிறுவனங்கள் இதற்கு ஓரளவு உதவியளிக்கின்றன. பல அத்தியாவசிய மருந்துகளுக்கும் பற்றாக்குறை நிலவுகின்றது.

உளநோயாளர்களின் சிகிச்சையினை முகாமைப்படுத்தி வழிநடத்தும் சிகிச்சைக் குழுவின் முக்கிய உறுப்பினர்களான உள மருத்துவ சமூக சேவையாளர்கள், தொழில் வழிச் சிகிச்சையாளர்கள், விசேட பயிற்சி பெற்ற தாதியர்கள் ஆகியோர் நீண்ட காலமாக எமது மனோவைத்தியப் பகுதிக்கு நியமனம் பெறவில்லை.

இவ்வாறான பல குறைபாடுகளுக்கும் நெருக்கடிகளுக்கும் மத்தியில் சுகாதார சேவைகள் தொடர்ந்து இயங்கி வருகின்றன. இதை உள், வெளி நோயாளர் பகுதிக்கு வந்து சிகிச்சைப் பெற்றுப் போகும் நோயாளரின் தொகை தொடர்ந்து குறையாமல் மறுதலையாக அண்மைக்காலத்தில் அதிகரித்துக் கொண்டு போவதிலிருந்து கண்டுகொள்ளலாம். கடந்த காலத்தில் போக்குவரத்து தடைகள் மனநோயாளருக்கு ஒரு முக்கிய பிரச்சினையாக - குறிப்பாக யாழ் குடா நாட்டுக்கு வெளியில் வசிப்போருக்கு, இங்கு சிகிச்சை வருவது மிக ஆபத்தான சிக்கலான செலவான விடயமாக இருந்தது. தற்காலிக அமைதியுடன் போக்குவரத்து சற்று சீராகியதைத் தொடர்ந்து, வெளி மாவட்டங்களிலிருந்து சிகிச்சைக்காக வெளிவருபவரின் தொகை கணிசமான அளவு அதிகரித்தது குறிப்பிடத்தக்கது.



தயா சோமசுந்தரம்

### உளப்பிளவு நோய் (Schizophrenia)

சனத்தொகையின் ஒரு சதவீதமான மக்களைப் பிடிக்கும் இந்நோயானது இளம்பராயத்தில் உருவாகி வாழ் நாள் முழுவதும் நீடிப்பதனால் இதற்கான உடனடிச் சிகிச்சையும், வெளி நோயாளர் பிரிவில் அதன் நீண்ட காலப் பராமரிப்பும் உள சுகாதார சேவைகளின் முக்கிய பிரச்சினையாக இருந்து வருகின்றன. இங்கே மட்டுமல்ல உலகளாவிய ரீதியிலும் இதுவே நிலை. உளப்பிளவு நோய் தமிழரில் கூடுதலாக காணப்படுவதாக ஆய்வுகள் கூறுகின்றன.

உளப்பிளவு நோய்க்கான தொடர்ச் சிகிச்சையும் புனர்வாழ்வு நடவடிக்கைகளும் இங்கே நிலவும் வசதிக் குறைபாடு காரணமாக மிகவும் கடினமானதாக இருக்கின்றன. யாழ்ப்பாணத்தில் காணப்படும் உளமருத்துவ உள்ளகப் பிரிவுகளுடன் குறுகிய காலச் சிகிச்சைக்காகவே ஆக்கப்பட்டிருப்பினும் தற்போதைய போக்குவரத்துத் தடைகள் மற்றைய கஸ்டங்கள் முதலியவற்றை கருத்தில் எடுத்து நீண்ட காலச் சிகிச்சையும் இங்கே உள்ளகப்பிரிவில் மேற்கொள்ளப்படுகின்றது. வட இலங்கையில் மனநோயாளர்களின் நீண்ட காலப் பராமரிப்புக்கான நிறுவன வசதிகள் ஒன்றும் இல்லை. அண்மைக்காலம் வரை எங்களது பண்பாட்டில் காணப்படும் வலுவான நிறுவனமாகிய கூட்டுக் குடும்பம், மனநோயாளர், விவேக குறைபாடுடையவர் அறளை பெயர்ந்த வயோதிபர் (உளக்கேடு நோய்) போன்றவற்றை குடும்பக்கட்டமைப்பிற்குள் பராமரிக்க உதவியது. ஆயினும் போரின் விளைவாக கூட்டுக் குடும்பங்கள், ஏன் கருக்குடும்பங்கள் கூடப் பிரிந்து, சிதைந்து அல்லது சனநெருக்கடி மிக்க அகதி முகாம்களில் வசித்து வருகின்றன. இதனால் குடும்ப ஒத்துழைப்பையும் நாங்கள் எதிர்பார்க்க முடியாமல் உள்ளோம். நீண்ட காலமாக நிலவி வரும் இத்தேவை ஓரளவுக்கு நிறைவேறும் தறுவாயில் உள்ளது. யாழ் போதனா வைத்தியசாலையில் இயங்கும் நோயாளர் நலன்புரிச் சங்கம் சமூகத்தால் கைவிடப்பட்ட மனநோயாளரைப் பராமரிப்பதற்கான வதிவிட வசதி உள்ள 'மனிதம்' என்ற உளநல இல்லத்தை ஆரம்பித்துள்ளது.

போரின் குழப்பநிலையினால் எம் பிரதேசத்தில் உள்ள சட்ட ஒழுங்குத் தொகுதிகள் முழுதாகச் சீர்குலைந்தமையால் மனநோயாளருக்கான பாதுகாப்பும் கட்டாயச் சிகிச்சை வசதிகளும் இல்லாமல் போயின. பல நோயாளரின் அசாதாரணமான அல்லது சந்தேகத்திற்கிடமான நடத்தை, கதைக்கும் முறை பிழையான நேரங்களில் பிழையான இடங்களில் திரிதல் போன்ற நோயின் விளைவுகளால் அவர்கள் சுடப்பட்டு அல்லது கைதாகி, தடுத்து வைக்கப்பட்டு, சித்திரவதை, மரணதண்டனை போன்ற இம்சைகளுக்கு ஆளாக்கப் பட்டனர் இராணுவப் பாதுகாப்பு படைகள் எமது போராட்டக்குழுக்கள் முதலியவற்றில் இருப்பவர்களின் அறியாமையும் நோயாளரின் போக்கை விளங்கமுடியாமையும் அக்காலத்தில் நிலவிய கொந்தளிப்பான போட்டி நிலையும் சந்தேகங்களும் இதற்கு காரணமாகின. இவ்வாறான துர்ப்பாக்கிய நிலை உச்சக்கட்டத்தை அடைந்த 85, 86, 87 ஆண்டுப் பகுதியில் உளநலச் சங்கங்கள் மனநோயாளருக்கான அடையாள அட்டைகளை மும்மொழிகளிலும் வழங்கியும் வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் மூலம் விளக்கங்கள் கொடுத்தும் ஓரளவுக்கு இவ்விளைவுகள் குறைந்தன. அண்மைக்காலத்தில் நீதி சட்டத் தொகுதிகளின் ஒத்துழைப்புடன் நிலைமை சற்றுச் சீராகி வருகின்றது. ஆயினும் மனநோயாளரின் உரிமை, கட்டாய அனுமதிச் சிகிச்சை போன்றவற்றை மற்றைய நாடுகள் போல் சட்ட ஒழுங்கமைப்பிற்குள் கொண்டு வரவேண்டியது அவசியம்.

### பால்:

எங்களின் எல்லாப் புள்ளி விபரங்களும், உதாரணமாக வெளி உளநோயாளர் பகுதிகளுக்கு வருபவர்கள் மற்றும் சமூக ஆய்வுகள் என்பன பெண்களே கூடுதலாக உளத்தாக்கங்களுக்கு ஆளாகின்றனர் என்பதை எடுத்துக் காட்டுகின்றன. தற்போதைய போர்ச் சூழ்நிலையில் ஜனத் தொகையில் பெண்களின் விகிதாசாரம் ஆண்களிலும் பார்க்க கூடியிருப்பதால் அவர்களே கூடுதலாகப் பாதிக்கப்படுவர் என்று எதிர்பார்க்கலாம். ஆண்கள் வெளிநாடுகளுக்கு இடம்பெயர்ந்து, அல்லது வேலைவாய்ப்புக்களுக்கு போயிருப்பதாலும், மற்றும் போரினால் இறந்தோ அல்லது காணமற் போயோ, தடுத்து வைக்கப்பட்டோ, அல்லது போரில் நேரடியாக ஈடுபட்டோ இருப்பதாலும் சமூகத்தில் அவர்களின் தொகை குறைந்திருக்கலாம்.

இதைவிட, பெண்களே தற்பொழுது முழுக் குடும்பப் பொறுப்பையும் சுமந்து, ஆண்களின் கடமைகளையும் செய்து, சமூகப் பளுவைத் தாங்கி நடக்க வேண்டிய இக்கட்டான நிலை தோன்றியுள்ளது. ஆகவே சமூகத்தைப் பாதுகாப்பதற்காக அவர்கள் முழு மூச்சுடன் செயற்படும் பொழுது, சிலரில் உளத்தாக்கங்கள் ஏற்படுவது இயற்கையே. இது சமூகத்தை காப்பாற்ற அவர்கள் செலுத்தும் விலை என்று கருதலாம்.

இந்நிலையில் பெண்களுக்கான விசேட பராமரிப்புகள் தேவைப்படுகின்றன. இதற்காக மகளிர் அபிவிருத்தி நிலையம், மற்றும் நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் பெண்களினால் பராமரிக்கப்படும் குடும்பங்களிற்கும், பாதிக்கப்பட்ட விதவைப் பெண்களிற்கும், குடும்பங்களிற்கான சில முன் மாதிரியான அபிவிருத்தி திட்டங்கள், கடன் வசதிகள், வேலை வாய்ப்பு, பயிற்சி போன்றவை வழங்கப்படுகின்றன.

மிகுதி அடுத்த இதழில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கவிஞன் காடாறு மாதம் நாடாறு மாதம் என வாழ்பவன்

**- மஹாகவி**

**இலங்கை வானொலி இளைஞர் மன்றம் நிகழ்ச்சியில் மஹாகவியின் பேட்டி ஒன்று 29 - 05-1965இல் இடம் பெற்றது. அப்பேட்டியின் போது கவிதை பற்றிய தன்னுடைய கருத்துகளை விவரமாகத் தெரிவித்திருந்தார். பேட்டியில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கான மஹாகவியின் பதில்களே எழுத்து வடிவில் இப்போது கிடைத்துள்ளன. எனினும் மஹாகவியின் பதில்களில் இருந்து கேள்விகளை உய்த்துணர்வது இலகுவாகவே இருக்கிறது.**

● எனது முதற்கவிதையை எழுதும் போது எனக்கு வயது 12 அளவில் இருக்கும். அப்போது நான் ஆங்கிலப் பள்ளியில் நான்காம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்ததாக நினைவு.

● தொழில்களில் எடுபடுவதற்கு இன்ன வகுப்பைத் தாண்டியிருக்க வேண்டும் என்று இருக்கும். கவிதையில் ஈடுபடுவதற்கு அப்படி ஒரு தகுதித் தேர்வும் இல்லை. புத்திசாலியான இளைஞன் எவ்விதப் பள்ளிப் படிப்பும் இல்லாமலே, தனது தாய்மொழியிற் கவிதை எழுதல் கூடும். உதாரணமாக, நாடோடிக் கவிதைகளை யாத்தவர்களைக் கூறலாம். ஆனால் படிப்பறிவு கவிஞனது தொழிலை இலகுவாக்குகிறது.

● வசனம் வேறு; கவிதை வேறு. வசனம் கைவந்தமை கவிதை எழுதுதற்கு உதவாது. தமிழிற் சிறந்த வசனக்காரர் பலர் கவிதை எழுதமுற்பட்டுத் தோற்றனர். உண்மையில், வசனக்காரர் கவிதையைச் சுவைப்பதே அருமை! மாறாக ஒரு நல்ல கவிஞன் ஒரு சிறந்த உரைநடையாளனுமாவான்.

● நான் சிறுவனாயிருந்தபோது எங்கள் வீட்டுவளவில் ஒருபிள்ளையார் கோவில் கட்டி விளையாடினோம். அப் பிள்ளையார் மேல் நானும் பிறரும் சில பாக்கள் எழுதினோம். அப்போதுதான் எனது முதற்பா பிறந்தது. பிறகு 1941ம் ஆண்டளவில் நான் 7ம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்த பொழுது பாரதிதாசனின் முதலாம் கவிதைத் தொகுதியைப் படித்தேன். அடுத்த நாளே தொடங்கியவன் இன்றுவரை பாட்டெழுதலை நிறுத்தவே இல்லை! பாரதி தமிழ் உலகத்தாரைக் கவிதை படிக்க வைத்தான். பாரதிதாசனோ அவர்களைக் கவிதை எழுதவே வைத்துவிட்டான்!

● என்னுடைய முதற் கவிதையில் நான் கையாண்ட பொருள் முன்னரே கூறியபடி, கடவுளே. ''அங்கயற்கண்ணி மீனாட்சியே, ஆனந்தவல்லி காமாட்சியே!'' என்ற அந்தக் காலத்துப் பாடல் ஒன்றைப் போல அது அமைந்தது. ஆனால் நான் அறிவார எழுத ஆரம்பித்த பொழுது முதலிற் பிறந்தது ஓர் எண்சீர் ஆசிரிய விருத்தம். ''நாட்டினிலே எல்லாரும் கல்வி கற்றால்..'' என்று தொடங்குகிறது. அவற்றை எல்லாம் இப்போது எதற்கு?

● கவிதை எழுதப் புகும் இளைஞர்கள் இதை நான் சொல்லித்தான் தெரிய வேண்டுமா? இளைஞர்கள் காதலைத்தான் பாடுவார்கள்; அதுவே நல்லது. தான் பட்டுணர்ந்தவற்றைப் பாடுவதே உயிர்க்கவிதை எழுதுவதற்கு உள்ள ஒரே வழியாகும்.

● என் வாழ்க்கையிலும் சிந்தனையிலும் எதிர்ப்பட்டு என் மனதில் ஊன்றித் தைக்கும் எதைப்பற்றியும் நான் எழுதுகிறேன். உண்மையில் கவிதைகள் ஒரு கவிஞனது உள்வாழ்வு, புறவாழ்வைக் காட்டும் சுயசரிதமே ஆகும். உயர்ந்த மருத்துவன் ஒருவன் தான் எதிர்ப்படும் சிறப்பான நோயையும் அதற்குத் தான் செய்யும் பரிகாரத்தையும் குறித்து வைப்பது போலவே கவிஞனும் தான் தனியாகப்பட்டதையும் அறிந்ததையும் கவிதையாகக் குறித்து வைக்கிறான்- அக்குறிப்பிற்குப் பிந்திய வாழ்வு வளமும் பயனும் பெறுமாறு.

● தேடித் திரியத் தேவையில்லை. உட்கார்ந்து தான் நாடாறுமாதம் ஊரோடுவாழ்ந்து தான் பெற்றுக் கொண்டவைகளைக் காடாறு மாதத்தில் உட்கார்ந்து எழுதுகிறான். பசு முதலில் உண்டு பிறகு இரைமீட்பது போல. கவிஞனுக்குத் தனிமையும் ஒதுக்கமும் எவ்வளவு தேவையோ அவ்வளவு பொதுமையும் கூட்டு வாழ்வும் தேவை.

● கருத்து, கற்பனைவளமே மூலப் பொருள். அதைத் தோண்டி துப்புரவாக்கி ஒருபொதியாகக் கட்டி முடிய உதவுவதே யாப்பு. யாப்பறிவு அவசியமே. அதை வளரும் கவிஞன் பாடல்களிலிருந்து தானாகவே கண்டு பிடித்துக் கொள்ளல் கூடும்.

● யாப்பிலக்கணம் படிக்கும்வரை கவிதை எழுதக் காத்திருத்தல் ஆகாது. முதலில் இலக்கணத்தைப் படித்தால் கவிதை தொடர்ந்து கவி எழுதும் எவனும் ஈற்றில் யாப்பொழுங்கோடு எழுதுவதிலேயே வந்து சேர்வான்.

● நெருப்புக்குக் காற்றுப்போலச் சின்னக் கவிதையை அணைத்துப் பெரிய கவிதையைத் தூண்டி விடுவது யாப்பு. இயலாதவனை யாப்பு ஆகிய குதிரை, இடறி விழுத்தி விடுகிறது. இயன்றவனோ, யாப்பைக் குதிரை கொண்டு உலகினையே ஆள்கிறான்!

● அகவலே இலகுவான செய்யுள். ஆனால் அகவல் தரும் ஓசை உணர்வு போதாது. அகவல் எழுதத் தொடங்குபவன் கவிதைக்கு ஏறாமல் வசனத்துக்கு இறங்கி விடுதலும் கூடும். ஆரம்பிப்பதற்கு எண்சீர் விருத்தம் போன்றவை மிகவும் ஏற்றவை என்று எண்ணுகிறேன். பாக்களை ஊன்றிப் படிப்பதாலும் நல்ல பகுதிகளை மனனம் செய்வதாலும் கவிதை கைவரும். தூரத்தில் உள்ள தென்னையை விட எதிரே உள்ள துரும்பே பெரியது. பழைய புலவர் பெருமக்களின் பாக்களை விட இன்றையவர்களின் படைப்புக்களே நாம் அதிகம் விளங்கிக் கொள்ளவும், நம்மைத் தொடக்கத்தில் வழிநடாத்தவும் உதவும்.

● சந்தம் ஓசையை ஆதாரமாகக் கொண்டுதான், இளங் கவிஞர்கள் எழுதுகிறார்கள். ஆனால் சிக்கலான சந்தங்களை வைத்துக் கொண்டு பாட்டெழுதுதல் யாருக்குமே பஞ்சி. அவற்றைச் சுவைத்தலும் பஞ்சியே. சிக்கலான சந்தங்கள் வளைந்து கொடுக்காத கருவிகள். பாரதியின் பாஞ்சாலி சபதத்திலிருந்து அதிகப் புழக்கத்துக்கு வந்து வடநாட்டில் இன்று மலர்ந்துள்ள சிந்துவகை தமிழில் வழக்கற்றுப் போன வஞ்சிப்பா போனவழியே தான் போகும். கருத்துக்களிலே நுணுக்கங் காண இயலாதவர்களே செய்யுள் உருவங்களில் சிக்கல்களை உண்டாக்கி களிக்கிறார்கள். தமிழ்க் கவிதை வறண்ட காலத்தில் யமகங்கள் போன்றவை தோன்றியது போலவே இந்த நொண்டுகிற சிந்துகளும் தமிழ் கூறும் நல்லுலகில் (இலங்கையில் அல்ல) தோன்றிப் பரவி வருகின்றன.

● நான் இதை ஒப்புக் கொள்ளேன். ஒரு கவிதையின் மூலமே உலகத்துக் கவிதை வளம் முழுவதையும் கவி ஞனாகப்போகும் வல்லமை உள்ள ஒருவனை கண்டுகொள்ளலாம். அணுவை ஆராய்ந்தே அண்டத்தை அளந்து கொள்ளலாம். தாங்கள் கூறுவதுபோல் ''நிரம்பிய இலக்கியப் பயிற்சி'' அனாவசியமும் பொழுது விரயமும் ஆகும்! அத்தோடு அப்பயிற்சி பெறும் கவிஞன் வலுவற்றவன் ஆனால், தன்மையை இழந்து பிறன்மை பெற்று அழிந்து விடுதலும் கூடும்.

● எந்தக் கலையின், மனித முயற்சியின் கடைசித் தேர்வும், தான் எடுத்துக் கொண்ட பொருளை வேண்டிய நிறைவோடு ஆகச் சுருக்கமாக வெளியிட்டுள்ளதா? என்பதன் மறுமொழியிலேயே அடங்கி உள்ளது. இந்தக் கேள்வியைக் கேட்டுக் கொண்டு படைப்பைச் செதுக்கினால், மெருகேறும்.

● இன்ன கருத்துக்கு இன்னவகைக் கவிதை ஏற்றது என்பதில்லை. எந்தக் கருத்தையும் எந்த வகைக் கவியிலும் எழுதலாம். வசனத்துக்குகந்த கருத்துக்கள் சில கவிதைக்குகந்தவை பிற என்றெல்லாம் இல்லை. எக்கருத்தையுமே கவிதையில் கையாளலாம்.

● குறிப்பாக ஒரு கவிதையை எடுத்துக் கொள்கிறேன். ''புள்ளி அளவில் ஒரு பூச்சி'' என்பது. தினகரனிலும் கலைமகளிலும் வெளியானது.... ஒருநாள் மாலை, புத்தகம் ஒன்றை வாசித்துக் கொண்டிருந்தபொழுது அதன் ஓரத்தில் கண்ணுக்குத் தெரிந்தும் தெரியாமலும் ஒரு புள்ளி இருந்ததைக் கண்டு, அதைப் புறங்கையாற் தட்டினேன். ஆனால் ஒரு சின்னஞ் சிறு உயிர் கையாற் சிக்கப்பட்டு இறந்துபோனது! அந்நிகழ்ச்சியில் இருந்து உண்டான உளநெகிழ்வில் அன்றிரவு அக்கவிதையை எழுதி முடித்தேன்.

● கருத்தைச் சுற்றித்தான் கற்பனை படரவேண்டும்.

● இயலுமானால் பேச்சு நடையில் கவிதை எழுதலே சிறந்தது. ஆனால் பேச்சு நடை என்பது பேசும் வாக்கியங்களின் அமைப்பையே குறிக்கும். பேசும் வாக்கியங்களின் அமைப்பையே நோக்கும்; பேசும் கொச்சையை அல்ல, 'முயல்' என்பதை 'முசல்' என்பது பேச்சு நடையாகாது..... கவிஞனின் தேவைக்கேற்றபடி கொச்சைப் பேச்சை எழுதுவதிலும் குற்றம் எதுவும் கிடையாது.

● முதலிற் பின்பற்றலாம். ஆனால் கூடியவிரைவிற் சொந்த நடை அமைந்து தாய்க் கவிஞனின் நடையினின்று பிரிந்து சுயாட்சி பெற்றுவிடல் வேண்டும்.

● நான் நன்றாக உணர்ந்தவற்றை உண்மையாகவும் ஆடம்பரம் இல்லாமலும் எழுத முயல்வதாலும் என் கவிதைகளை நானே விருப்பின்றிக் கூர்ந்து நோக்கிப் பிழைகளைத் தவிர்த்துக் கொள்வதாலும் என்று கூறலாம். எனினும் தன்னம்பிக்கையே எவரின் எத்துறை முன்னேற்றத்துக்கும் காரணம் ஆகும் என்பது தான் உண்மை.

● இளங்கவிஞர்கள் தங்கள் உள்ளத்தினின்றும் பொறாமை பகை, பொய், கோழைமை போன்ற தீயபண்புகளைக் களைந்து விடல் வேண்டும். எவ்வளவு சாதுரியமாக முயன்றாலும் மாசுடைய உள்ளத்தில் இருந்து மாசற்ற படைப்புப் பிறக்காது. ''மனத்துக் கண் மாசிலன் ஆதல் அனைத்தான்'' சாதாரண மனிதனுக்கே இது தேவையானால் கவிஞனாகிய உயர்ந்த மனிதனுக்கு அது பெருந்தேவையாகும் அன்றோ?

● ஊருக்கொரு மன்றம் கூடிக் கவிதைகளை வாசித்தும், வாசிக்கக் கேட்டும் பழகுங்கள். கவி அரங்குகள் நடத்தியும் அவற்றைக் கேட்டும் மகிழுங்கள். ஒவ்வொரு மனிதனும் உண்மையில் ஒரு கவிஞனே என்பதை உணர்ந்து கவிதை எழுதவும் படிக்கவும் ஆர்வம் மிகக் கொள்ளுங்கள்


கண்டவற்றுள் பிறரும் அறியத் தகுந்தவற்றை செய்யுளாக எழுதத் தொடங்க வேண்டியது. புத்தகப் படிப்பும் உதவும். ஆனால் ஏராளமான நூல்களை வாசித்துத் தள்ளுவதை விட சிறந்த சிலவற்றை தெரிந்து ஊன்றிப் படிப்பது நல்லது.

● காதற் பாக்களும் கடவுற் பாக்களும் எழுதலே இலகு ஏனெனில், இப்பொருள்கள் பற்றிய ஏராளமான சொல்லடுக்குகள், உவமைகள், கதைகள், கருத்துகள், கற்பனைகள் முதலியன புழக்கத்தில் உண்டு. ஆனால், அப்படி உள்ளவற்றையே குறைத்துக் கோர்த்து அமைக்கும் தொழில் கவிதை ஆகாது.

● கவிதைக்குரிய கருத்தொன்று மனதில் பதிந்து விட்டால் அது ஆழ உறைந்திருக்கும். அதைச்சுற்றி அதன் அமைவுக்கு வேண்டிய மற்றவையெல்லாம் ஒட்டிக் கொண்டு ஒரு விளக்கம் ஏற்பட்டுக் கொண்டுவருகிறது. கவிதை முத்துப்போல் உள்ளே வளர்கிறது. தானாகக் கனிந்தாலும் அதைக் கவிஞன் பெற்றெடுக்கிறான். இந்தக் கருக்கோளும் பேறும் ஒருமணி நேரத்தினுள்ளும் நிகழலாம். ஓர் ஆயுட்காலமே போதாமற் போகினும் போகலாம்! பழக்கப்பட்ட கவிஞன் கருக் கொண்டமாத்திரத்திலேயே அதைப் புகையூதிப் பழுக்க வைக்கவும் முடியும். ஆயினும் தானாகக் கனிந்த கவி அறிவாரச் செய்ததை விட மேம்பட்டதே. அறிவையும் மீறிய பல மனித வல்லமைகள் அதன் தோற்றத்துக்கு உதவுகின்றன. ஒரு சாதாரண மனிதனின் உணவை அவன் அறியாமலே அவன் வயிறு இரத்தம் ஆக்கிக் கொடுப்பதுபோல ஒரு கவிஞனின் உணர்வை அவன் முற்றாக அறியாமலே அவனது முழு ஈர்ப்பும் சேர்ந்து கவிதையாக்கித் தருகின்றது. அதன் வளர்ச்சி கருச்சிசுவின் வளர்ச்சிபோல, அவன் ஆணைக்கும் பெரிதும் அப்பாற்பட்டது.

● கவிஞன் விக்கிரமாதித்தனைப் போல நாடாறு மாதம் காடாறுமாதம் வாழ்பவன்.

எழுதுவது வலு பஞ்சி. இலக்கணத்தில் ஈடுபாடும் விளக்கமும் தோன்றவும் மாட்டா. யாப்பிலக்கணத்தை நன்றாகக் கற்றவர். யாப்புப் பிழை மலிந்த பாடல் எழுதலும் பெருவழக்கு. ஆனால் சரியான ஓசை உணர்வு உள்ள ஓர் இளங் கவிஞன் எழுதும் கவிதையிலும் யாப்புப் பிழைகள் விழா.



கவிதை எழுதத் தொடங்கிய பிறகு சிறிது சிறிதாக யாப்பிலக்கத்தைப் பயின்றுகொள்ளலாம். முதலில் அசை, சீர், தளை, அடி, தொடை ஆகிய அடிப்படையைப் பயின்று கொண்டால், மிகுதி தானாகவே வரும்.

● இந்தக் காலத்தில் பத்திரிகைகளில் வெளியாகும் கவிதைகளில் அரைவாசி யாப்பொழுங் கற்றவை. கவிஞனைப் விடப் பத்திரிகை ஆசிரியனுக்கே யாப்பறிவு அவசியம் என்பது இவற்றாற் பெறப்படுகிறது.

● இலக்கண அமைதி இல்லாத கவிதை எழுத எவனுக்கும் உரிமை உண்டு. உண்மையில் கவிதையின் பெரும் எதிரி சத்தில்லாமை, கருத்தில்லாமை, வெறுமையே! யாப்பமைதியீனம் அன்று. ஆகையால் யாப்பீனத்தோடு போர் தொடுத்தல் வேண்டாம் .

www.tamilarangam.net



# முற்பிறப்பின் பலனே பெண் பிறப்பு!

ஆரம்பத்தில் பௌத்த மதம் தீவிரமாக இயங்கிய சமூக அடக்குமுறை சக்திகளுக்கு ஒரு சவாலாக விளங்கியது. பௌத்தம் தோற்றம் பெற்று வளர்ச்சியடைந்த காலகட்டத்தில் சாதிய அமைப்பானது இந்திய சமூகத்தில் மேலாட்சி பெற்றிருந்தது. சமூகத்தில் பெண்களதும் மற்றவர்களதும் தராதரமும் படிநிலையும் அவர்களுடைய சாதியின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்பட்டு வந்தது.

ஆரிய சமூகம் குடும்ப ஆட்சியைப் பாரம்பரியமாகக் கொண்டது. ஆதிகாலம் முதல் சமய, சமூக நடவடிக்கைகள் அனைத்திலும் பெண்கள் இரண்டாம் பட்ச நிலையிலேயே வைக்கப்பட்டனர். குழந்தைப்பருவத்தில் அவர்கள் தமது தந்தையினதும், இளமைக் காலத்தில் கணவனதும், பிற்காலத்தில் அவர்களுடைய ஆண் பிள்ளைகளதும் கட்டுப்பாட்டுக்குள்ளேயே வாழ்கின்றனர்.

பௌத்த தத்துவத்தின் பரவலானது வேதம் சார்ந்த சமய பழக்கவழக்கங்களுக்குள் ஊடுருவியும் சமூக நடவடிக்கைகளில் ஆழமாக பதிந்தும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இது ஒரு வடிகாலாக அமைந்தது. சாதியடிப்படையிலான சமூக அமைப்பின் மீது மிகப் பெரிய தாக்கத்தை பௌத்தம் ஏற்படுத்தியது. அத்துடன் மக்களது சிந்தனையைப் படிப்படியாகத் தட்டி எழுப்பியதுடன் நீதி, சமத்துவம், சுதந்திர சிந்தனை போன்ற அடிப்படையான விழுமியங்கள் சமூகத்தில் முக்கியத்துவம் பெறுவதற்கும் பங்களிப்புச் செய்தது.

புத்தர் அவருடைய போதனைகளில் மனித சமத்துவத்தை அழுத்தமாக வலியுறுத்தி கூறியதுடன் சாதிய அமைப்பை வன்மையாகக் கண்டித்தார். சமூகத்தில் ஆட்சிபெற்றிருந்த சாதியச் சித்தாந்தத்திற்கு (வர்ணாச்சிரம தர்மம்) பதிலாக அவர் உயிர் வாழும் எல்லா உயிரினங்களின் சார்பான கோட்பாட்டையும் எல்லா வகையான மனித இனக்குழுமங்களின் சமத்துவத்தையும் வலியுறுத்திப் பிரச்சாரப்படுத்தினார்.

தன்னுடைய சித்தாந்தங்களைப் பரப்பும் போது புத்தர், ஆண் பெண் சமத்துவத்தை எல்லா நிலையிலும் அழுத்தமாக வலியுறுத்தினார்.

பிராமணிய போதனைகளின் அடிப்படையில் கற்பதற்கான உரிமையானது பிராமண சாதியினருக்கு மட்டுமே இருக்கின்றது என்பது முக்கியமானதாகும். இந்த சிந்தனைக்கு எதிராக அறிவின் எல்லாத் துறைகளிலும் ஆணுக்கு மட்டுமல்ல வாழ்க்கையில் வித்தியாசமான பாத்திரங்களை வகிக்கும் பெண்ணுக்கும் சம உரிமை உண்டு எனப் புத்தர் போதித்தார்.

முற்பிறப்பில் செய்த பாவச்செயலின் விளைவினாலேயே ஒரு குடும்பத்தில் பெண் குழந்தை பிறக்கின்றது என்பது இந்து மரபின் நம்பிக்கை. அரசன் கோசலனின் அரசி இளவரசியொன்றைப் பெற்றெடுத்த போது அரசன் மிகவும் வேதனையடைந்தான்.

''ஆணைவிடப் பெண் பலமடங்கு மிகவும் திறமையானவள்'' என புத்தர் அரசனுக்கு அறிவுரை கூறினார்.

பௌத்த இலக்கியத்தில் உன்னுடைய தாயை ஈவிரக்கமற்ற முறையில் கொல்வது பரிநிர்வாணமடைந்த ஒருவரை புனிதத்துவமற்ற முறையில் கொல்வதற்குச் சமமானது என்று சொல்லப்படுகிறது. உயர்ந்த ஒரு சமூகத்தை உருவாக்குவதற்காக தியாகத்தின் மூலம் பங்களிப்பு செய்யும் அவள் மதிக்கப்பட வேண்டியவள். சமூகத்தில் பெண்ணின் அந்தஸ்தும் முக்கிய பாத்திரமும் எவ்வகையானது என்பதை குறிப்பிட்டே இவையெல்லாம் போதிக்கப்படுகின்றன.

முன்னைய காலங்களில் பௌத்த சங்கத்திற்கான அங்கத்துவம் ஆண்களுக்கு மட்டுமே இருந்தது. எப்படியிருந்த போதும் பின்னர் பெண்களின் கோரிக்கையினால் பௌத்த பிக்குனிகளுக்கான பிரிவும் அனுமதிக்கப்பட்டது.

பௌத்த பிக்குணிகளின் பிரிவு நிறுவனமயமானது. பெண்கள் தலைமைத்துவத்தை கட்டியெழுப்ப உதவியது. இந்த முன்னேற்றகரமான நோக்கத்திற்காக அரசிகளான பராஜபதி, கௌதமி, யசோதரா, விமலா போன்றவர்கள் கூட முன்வந்தார்கள்.

பூரணா, பட்டாசாரா, கிஸ்சகோதமி போன்ற பெண்கள் நாதியற்ற சமூகத்தவர்களாகவே மதிக்கப்பட்டார்கள். விபச்சாரியாக வாழ்ந்த அம்பாளியின் வாழ்க்கை புத்தரினால் புனரமைக்கப்பட்டது. புத்தரின் காலத்தில் நாடானது முன்னைய சமூகத்தில் பெண்களின் அந்தஸ்தை உயர்த்தும் நோக்குடன் முன்நோக்கி நடந்துள்ளது என்பதையே இவைகள் காட்டுகின்றன.

புத்தரின் போதனைகள் பரவியமையானது பெண்களின் அடிமைத்தனத்தை ஒழிப்பதற்கான கதவுகளைத் திறந்துவிட்டது. ஆனாலும் ஆழமாக பதித்திருந்த சமூகப்போக்குகளினால் பெண்கள் தொடர்ந்தும் அடிமைகளாகவே வைக்கப்பட்டனர். இதனால் அடிமை விலங்குகளை உடனடியாக உடைத்தெறிவதானது கடினமானதாகவே இருந்தது. உண்மையான நடைமுறையில் சமூகத்தின் உள், வெளிப்போக்குகளினால் பௌத்தமதம் கறைபடிந்ததுடன் பெண்களை தொடர்ந்தும் இரண்டாம் நிலையிலேயே வைத்தது. இதற்கு பிக்குமாரும் காரணமாவர். பல வருடங்கள் பௌத்த பிக்குனி சேவை செய்த போதும் அவள் பௌத்த கோயில் குருமாரின் தொண்டரடிப்பொடிகளாகவே இருந்து வருகின்றனர். பிக்குமாரின் காலில் விழுந்து தலைவணங்குவது அவர்களின் கடமைகளிலொன்றாகும்.

இதேபோல, பௌத்த பிக்குணிகள் பிக்குவைப் போல பௌத்த கடமையை நிறைவேற்ற முடியாது. புத்தரின் போதனைகளில் செய்யப்பட்ட இப்படியான ஆக்கிரமிப்புகள் பெண்களை இரண்டாம் நிலையிலேயே வைத்திருக்கும் போக்கை ஆண்களில் இருந்து முற்றாக வெளியேற்ற முடியாது என்பதையே காட்டுகின்றது.

ஒருவர் முற்பிறப்பில் செய்தவற்றின் பலனாலேயே பெண் குழந்தையைப் பெற்றெடுக்கிறாள் என பௌத்த இலக்கியங்களில் கர்மா என்ற செய்யுளை விளக்கும் போது குறிப்பிடப்படுகின்றது. முற்பிறப்பில் செய்த பாவச் செயலினாலேயே இப்பிறவியில் ஒருவர் பெண்ணாகப் பிறக்கிறார் என்ற கருத்துக்கள் ஜாதக கதைகள் மூலமும் பரப்பப்படுகின்றன.

எமது சமூகத்தில் இப்பொழுதும் கூட, ஆண் குழந்தையை பெறும் விருப்பம் பெண் குழந்தையைப் பெறுவதில் இல்லை. இதேபோல் மனைவிக்கு கணவனே உயர்ந்தவன் என்ற எண்ணம் எங்கள் சமூகத்தின் சிந்தனைகளில் ஆழமாகப் பற்றிக்கொண்டுள்ளது.

*ஆங்கிலத்தில்: திருமதி லீலா முத்துகம*

*தமிழில்: H.A.S. செல்லம்மா*

---

விரைவில் வெளிவரவுள்ள சு.வில்வரத்தினத்தின்

## காற்றுவழிக்கிராமம்

என்ற கவிதைத் தொகுதியிலிருந்து
3 கவிதைகள்

### இறக்கையால் எழுதியது

சொல்லித்தானாக வேண்டும்
தத்தெடுப்பாரின்றி தனித்துப் போய்விட்ட எம்
தீவுகளைப்பற்றி.

சஞ்சீவி மலைகை அனுமன் காவிச்செல்கையில்
கடலிடைச்சிந்திய துண்டங்களாம்
இத்தீவுகளைக் கவனியாமலேக
கரைசேராத் திட்டுகளாய் தனித்திருந்தழுதனவாம்.

கைவிடப்பட்ட துண்டங்களை கரைசேர்க்க யாருமில்லை.
சஞ்சீவிமலையினின்றும் தூரித்ததீவுகளானோம் நாம்.
சஞ்சீவி மலையின் துண்டங்கள் நம் தீவுகள் என்றால்
விண்ணெழுந்து ராவணனைப் பொருதிய ஜடாயுவின்
துண்டாடப்பட்ட இறக்கைகளாய் நாம்

வெட்டுண்டோம்; வீழ்ந்தோம்
கடல்வெளித் தனித்தலைகிற மிதவைகளாய்
எக்கரையுமற்று எற்றுப்படுகின்றோம்.
ஆயினும்
வீழுமுன் விண்ணெழுந்து பொருதிய ஞாபகம்
வெட்டுண்ட இறக்கைகளுக்கு இல்லையெனலாமோ?

சஞ்சீவி மூலிக்காற்றே வா
வெட்டுண்ட இறக்கைகளுக்கு உணர்வின் தைலமிடு
எழுந்து பறந்தாக வேண்டும்
எம் முந்தைப் புலம் நோக்கி
வெட்டுண்டு வீழுமுன் வீடிருந்த உச்சிப்புலம் அது.

இறந்தாரை எழுப்பும் சஞ்சீவி கொணர
அனுமனும் இங்கில்லை.
இராமர்அணையும் கடலுள் அமிழ்ந்தாச்சு
எம்முயிர்த்துவமே சஞ்சீவியாக
எழுந்து பறந்தாகத்தான் வேண்டும்.

### வேற்றாகி நின்ற வெளி

வெளியாரின் வருகையோடு
வேர்கொண்டவாழ்வையும் பிடுங்கிக் கொண்டு
மக்களெல்லாம் வெளியேறிய ஓரிரவிற்குப்பின்
விடியப் பார்த்தால்
வாழ்வெனும் வெள்ளம் வற்றிக்கிடந்த திடலாய்
கிராமம்.

முற்றத்துச்சூரியன்
முற்றத்து நிலா,
முற்றத்துக்காற்றென
வீட்டுமுற்றங்களுக்கே உரித்தான
வாழ்வனுபவங்கள் விடைபெற்றுக் கொண்டன.

வேலிகளை வெளியார், வெட்டிப் போட்டார்கள்.
வாசல் கதவுகளை உடைத்துப் போட்டார்கள்.
உள்ளதையெல்லாம் கொள்ளையடித்தார்கள்
வீடுகள் திறந்தபடியே கிடந்தன.

திறந்த வாசல்களூடே நுழைந்த் காற்று
கதவுகளை சாத்தியும், திறந்தும், தள்ளியும்
உள்ளோடியோடி எதையெதையோ முயன்று
உறவின்மை கண்டபின் தோற்றோடி
வேற்றாகி நின்ற வெளியிடைத் தோய்கிறது.

வெளிகொண்ட காற்று
வெளிகொண்ட நிலா
வெளியை வெறிக்கின்ற சூரியன்.

வெளியிடை வெறித்த பார்வையொடு நிற்கிறேன்
ஏதோ மோப்பம் பிடிக்குமாப்போல்
மெல்லெனவந்த காற்று
விலகிச் செல்கிறது ஒரு வேற்றானைப் போல.

விழிகளைப் பெயர்க்கிறேன்
வேற்றாம்பார்வை என்னிலும் தொற்றியதோ?
விலகல்
மெல்ல விலகல்; மேலும் விலகல்
விட்டு நீங்கும் கப்பற்துறை வரையும்
விலகி வந்தாயிற்று கடைசியாய்.

காற்று மோப்பம் பிடித்தது சரிதான்

இதோ கப்பல் நகர்கிறது
கனத்துக் கிடக்கும் இதயச்சுமையையும் தாங்கியவாறே.

விலகிச் செல்லும் துறைமுகம்
வழியனுப்பவும் வாராதிருந்த முதிய்வரின் சோகத்தை
அப்பிக் கிடந்ததென.

தூரத்தே
புகார் மூட்டமெனத் தெரியும் பனைகளுக்கு அப்பால்
வேற்றாகி விண்ணாகி நின்ற வெளியுள்
குமைகிறது காற்று.

### கிழிந்ததன் நகலாய்

கடிதம்கண்டேன்.
கிழிந்துபோன வாழ்க்கையின் நகலாய்.

எண்ணெய்ப்பிசுக்கேறிய காகிதத் துண்டில்
பழைய பற்றுவ்ரவேட்டில் கிழித்தெடுத்ததாயிருக்க வேண்டும்
பாதி பேனையாலும், பாதி பென்சிலாலும் எழுதப்பட்டிருந்த
நலம் விசாரிக்கும் வரிகள்
என் கைகளில் நடுங்கின.
பிசுக்கில் பதிந்திருந்த பெருவிரல் ரேகையை
உருப்பெருக்கிப் பார்ப்பதென
எழுதப்படாத துயரங்களை வரைபடம் போடுகிறது மனம்.

பிரச்சினைகளின் பூதாகாரத்துள்
கீச்சிடலுமின்றி சிறுபூச்சிகளாய் நசித்துக் கிடக்கும்
துயரங்கள் உங்களுக்குள்ளும்தான்; எங்களுக்குள்ளும்தான்

நாலுதிக்குக்கொரு உடைவாகிப்போயின நம் உறவுகள்
ஆயினும் அதிசயம்தான்
நாமும் உயிர்கொண்டு ஊர்கின்றோம்
காலொடிந்த நண்டினைப் போல்.
கரைதான் தென்படவில்லை.
தென்படுவதாய் தெளியும் பொழுதெல்லாம்
திசைமுகத்தில் பீச்சியடிக்கும்
கணவாய்மைபோலும் கறை.

கறைபடிந்த துயரத்தின் நடுவே
நாளும் நாளும் காணாமல் போகிறோம்;
இல்லையா?

இருகரையும் துயரெறிகை
உங்களைப் போலவேதான் எங்களதும்
எங்களைப் போலவேதான் உங்களதும்
திரையெறியும் துயரம் இருகரையிலும்தான்.

அன்றோர் காலை
நாவெண்டாமுனையில் மீன்வாங்க நின்றிருந்தோம்
அக்கரையின் வான்பரப்பில் இரைச்சலோடு எழுந்து பறந்தன
இயந்திரப் பறவைகள்; குண்டு பீச்சிகள்.

கொட்டடிப் பக்கமாய்
கொழுந்துவிட்டெரியுதென்றார்
பக்கத்தில் நின்றிருந்த முதியவர்
திசைமுகம் புகைமண்டலமாய்த் தெரிந்தது எமக்கு.
குருதிபடிந்த காலையாயிருந்திருக்கும் உங்களுக்கு.

பதறியவாறே வீட்டிற்கு வந்து
"குரலை" முறுக்கினேன்
சற்றுமுந்திய செய்திகளின்படி கொட்டடியிலும், கச்சேரியடியிலு
குண்டு வீச்சென்றார்
சேத விபரம் தெரிந்தபின்னால் தான்
சிறிது மூச்சுவிட்டேன்

இப்பாலிருந்து
மண்டைதீவின் பீரங்கிகள் முழங்கும் போதெல்லாம்
எங்கள் நெஞ்சு பதறும்
குண்டுவீச்சின் போதெல்லாம்
எங்கள் வீட்டின் நிலைக்கதவுகள், சன்னல்கள் மட்டுமல்ல
கூடவே எமது உணர்வுகளும் அதிர்வுறும்.

உற்றதுயர் சொல்லியழ
உரத்துப் பேச
ஒரு மனுவில்லாத் தனிக்காட்டில்
சிறகொடுக்கி குரலொடுக்கி
சீவியத்தைச்சிறைப்படுத்தி
பாடாய்ப்படுத்துகிற பாழும் மனத்தோடு போராடி
கிழிந்துபோன வாழ்வின்
இக்கரை நகலாய் நாங்கள்

எங்களதைப்போலவேதான் உங்களதும்
உங்களதைப்போலவேதான் எங்களதும்

யத்தமுனைகளால் கிழிக்கப்பட்டு
குருதிப் பிசுக்கேறிப்போன வாழ்வின்பக்கங்களில்
எழுதப்படுமா ஒரு நற்செய்தி?

தெளிவற்றதாயிருக்கும் உங்கள் கடிதத்தின் வாசகங்கள்
மீண்டும் ஒருமுறை குரல்வழியாய் நடுங்குகின்றன.

எல்லாமே தெளிவற்றிருக்கிறது
ஆயினும்
ஒரு தீக்குச்சி உரசலின்
சிறு நம்பிக்கைத் துளியில் தெரியவரும் நற்செய்திக்காய்
காத்திருத்தல் மட்டும் தொடரும்.

காத்திருப்போம்
எல்லாத் துயரங்களின் நடுவிலேயும்.
தீக்குச்சியிலும் ஈரம்படிந்துவிடாதவாறு காப்போம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## மாயவன்

ஜங்-ப்ளோர் சந்தியில் உள்ள றோயல் பாங்கின் வாசற்படிகளில் இருந்து ஒவ்வொரு நிமிடமும் நூற்றுக் கணக்கானோர் அவசரமாக என்னைக் கடந்து செல்வதைப் பார்த்துக் கொண்டிருந்தேன். கூப்பிடு தூரத்தில் ஆயிரக்கணக்கானோர் இருந்தும் நான் மட்டுமே அங்கிருப்பது போல் ஒரு உணர்வு. முகம் தெரியா சிலர், இன்னும் சில முகம் தெரியாதவர்களுடன் சிரித்துக் கதைத்துக் கொண்டு செல்ல, வேறு சிலர் தூரப் பார்வையுடனும், யோசனைகளுடனும் அவசர அவசர மாகச் செல்ல நான் தற்காலிகமாக மறைந்து போனேனோ என்று சந்தேகமாயிருந்தது.

வீடியோ கடைக்காக்கா- அப்பா, அம்மா, வைத்த பெயர் இஸ்மாயில்-கூட என்னைக் மாதிரித்தான் அன்று உணர்ந்திருப்பான். இன்று என்னை கவனிக்காமல் சனம் போகிறமாதிரித்தான் அன்று அவன் றோட்டில் விழுந்து கிடக்கையில் நாங்கள் எல்லோரும் கவனிக்காமல் ஓடினோம்.

காக்கவும் நானும் பெரிய ஃப்ரெண்ட்ஸ் என்று சொல்லும்படி இல்லாவிட்டாலும் நல்ல பழக்கம். சிகரெட்டிற்கு காசு இல்லாத போது காசு தந்து உதவியிருக்கிறான். அன்று கூட அவனிடம் வாங்கிய காசைத்தான் கொடுக்கப் போயிருந்தேன் ''எப்ப மாயா பயணம்?'' என்று காக்கா கேட்டான். நான் அப்போது ஜேர்மனி போவதாக ஏற்பாடு ஆகியிருந்தது. ''அடுத்த கிழமை கொழும்பு போகிறேன்- பிறகு அங்காலே ஒரு கிழமையாவது எடுக்கும் என்று நினைக்கிறேன். காசைக் கொடுத்தேன்.

''நீயும் போகிறாய் ஆ? எல்லோரும் போகிறீர்கள் நீங்கள் தானடாப்பா கொஞ்சம் காசு அனுப்பி என்னையும் கூப்பிட வேண்டும். என்ரை மூனா எனக்கு மூன்று வருசமாக ஒரே சம்பளம்தான் தருகிறான். சாப்பிட்டுப் போட்டு குண்டி கழுவத்தான் காணும்! நப்பிப் பயல்!''

''போய் ஒரு வேளை வேலை எடுத்தேன் என்றால் கட்டாயம் ஹெல்ப் பண்ணுவேன். பயப்படாதேயடா''

''சரி வாவன். நாகாஸிலே ஏதாவது குடித்துக் கொண்டு கதைப்பம்''

நாகாஸிற்குப் போவதற்காக மெயின்ரோட்டிற்கு போகும் போதுதான் ஆமி வரிசையாக ட்ரக்குகளிலும் ஜீப்புகளிலும் இருந்து இறங்கியது. சனம் எல்லாம் ஒவ்வொரு திக்கிலும் தலைதெறிக்க ஓட; நான் எனது சைக்கிளில் மெயின் ரோட்டில் இருந்து பிரிந்து போகும் ஒழுங்கையால் போக எத்தனிக்க, காக்கா எனது சைக்கிளின் பின் கரியரில் ஏற முயலத்தான் முதல் துவக்கு வெடிக்கும் சத்தம் கேட்டது. உடனேயே ஒரு நிமிடத்திற்குள் சரமாரியாகப் பல துவக்குகள் வெடித்தன. அதில் ஒரு குண்டு காக்காவின் முதுகில் பட்டிருக்க வேண்டும். முதலில் மாமூட்டையை உதைத்தது போல் ஒரு சத்தம் கேட்டது. காக்கா மெதுவாகக் கேவியது கேட்டது. பிறகு காக்கா என் முதுகில் சாய்ந்ததும் நான் சைக்கிளை வேகமாக மிதித்ததால் அவன் சரிந்து றோட்டில் விழுந்ததும், நான் திரும்பிப் பார்க்க அவன் எழும்ப முடியாமல் கையை உயர்த்தி என்னைக் கூப்பிட்டதும் ஒரு நொடிப் பொழுதிலேயே நடந்து முடிந்துவிட்டாலும் பல மணிநேரங்கள் எடுத்தது போல் பிரமை.

ஆமிக்காரங்கள் போனதற்குப் பிறகு மெயின் ரோட்டிற் குப்போக, ஐந்தாறு பேர் செத்தும் சிலர் காயப்பட்டும் இருந்தனர். காக்காவை மெயின் ரோட்டருகில் இருந்த சாக்கடைக்குள் தள்ளி விட்டிருந்தனர். முதுகில் ஒரு குண்டு. பிடரியில் ஒரு குண்டு. பிடரியில் கிட்ட வந்து சுட்டிருக்கிறாங்கள் என்று அங்கு நின்றவர் ஒருவர் சொன்னார். சாக்கடையில் விழுந்ததால் முகத்தில் காயம் ஏற்பட்டு முகம் முழுக்க ரத்தம் உறைந்திருந்தது. சாக்கடையில் போன கழிவுத் தண் ணீரோடு அவனின் இரத்தம் சேர்ந்து போனது. ஆனால் காக்காவின் கண்கள் மூடாமல் என்னையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தன. பக்கத்தில் நின்றவர் அவன் கண்களில் பயம் தெரியுது என்று சொன்ன போதும் எனக்கென்னவோ கோபம்தான் தெரிந்தது; என்னைக் குற்றம் சாட்டுவது போல்!

அதற்குப் பிறகு ஜேர்மனி பயணம் பிழைத்து....
இன்று காலை ஊரிலிருந்து வழக்கம் போல் பாரமாக ஒரு கடிதம் வந்தது: அப்பாவுக்கு இன்னும் அடிக்கடி இழுக்குது. டொக்டர் ஸ்பெசலிஸ்ட்டிடம் காட்ட வேண்டும் என்று சொல்கிறார். உன்னை நம்பித்தான் இருக் கிறோம்.... தங்கச்சி ரியூசன் பிறைவேட்டாக எடுக்காமல் எக்ஸாம் பாஸ் பண்ண இயலாது என்கிறாள். ஸ்கூலிலே படிப்பிக்கிறது இல்லையாம். வாடகை இரண்டு மாதம் பாக்கி....வீட்டு மனிசி என்னை அன்றைக்கு பச்சையாகத் திட்டினது. உன்னை நம்பித்தான் இருக்கிறோம். அப்பா கூட நேற்றுச் சொன்னார். என்ரை மகன் முந்திமாரி இல்லை; அவன் இப்ப திருந்தீட்டான். இயக்கம் விட்டதிலிருந்து அவன் புது மனிதன் ஏதோ உன்னை நம்பித்தான் இருக்கிறோம்.

HI.Eh..You got a light on you? முகம் எல்லாம் லிப்ஸ்டிக்குடன் ஒரு பெட்டை கேட்டது. நான் மௌனமாக என்னுடைய லைட்டரைக் கொடுத்தேன். சிகரெட்டைப்புகைத்துக் கொண்டு எனக்குப் பக்கத்தில் இந்தாள்.
''I hate it when it's hot and muggy like this. It just drives me crazy. So crazy in fact I want rip my clothes off and run naked,'' என்றாள். நான் நிமிர்ந்து அவளைப் பார்த்தேன். கிழிப்பதற்கும் கனக்க இல்லை. லேசான இருட்டில் அவள் சிரிப்பது தெரிந்தது. 30-35 வயது இருக்கலாம்.
I mean this weather makes me feel.... so horny, you know" நான் பேசாமல் இருந்தேன். இவள் விரும்புவது என்னிடம் இல்லை. பொக்கட்டில் கொஞ்சம் சில்லறை தான் இருந்தது.
''Hey, you wouldn't have quarter on you, would you?" நான் மௌனமாக இருக்க " I need to make a phone call and I don,t have any change with me" என்று இயல்பாக புன்னகைத்தபடி கேட்டாள். நான், No, என்றேன்
"Well.... actually I live right down there.... Just a couple minutes from here. So if you could give me a quarter I will make the phone call and then.... you could come with me to the apartment- I live by myself you know - I will give your money back What do you say about that"?("If you live so close, why don,t you go home and make your phone call?" ("Actually, I don, t have a phone
"Well.... like I said I don,t have any money Anyway, I got to go," என்றபடி சேர்போனில் உள்ள என்னுடைய அபார்ட் மெண்டை நோக்கி நடக்கத் தொடங்கி




சுரேஸ் சுப்பிரமணியம்

னேன். Bitch! கையில் ஊசி குத்தின இடங்கள் குறுகுறுத்தன. இனிமேல் ஹார்ட் சாமான்களை எடுக்கக் கூடாது.

என்னுடைய வாழ்க்கையில் ஒரேயொருக்காத்தான் வேசியிடம் போயிருக்கிறேன். நான் இயக்கத்தில் இருக்கும் போது அது நடந்தது. மாறன்தான் கூட்டிக் கொண்டு போனான். மாறன் என்னினும் பார்க்க மூன்று நாலு வயது மூப்பு தவிர இயக்கத்திலும் நான் சேர்வதற்கு முன்பே சேர்ந்திட்டான். காம்பிலேயே இரண்டாவது சீனியர். ஆனால் எங்களுடன் எல்லாம் சகஜமாகப் பழகுவான். இவன்தான் எனக்கு முதன் முதல் கஞ்சா அடிக்கப் பழக்கினவன். அன்று கூட கஞ்சா அடித்துப் போட்டுத்தான் போனோம்.

முதலில் ரவுன் போய், பிள்ளையார் கபேயில் கொத்துரொட்டி சாப்பிட்டோம். எல்லோரும் பிள்ளையாருக்கே உபசரிப்பது போல விமரிசையாக உபசரித்தார்கள். சாப்பிட்டு முடிந்ததும் பில்லை தன்னுடைய கணக்கில் எழுதி வைக்கும்படி மாறன் கடைக்காரனுக்குச் சொன்னான். ரவுனிலேயே இருக்கிற கன கடைகளில் இவனுக்கு கணக்கு இருக்குது. ஆனால் ஒருத்தரும் காசு கேட்கிறதில்லை.இவனும் கொடுப்பதில்லை. இப்படிக் கடைகள் பொது இடங்கள் என்றுவந்தால் மாறன் காப்டன் மாறன் ஆக மாறி விடுவான். சில சமயம் சங்கேத பாசையிலே தான் கதைப்பான். அவனுக்கே பாதி விளங்காது. பிஸ்டலை கண்ணுக்குத் தெரியிற மாதிரித்தான் வைப்பான். மகசின் கிறனைட் அடங்கிய பெல்ட்டை சேட்டுக்கு வெளியேதான் கட்டுவான். நாங்கள் கதைப்பதை அவனுடைய நடவடிக்கைகளை கவனிப்பவர்கள் நாங்கள் சாப்பிட்டவுடன் ஏதோ ஆமிக் காம்பை அடிக்கப் போகிறம் என்றுதான் நினைப்பார்கள். அந்தளவுக்கு மாறன் படம் போடுவான்.

சாப்பிட்டு முடிந்ததும், பெற்றோல் ஸ்டேசனுக்குப் பின்னால் பிக்கப்பை நிற்பாட்டிப் போட்டு இன்னுமொரு கஞ்சா சிகரெட்டைத் தயாரித்துக் குடித்தோம். தலையெல்லாம் லேசாகி மிதப்பது போல் இருந்த்து. பிறகு, இறங்கி முருகன் கோவில் பக்கம் நடந்து போனோம். ஒரு நாளும் நேராக பிக்கப்பிலேயே போய் அவள் வீட்டில் இறங்குகிறதில்லை என்றும் மாறன் சொன்னான். (காப்டன் மாறன் அப்பழுக்கற்ற தியாகி என்று ஊர்ச்சனம் இன்று போனாலும் சொல்லும்.)

இருட்டில் பல ஒழுங்கைகளுக்குள்ளால் போனோம். அங்கங்கே நாய்கள் குரைத்தன. நடக்கிறேன் என்ற உணர்வே எனக்கில்லை. மிதப்பது போல் இருந்தது. அடிக்கடி மாறன் தேவையில்லாமல் சிரித்தான். எனக்கும் சிரிப்பு வந்தது. கடைசியாக ஒரு படலையைத் திறந்து ஒரு சின்னக் கொட்டிலின் முன்னால் வந்து நின்றோம். ஒரு பெரிய நாய் குரைத்துக் கொண்டு வந்தது. மாறன் த்த்த் என்றான். நாய் வாலை ஆட்டியது. பக்கத்தில் நின்ற பனை மரத்தின் ஓலைகள் காற்றில் ஆடி உராய்வதால் எழும்பிய சத்தம் அந்த இரவின் அமைதியைக் குழப்பிக் கொண்டிருந்தது.

கொட்டிலுக்குள் இருந்து ஒரு மெல்லிய உருவம் வெளியில் வந்து ''வாங்கோ உள்ளே'' என்றது, ஒரு பெண்ணின் குரல். உள்ளே ஒரு சின்னக் குசினியும், ஒரு அறையும் இருந்தது. மூலையில் ஒரு விளக்கு மங்கலாக காற்றில் ஆடியபடியே இருந்தது.

''இது தோழர் டேவிட். அண்டைக்கு காம்ப் அடிக்கப் போன வீரர்களுள் இவரும் ஒரு ஆள். அதிலே ஒரு குண்டு தோளில் பட்டு சாகக் கிடந்தவர்'' என்று மாறன் என்னை அந்தப் பெண்ணிற்கு அறிமுகப்படுத்தினான். முழுக்கப் பொய்! ஆனால் நான் அடக்கமாகச் சிரித்தேன். மங்கலான விளக்கொளியில் அந்தப் பெண் என்னைப் பார்த்து புன்னகைப்பது தெரிந்தது. அவளின் கண்கள் விளக்கொளியில் மின்னின. ''அப்ப நான் வெளியிலே இருக்கிறேன்'' என்று போட்டு மாறன் வெளியிலே போயிட்டான். நானும் அவளும் அங்கிருந்த அறைக்குள் விளக்கை எடுத்துக் கொண்டு போனோம். உள்ளே ஒரு பாயும் பக்கத்தில் கட்டியிருந்த ஒரு ஏணையில் குழந்தை படுத்திருப்பதும் தெரிந்தது. கேள்விகள் கனக்கக் கேட்க வேண்டும் போலிருந்தாலும் கஞ்சாவும் விளக்கொளியில் தெரிந்த வளைவுகளும் என்னை மௌனமாக்கின. நளினியுடன் செய்வதற்கும் அன்று செய்ததற்கும் பயங்கர வித்தியாசம்.

பெற்றோல் ஸ்டேசனுக்கு திரும்பி நடந்து போகையில், மாறனிடம் எழும்பிய கேள்விகளைக் கேட்டேன். அவளுடைய புருஷன் இங்கே சந்தைக்குள் குண்டு போட்ட போது செத்திட்டான். பிறகு அவள் என்ன செய்கிறது. இதை ஒரு சேவை மாதிரி செய்கிறாள். புருஷன் சிங்களவன் போட்ட குண்டினால் செத்ததால் சிங்களவனுக்கு எதிராக போராடுகிற எங்களிற்கு அவள் தருகிற சப்போட்தான் இது. தான் குழந்தையையும் வைத்துக் கொண்டு இயக்கத்தில் சேரக் கஷ்டம் என்பதாலே எங்களிற்கு உதவி செய்வதன் மூலமாவது நாட்டிற்கு சேவை செய்வம் என்று இப்படிச் செய்கிறாள். காசு கொடுக்கிறனான். அது தான் உன்னைக் கூட பெரிய ஆள்போல் அறிமுகப்படுத்தினான். அவளிற்கு இப்படி எங்களை திருப்திப்படுத்துவதால் ஒரு மனநிறைவு கிடைக்குது. சண்டைகளிலே காயப்பட்டவர்கள் என்றால் அவளுக்கு கூடத் திருப்தி!

## குமரன்

என்னோடுதான் மாயவன் இருக்கிறான். எல்லோரும் மாயா என்றுதான் கூப்பிடுவம். ஆனால் இயக்கத்தில் இருக்கும் போது அவன் பெயர் டேவிட். இரண்டு பேரும் ஊரிலே ஒன்றாகத்தான் படித்தனாங்கள். முந்தியெல்லாம் உவன் எப்போதும் சந்தோ சமாகவே இருப்பான். O/L முதல் தரம் பெயில் ஆன போதும் கூட சிரித்தபடியே திரிந்தான். இப்படித்தான் ஒரு முறை நாங்கள் எல்லோரும் கிரிக்கெட் விளை யாடிக் கொண்டிருந்த போது நந்தினி என்று எங்களுடன் படிக்கும் பெண் ஒருத்தி நாங்கள் விளை யாடிய கிறவுண்ட் பக்கதத்தாலே போக மாயவன் ஏ... ஆத்தா ஆத்தோரமா வாறியா... பாட்டை, பயங்கரமாக கொச்சைப்படுத்திப் பாடினான். நாங்கள் எல்லோரும் சிரித்தோம். இதற கிடையில் 'பாற' பண்ணிக் கொண் டிருந்த மாயா சிக்ஸர் அடிக்கக் கூடிய மாதிரி போல் பண்ணச் சொல்லிப் போட்டு வைட்டாக போடப் பட்ட பந்துகளை அடிக்க முடியாமல் திண்டாடிக் கொண்டு இருந்தான். ஏனென்றால் போல் பண்ணியது முரளி. இவனை நாங்கள் எங்களிற்கு ஏன் பிரச்சினை என்று போட்டு கப்டனாக ஆக்கினாங் கள். ஆனால் இவனுக்கு தான் ஏதோ மிலிட்டரி கப்டன் என்று நினைப்பு. ஒரே சர்வாதிகாரம். அதற்கிடையில் இவனுக்கு ஒரு வடிவான தங்கச்சி. முரளியைத் தவிர டீமில் இருக்கும் மற்ற எல்லோரும் அவளைத்தான் கட்டுகிறது என்று கனவு. இது அவனுக்கு சாதகமாய் அமைந்திட்டுது. இவன் சொல்கிறதை தங்கச்சிக்காக எல்லோரும் கேட்போம். அவன்தான் இப்ப மாயாவுக்கு வைட் போலாக போட்டுக் கொண் டு இருந்தான். மாயா அடிக்கடி சொல்லுகிற மாதிரி அவனுக்கு எதிராக புரட்சி அன்று எழும்பும் போல் இருந்தது. ஆனால் அதற்கிடையில் இரண்டு பக்கத்திற்கும் பொதுவான எதிரி தலையை நீட்ட நாங்கள் கூட்டணியானோம். நந்தினியின் சொந்தங்களும் பந்தங்களும் என்று ஒரு குட்டிப்பட்டாளமே வந்து விட்டது. எங்களில் கனபேருக்கு நல்ல அடி.

இது நடந்து சில மாதங்களுக்குப் பிறகு மாயவன் நந்தினிக்கு மை ஊத்தி விட்டான். அவள் ஸ்கூல் முடிந்து வீட்டிற்கு ஒரு ஒழுங்கையால் போகும் போது இவனும் இன்னுமொருவனும் சைக்கிளில் பின்னால் போய் மையை ஊத்திவிட்டாங்கள். இவன் சைக்கிளில் முன்னால் இருந்ததால் அவளுக்கு யார் மை ஊத்தினது என்று தெரியாமல் போய்விட்டது. இப்படி அவன் எப்போதும் விளையாட்டு, பகிடி என்று இருப்பான்.

ஆனால் அவன் இயக்கம் போய் வநத்திலிருந்து சரியான மாற்றம். இங்கு சிலர் அவனைப் பைத்தியம் என்று கதைக்கும் அளவிற்கு மாற்றம். சில நேரங்களில் அவன் இந்த உலகத்திலேயே இருக்கிறதில்லை. சிலநேரங்களில் கதை கொடுத்தால் தூரப்பார்வையுடன் செவிடு மாதிரி இருப்பான். இப்ப கொஞ்சக் காலமாக நல்லாக் குடிக்கவும் தொடங்கி விட்டான். ஆனால் மற்றவர்கள் மாதிரி குடித்துப் போட்டு சத்தம் போடுகிறதில்லை அமைதியாகவே இருப்பான். எனக்குக் கூட சில நேரங்களில் இவனோடு இருப்பதை நினைத்துப்பயமாக இருக்கும். ட்ரக்ஸ் அடிக்கிறான் என்றும் கதை. கனடா வந்ததில் இருந்து இரண்டு மூன்று வேலை செய்தவன். ஆனால் ஒன்றிலும் இரண்டு மாதம் கூட நிலைக்கவில்லை. இப்ப கன காலமாக வெல்ஃபேர் எடுத்துக் கொண்டு இருக்கிறான். அதற்கிடையில் இவனுடைய குடும்பம் எல்லாம் தகப்பனுக்கு சுகமில்லை என்பதால் கொழும்பு வந்திட்டினம். அன்றைக்கு ஒரு நாள் இவனுடைய தாய் ஃபோன் பண்ணி, இவன் இல்லாததால் என்னோடு கதைத்தா. கதைத்தா என்பதிலும் பார்க்க அழுதா என்பது கூடப் பொருந்தும். காசு அனுப்புகிறான் இல்லை என்றா. ஃபோனில் கதைக்காமல் சத்தம் போடாமலே இருக்கிறான் என்றா. புருஷனிற்கு இன்னும் சீரியஸாகவே இருக்குது. ஸ்பெஷலிஸ்டிடம் காட்டக் காசு வேண்டும் என்றா. பிறகு அழுதா. நான் அவனோடு கதைக்கிறேன் என்று போட்டு வைத்திட்டேன். ஆனால் நான் கதைக் கேலை எப்படிக் கதைக்கிறது? நான்தான் விசரன்போல கதைத்துக் கொண்டிருப்பனே தவிர அவன் கதையான். ஏதோ தியானத்தில் இருப்பது போல் இருப்பான்.
விசரன்!

→ 13

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## மாயவன்

அபார்ட்மென்டில் என்னுடைய றூம்மேட், குமரன், The Bridge on the rever Kwai பார்த்துக்கொண்டிருந்தான் நானும் விஸ்கிப் போத்த லைத் திறந்து குடித்துக் கொண்டு படம் பார்த்துக் கொண்டிருந்தேன். வேலையேதும் ''அம்பிட்டு தோ?'' என்று கேட்டான். நான் டிவியில் இருந்து கண்களை எடுக்காமல் ''இல்லை'' என்று தலையாட் டினேன். பேசாமல் இருந்தான். இவனிற்கு நான் ஏதோ வேலை செய்ய விருப்பமில்லாமல்தான் ஊர் சுற்றிக் கொண்டு திரிகிறேன், என்று நினைப்பு. ட்ரை பண்ணுகிறேன். கிடைக்கேலை நான் என்ன செய்ய?

இவன் ஒரு பக்கா கப்பிட்டலிஸ்ட். றூம் முழுக்கப் புதுப்புது சாமான்கள் வாங்கிப் போட்டிருக்கிறான். இரண்டு மூன்று இடத்தில் சீட்டுக் கட்டுகிறான். இரண்டு வேலை செய்கிறான். மெஷின்! விசர் பிடித்த மெஷின்! ஆனால் மாதக் கடைசியில் ஒரு பத்து டொலர் கேட்டால் மூக்காலே அழுவான். அர்ஜுன னுக்கு கிருஷ்ணன் புத்திமதி சொன்ன மாதிரி எனக் குப் புத்திமதி சொல்லுவான். இப்படி உழைத்துச் சேர்த்து என்னத்தைக் கண்டான்? வாங்கியதெல்லாம் புதுசு புதுசாக இருக்குது: ஒன்றையும் அனுபவிக்கிற தில்லை. ரிமோட் கண்ட்ரோலிற்கு பொலீத்தீன் பாக்காலே கவர் போட்டு வைத்திருக்கிறான். அதை மெதுவாக எடுத்து டி.வி.யை, டெக்கை மெதுவாக ஒன் பண்ணிப்போட்டு பத்திரமாக திரும்ப மேசை யில் வைத்து விடவேண்டும். சனல் எல்லாம் மாத்தக் கூடாது! கொஃபி ரேபிளை தினம் நாலு தரமாவது துடைப்பான். ரொய்லட் ரிசு பிங் கலரிலே இருக்க வேண்டும். ஏனென்றால் பாத்ரூம் சுவர் கலர் பிங்க். இந்த நாய் ஊரிலே பற்றைக்குப் பின்னாலே எறும்பு, பூச்சி கடிக்க குந்திப் போட்டு இங்கே வந்து பிங் ரிசு கேட்குது. நாளைக்கு சாகும்போது அப்பத்தானே மரண அறிவித்தல் அறிவிக்கலாம். பிங் கலர் பாத்ரூமில் பிங் ரிசுவால் துடைத்த அன்னாரின் பூதவுடல்....

## விசர் நாய்

டி.வி.யில் பார்த்துக் கொண்டிருந்த படத்தில் சிலர் ட்ரெயின் ஒன்றை தாங்கள் கட்டிய பாலத்தின் மேல் போகும்போது வெடிக்க வைக்க எத்தனிக்கையில் அதைத் தெரிந்து கொண்ட எதிரிகள் இவர்களை நோக்கிச் சரமாரியாகச் சுட்டார்கள்.

இதேபோலத்தான் நாங்கள் ஆமி வாகனங்கள் சிலதைத் தாங்கிய போது சுட்டோம். தாக்குதல் முடிந்ததும் வாகனங்களில் இருந்த ஆயுதங்கள் மற்றும் உபகரணங்களை எடுத்தோம். காயப்பட்டு சாகாமல் இருந்த சிலரை எங்கடை ஆக்கள் பிஸ்டலால் தலையில் சுட்டார்கள். நான் ரோட்டிலி ருந்து விலகி, கவிழ்ந்து கிடந்த ஜீப்புக்குள் இருந்து, இரண்டு SMG களை எடுத்தேன் அப்போது தான் மாறன் என்னைக் கூப்பிட்டான். டேவிட்! டேய்! இங்கே பார் ஒரு சிங்களவன் கிடக்கிறான்; இன்னும் சாகலை போல இருக்குது. நான் SMG களை எடுத்த ஜீப்பிலிருந்து ஒரு பத்தடி தூரத்தில் விழுந்து கிடந்தான் ஒருவன். கிட்டே போய்ப்பார்க்க அவன் சுவாசிப் பதும் இலேசாக முனகுவதும் தெரிந்தது. அவன் வயிற்றுப் பகுதியில் பெரிதாகக் காயமேற்பட்டி ருந்தது. தொடையிலும் இரத்தம் கசிந்தது. குப்புறக் கிடந்தவனை, மாறன் காலால் தள்ளித் திருப்பினான் அடிவயித்தில் இடதுபக்கமாக பெரிய துவாரமே ஏற்பட்டிருந்தது. இரத்தம் தோய் ந்த குடல் வெள்ளைச் சவ்வுகளுடன் வயித்தின் வெளியே துருத்திக் கொண்டு சரிந்து இரத்தம் மெதுவாக வெளியே கசிந்தது. மாறன் அவனைத் திருப்பியதாலோ என்னவோ அவன் கண்களை இலேசாக திறந்து எங்களைப் பார்த்தான். வத்துர....வத்துர என்று முனகினான். அவன் தண்ணி கேட்கிறான் என்று மாறன் சொன்னான். இதற்கிடையில் மாறன் சிங்கள வன் போட்டிருந்த பூட்ஸைக் கழட்டி தான் போட்டுக் கொண்டிருந்தான். அவன் கண்களை மூடுவதும் கொஞ்ச நேரத்தில் திறப்பதுமாக இருந்தான். சின்னப் பெடியன் பதினெட்டு அல்லது பத்தொன்பது வயதிரு க்கும். திடீரென்று இவனுக்கும் ஒரு தாய், தகப்பன் இருக்கும் என்ற உணர்வு வந்தது. இவனை இந்த நிலையில் பார்த்தால் என்னபாடுபடுவார்கள். பாவம்.

நளினியும் மற்றவர்களும் அபகரித்த ஆயுதங்க ளோடு வயலுக்குள் இறங்கி பனைக் காட்டை நோக்கி நடக்கத் தொடங்கினார்கள். நானும் நான் எடுத்த இரண்டு SMG களையும் SLR ஐயும் எடுத்துப் போகத் தயாரானேன். அந்த சிங்களப் பெடியன் சுற்றிவர என்ன நடக்குது என்றுணரத் தொடங்கியிருக்க வேண்டும். திடீரென ஆனால் பலவீனமாக, No!No Shoot Please!No!' என்று கெஞ்சினான். இதற்கிடையில் மாறன் சிங்களவனுடைய பூட்ஸைப் போட்டு விட்டு எழும்பி நின்றான்.

''டேவிட் எல்லாம் எடுத்துக் கொண்டு வெளிக்கிடு மற்றவர்களும் போறாங்கள். நியூஸ் போய் அவங்கள் ஹெலியில் வருவாங்கள். அதற்குள்ளே பனைக் காட்டுக்குள்ளே புகுந்து விடவேண்டும் என்றவன் சிங்களவன் முனகுவதைப் பார்த்து விட்டு ''இந்த நாய் இன்னும் சாகேலையா?'' என்றான்.

பிறகு பூட்ஸ் காலால் சிங்களவனின் முகத்தில் உதைத்தா சா! நாயே, சா! அந்தப் பெடியனின் உட ம்பு, இவன் ஒவ்வொருதரம் பூட்ஸ் காலால் உதைக்க வும் துடித்தது. மாறன் பல தரம் சிங்களவனின் முகத்தில் உதைத்ததில் சிங்களவனின் முகம் உருக்கு லைந்து தோலுரிந்து இரத்தத்தில் தோய்ந்திருந்தது. மாறன் என்னையும் வந்துதைக்கச் சொன்னான். ஆனால் நான் அவன் உதைப்பதையே பார்த்துக் கொண்டிருந்தேன். ''உனக்கு மச்சான் மிடில் கிளாஸ் திமிர். நீ இவங்களுடைய ஆதிக்கத்தாலே பாதிக்கப் படவில்லை. அதுதான் உதைக்கப் பஞ்சிப்பட்டுக் கொண்டு நிற்கிறாய்'' என்றான். தூரத்தில் ஹெலி வருவது கேட்டது. '' மாறன்! டேய்! வா போவம்: அவங்கள் வர்றாங்கள்''.

''இருடா இவன் இன்னும் சாகேலை. என்றபடி ஒருவித வெறியுடன் இன்னும் இடித்தான். அலெக் ஸும், கிரியும் தூரத்திலிருந்து எங்களை வரும்படி கூப்பிட்டாங்கள். நான் வருவதாக சைகை காட்டி னேன். கொஞ்சம் முதல் பார்த்த அந்தப் பெடியன்




முகமே இப்ப இல்லை. அங்கங்கே எலும்புகள் தெரிந்தன. இரத்தத்தில் முகம், கழுத்தெல்லாம் தோய்ந்திருந்தது. மாறன் ஒவ்வொரு தரம் உதைக் கவும் வெளியில் துருத்தியபடி இருந்த சிங்களவனின் குடல் இதர வயிற்றுப் பாகங்கள் குலுங்கின.

## குமரன்

நான் டி.வி. பார்த்துக் கொண்டிருந்தனான் சாடையாக நித்திரை வருகிற மாதிரி இருக்க கொஞ் சம் நித்திரையாகி விட்டேன். என்ன செய்கிறது? பகல் இரவு என்று வேலைக்குக் கூப்பிடுகிறாங்கள் நிம்மதியாகப் படுத்து வருஷக் கணக்காகி விட்டது. உழைக்கிற வயதிலே உழைத்து முன்னுக்கு வந்துட வேண்டும். எனவே சோஃபாவிலே நித்திரையாகிக் கொண்டிருந்தனான். கிளாஸ் கீழே விழுந்து உடைகிற சத்தம் கேட்டு எழும்பினேன். சோஃபா, கொஃபி, ரேபிள் எல்லாம் சாராயம் ஊத்தப்பட்டி ருக்குது. இவன்-மாயா- ஏதோ காக்கைவலி வந்த மாதிரி கையைக் காலை உதறிக் கொண்டிருக்கிறான். எனக் கு சோஃபாவைக் கிளீன் பண்ணுகிறதா, அல்லது இவனைக் கவனிக்கிறதா என்று ஒரே குழப்பம் ஆகிவிட்டுது. புது சோஃபா! சேலிலே ஆயிரத்து அறுநூறு ரூபாய்க்கு வாங்கினான். அதற்கு மேலே இந்த GST,PST,DDT என்று எல்லாமா இரண்டாயிருத் துக்குக் கிட்ட வந்துட்டுது. எனவே நான் குசினிக் குள்ளே ஓடிப்போய், இரும்பால் செய்த சாமான் எதுவும் இருக்குதா என்று தேடினேன். எனக்குத் தெரிந்து இவனுக்கு காக்கா வலி இல்லை. ஆனால் யார் கண்டது?

## மாயவன்

இப்ப சிங்களவன் இருந்த உருக்குலைந்த நிலை யில்தான் பிறகு மாறனும் நளினியும் குண்டு வெடித்து செத்த போதிருந்தார்கள். இருவர் உடலும் காம்பிற்கு கொண்டு வந்தபோது ஊதியிருந்தது. உடம்பு முழுக்க ஒரு நாவல் கலர் படிந்திருந்தது. செல்கள் உடல் முழுக்கத் தாக்கி உடலெல்லாம் உருக் குலை ந்து இரத்தம் உறைந்திருந்தது. மாறன் போட்டிருந்த வெள்ளி மோதிரம் அவனை அடையாளம் காட்டி யது; நளினியின் இரும்புக் காப்பு அவனை அடையா ளம் காட்டியது.

சிங்களவனை இன்னும் மாறன் உதைத்துக் கொண்டி ருந்தான். இவனுக்கு உண்மையாகவே வெறி. ஹெலி கிட்ட வந்து கொண்டிருக்குது; தரை மூலமாகவும் சப்போர்ட் வந்து கொண்டிருக்கும். ஆனால் இவன் வாறான் இல்லை. மற்றவங்கள் எல்லாம் வயல் தாண்டி பனைக் காட்டிற்கு கிட்டே போட்டாங்கள். இதனாலேதான் ட்ரக்ஸ் அடிக்காதே என்று மாறனிற் குச் சொன்னான். இவன் அடித்தால்தான் உசாரா அட்டாக் பண்ணலாம் என்றான். இப்ப போதையில் சுயநினைவில்லாமல் அந்தப் பெடியனை உதைத்துக் கொண்டிருக்கிறான்.

நான் என்னுடைய பிஸ்டலை எடுத்து சிங்களவனின் தலையில் குனிந்து சுட்டேன். குண்டு தாக்கிய வேகத் தாலோ அல்லது மிச்சமிருந்த உயிரும் விலகியதா லோ அவன் உடல் ஒரு முறை துடித்தது. வா, போவம் என்று மாறனைக் கூப்பிட்டேன்.

திடீரென அந்தச் சிங்களப் பெடியன் என்னை நோக்கி ஓடி வந்தான். கையில் ஒரு மொத்தமான இரும்புக் கம்பி நான் உடனே பாய்ந்து அந்தக் கம்பியைப் பிடுங்கினேன். பிஸ்டலால் சுடலாம் என்றால் பிஸ்டலைக் காணேலை! மாறனையும் காணேலை! சிங்களவனை அந்தக் கம்பியாலேயே அடித்தேன் ணங் என்று சத்தம் கேட்டது. சிங்களவன் சாய்ந்து விழுந்தான்.

எனக்கு எங்கிருந்தோ திடீரெனக் கோபம் பொங்கி வந்தது. கொஞ்சம் முதல் மாறன் என்னை வந்து சிங்களவனை உதைக்கச் சொன்ன போது கூட எனக்குப் கோபம் வரவில்லை. ஆனால் இப்போதோ கட்டுக்கடங்காத இனந்தெரியாத கோபம். காக்கா வின் இரத்தம் தோய்ந்த இலையான் மொய்த்த முகத்திலிருந்து கோபமாக குற்றஞ்சாட்டுகிற கண்கள் நளினியின் செத்த ஊதிய உடம்பு; மாறனின் உருக்குலைந்த இரத்தம் உறைந்த உடம்பு. எல்லாமே என் கண்களிற்கு முன்னால் வந்தன. அம்மாவின் கடிதம் உன்னை நம்பித்தான இருக்கிறோம் என்று சொல்லும். அம்மா பின்னாலேயே அப்பாவும் தங்கச்சியும் அவர்களுடன் நளினியும் மாறனும் காக்காவும் வந்து உன்னை நம்பித்தான் இருக்கிறோம் என்று திரும்பத் திரும்ப முதலில் மெது வாகவும் பிறகு இரைந்தும் சொல்ல சிங்களவனின் மேல் ஆத்திரத்துடன் பாய்ந்து இரும்புக் கம்பியால் அடித்தேன். முகத்திலும் மண்டையிலும் நெஞ்சிலும் திரும்பத் திரும்ப அடித்தேன். முதலில் பார்த்த சிங் களப் பெடியனின் முகமில்லை. அது மாறன் பூட்ஸ் காலால் உதைத்ததால் அவன் முகத்தில் ஏற்பட்டிருந்த காயங்கள் அவனுடைய முகத்தை உருக்குலையச் செய்திருந்தன. ஆனால் இவனின் முகம் வேறு மாதிரி இருக்குது.

ஆனால் நான் இரும்புக் கம்பியால் பல தரம் அடித்ததும் அவனின் முகம் இரத்தத்தில் தோய்ந்து உருக்குலைந்தது. பழையபடி மாறன் பூட்ஸ் காலால் உதைத்த சிங்களவனைப் போல- அதேநேரத்தில் இரத்தம் உறைந்த காக்காவின் முகத்திலிருந்து என்னைக் கோபத்துடன் ஊடுருவிய அதே கண்களைக் கொண்டு - இருந்தான். உண்மையில் அந்தச் சிங்களவனின் முகத்தின் தனித்தன்மையை அடையாளங்களை அவனின் இரத்தம் முகமூடி போல மறைக்க அவனின் முகம் ஒரே நேரதத்தில் மாறனின். நளினியின், காக்காவின் உருக்குலைந்த முகங்களைப் போலிருந்தது.

தூரத்தில் இன்னும் ஹெலியின் சத்தம் கேட்டது. நான் என்னுடைய பிஸ்டலைத் தேடத் தொடங்கினேன். டி.வி.யில் பாலமொன்று வெடித்துச் சிதற, ஒரு ட்ரெயின் ஆற்றில் விழுந்தது. தூரத்தில் நானும் மாறனும் பனைக் காட்டுக்குள் ஓடுவது மங்கலாகத் தெரிந்தது.

## கோடை மழை

வீசுகின்ற மழைக்காற்றில்
நிறைமாத பனைமரங்கள்
முறியாமல் சாய்ந்திட.

ஓலைகளை ஒருபக்கம்
ஒதுக்கிவிட்டு வீசுகாற்றை
உரசவிட்ட குதூகலிக்கும்
தென்னைகள்.
வீதியிலே திரிந்த
காட்டு மிராண்டி காகங்களும்
கோடை மழையால் ஒருங்கி
கூட்டுக்குள் சுருண்டு
கிடக்கும்
உத்துப் பார்க்கும் உயரத்திலிருந்து
ஆலாக்கூட்டம் இறங்கிவந்து
ஊரோடி திரிய
ஓர் பேரிடி
முழக்கமல்ல!
தொடர்ந்து பல வெடி
இது முழக்கமேயல்ல!!
அடியிலிருந்து ஆலா
ஆகாயம் நோக்க
காகக் கூட்டம் கலைந்து
கரைந்து கரைந்து பறக்க
பொறி வெடியில் அகப்பட்டு
குற்றுயிராய்க் கிடக்கும் என்
கதவினூடே ஓரியமன்!

— நசிகேதன்

## நம்பிக்கையற்ற நம்பிக்கை

துயரம் தாங்கிய என்னுயிர்
மக்கள்
உம்மிடை எழுந்த
நம்பிக்கை ஒலிகள். அடிபட அழிபட
எல்லைகள் தாண்டி பெரும் கடல் தாண்டி
அந்நிய மண்ணில் புதைகுழி தோண்ட
வெள்ளி பார்த்த அநியாய மனிதராய் நாம்
மௌனித்த கதை
என் சந்ததி அறியும்.

எங்கள் மண்ணில் எதிரியின் படைகள்
துயர் கதை படைக்க
எங்கள் இரத்தம்
பலவழி சென்று பழிதனை படைக்கும்
நாங்கள்
நெட்டை மரங்களென - கட்டிய கரங்களுடன்.

என் பேரன் என்னுணர்வை
நாளை மெய்த்துணர்ந்து
மனிதத்தை பயிர்செய்ய
நிலமில்லா நிலையில்
என்னை நோக்கி பெருமூச்சு விட
வெட்கித்தான் என் தலை குனியும்?

நடுங்கும் நிலையிலும்
உயர எழும் என் கரங்கள்
நாளைய என் மகளை
உறுதி கொள்ளச் செய்யும்.
மாய மலையாக அமையும் என் கனவுகள்
பொய்யாகி விடாது.
ஆசிய மனிதனென்ன. அன்னிய மனிதனையும்
மனிதநேயம் பற்றிக் கொள்ளும்
என் கனவு மெய்க்கும்.

என் கனவு மெய்க்க
என் மகள் துணிவுடன்
உயரும் தன்கரங்களை
மௌனமான வாழ்வுடன் போராடி
முடிவில்லா கதையை
முடிவாக்கிக் கொள்வாள்.

— தரங்கிணி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அரசியல் யாப்பு சீர்திருத்தங்களும் மலையக மக்களும் -09

# அரசியலமைப்பும் சிறுபான்மை மக்களும்

- பீ.ஏ.காதர்

### சோல்பரி அரசியலமைப்பு

இலங்கை சுதந்திரம் பெறும்வரை பிரித்தானிய சாம்ராஜ்ஜியத்தில் வாழ்ந்த அனைவரும் பிரித்தானிய பிரஜைகளாகக் கருதப்பட்டனர். ஆனால் சுதந்திர இலங்கைக்காக வரையப்பட்ட சோல்பரி அரசியலமைப்பு ''இலங்கைப் பிரஜைகள்'' யார் என்பதை வரையறுக்கும் பொறுப்பிலிருந்து திட்டமிட்டே நழுவிக் கொண்டது. டீ.எஸ். சேனநாயக்கவின் பிரஜாவுரிமை வரைபில் மலையகத் தமிழ் மக்கள் நாடவற்றவர்களாயினர். சோல்பரியின் (29ம்) பிரிவோ, மலையகத்தின் 8 பிரதிநிதிகளோ, இதனைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. ஒரு இனத்திற்கு சார்பான பெரும்பான்மையைக் கொண்டிருக்கும் ஒரு பாராளுமன்றில் சிறுபான்மை மக்கள் தமது நலன்களை பாதுகாத்துக் கொள்ள முடியாது என்ற உண்மையை நிரூபணமானது.

இடையே ஒரு விடயம்: 1948 பிரஜாவுரிமை சட்டத்தை எதிர்த்து மலையகத் தலைவர்கள் கூட 1952 லேயே சத்தியாக்கிரகப் போராட்டம் நடத்தினர். ஏனெனில் 1952ல் பாராளுமன்றம் கலைக்கப்படும் வரை அவர்களது பாராளுமன்ற உறுப்பினர் பதவி பறிக்கப்படவில்லை. 1950ம் ஆண்டு வாக்காளர் இடாப்பின்படி '52ல் தேர்தல் நடத்தப்படும் போதுதான் மலையக மக்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டிருப்பதனால் தம்மால் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற முடியாது என்பதை நடைமுறையில் உணர்ந்தனர்.

### 1972 - குடியரசு அரசியலமைப்பு....

சுதந்திர இலங்கையர்களால் வரையப்பட்ட முதலாவது யாப்பு இது எனக் கூறப்பட்டது. அதுவரை வரையப்பட்ட இலங்கை அரசியல் யாப்புகள் யாவும் வெள்ளையர்களாலேயே வரையப்பட்டது. இவ் யாப்பு முதற்தடவையாக கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வாவின் தலைமையில் இலங்கையரால் வரையப்பட்டது. ஆனால் இலங்கை ஒரு பல்தேசிய அரசு என்ற யதார்த்தத்தை முற்றாக நிராகரித்துச் சிங்கள - பௌத்த நாடாக இலங்கையைச் சித்தரித்த யாப்பாக இது அமைந்தது.

சிறுபான்மை மக்களின் நலன்களைப் பாதிக்கும் பின்வரும் விடயங்களை அது மேற்கொண்டது.

1. சோல்பரி யாப்பின் சிறுபான்மை மக்களின் நலன்களைப் பாதுகாக்கும் 29ம் பிரிவு 72ம் ஆண்டு யாப்பில் நீக்கப்பட்டது. அதற்கு நிகரான விசேட சட்டங்கள் எதையும் அது உருவாக்கவில்லை.
2. அதுவரை சாதாரண பாராளுமன்றச் சட்டமாகவிருந்த அரச கரும மொழிகள் சட்டம் அரசமைப்பில் இடம் பெற்றது. இதன் மூலம் சிங்கள மொழியே அரச கரும மொழி என்ற நிலைமை அரசமைப்பால் உறுதிப்படுத்தப்பட்டது.
3. அதுவரை எந்த மதமும் அரச மதமாக அரசமைப்பினால் அங்கீகரிக்கப்படவில்லை. 1972 அரசியலமைப்பின் 6ம் பிரிவின்படி பௌத்தத்திற்கு அதி உயர்ந்த (Foremost Place)இடம் வழங்கப்பட்டது.
4. அடிப்படை மனித உரிமைகள் சட்டங்களை உள்ளடக்கிய இலங்கையின் முதலாவது யாப் பான 1972 குடியரசு யாப்பு முதற்தடவையாக ''நபர்கள்'' ''பிரஜைகள்'' ஆகிய சொற்பதங்களை வேறுபடுத்தி ''பிரஜைகளுக்கு'' மாத்திரமே ''சிந்தனை சுதந்திரம், மத சுதந்திரம், பேச்சு சுதந்திரம் பிரசுரங்கள் வெளியிடும் சுதந்திரம், ஸ்தாபனப்படும் சுதந்திரம், வசிப்பிடங்களைத் தெரிவு செய்யும் சுதந்திரம், தமது கலாச்சாரத்தை மேம்படுத்தும் உரிமை ஆகியனவற்றை உறுதிப்படுத்தியிருந்தது.

இதன்படி பிரஜா உரிமையற்ற மலையக மக்கள் (நபர்கள்) இவ்வுரிமையற்றவர்களாகக் கருதப்பட்டனர்.

இச்சரத்தின் அடிப்படையிலேயே ஸ்ரீமா - சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் இந்தியக் கடவுச் சீட்டு பெற்றவர்களை நாய்களைப் போல பிடித்து ''பொலிஸ் வாகனங்களில் ஏற்றி சுதந்திரக் கட்சி அரசாங்கம் இந்தியாவுக்கு நாடு கடத்தியது.

### 1978 - ஜனநாயக சோஷலிச அரசியலமைப்பு

1972ன் பின்னர் ஆட்சிக்கு வரும் ஒவ்வொரு கட்சியும் தனது அதிகாரத்தை ஸ்திரப்படுத்திக் கொள்ளும் விதத்தில் அரசியல்யாப்பை மீள் வரையும் போக்கு உருவானது. 1977ல் ஆட்சிக்கு வந்த ஐ.தே.கட்சி அரசாங்கம் தனது ஆட்சிகாலத்தை நீடிக்கக் கூடிய விதத்தில் அரசியலமைப்பை மீள் வரைந்தது. இங்கு ஒரு அடிப்படை வித்தியாசம் தெரிகிறது. இந்தியாவிலே அம்பேத்கார் தலைமையில் அமைக்கப்பட்ட குழு அரசியல் யாப்பை வரையுமுன்னர் சகல சமூகத் தலைவர்களினதும் கருத்தை அறிந்தது. அத்துடன் நில்லாமல் கூடியவரையில் அவர்களது அபிலாசைகளுக்கு மதிப்பளித்து ''கூட்டு அபிலாசைகளின் தொகுப்பாக'' அது வரையப்பட்டது. அதனாற்றான் - சகல மக்களதும் அபிலாசைகளையும் அடிப்படையிலேனும், திருப்திப்படுத்தும் அம்சங்களை அது கொண்டிருப்பதனாற்றான் இன்றளவும் பாரிய மாற்றங்கள் இடம் பெறாமல் சில சில திருத்தங்களோடு வளைந்து கொடுத்து நிலைத்து நிற்கிறது.

ஆனால் இலங்கையில் மக்களின் கருத்துக்கள் கேட்கப்படுவது ஒரு சம்பிரதாயமாகவும் நாட்டின் நலனையோ, மக்களின் அபிலாசைகளையோ கருத்தில் கொள்ளாமல் கட்சி அரசியலதிகாரத்தை மாத்திரம் கருத்தில் கொண்டு ஆட்சியில் இக்கட்சிகள் மாறும் போதெல்லாம் யாப்புகள் மாறுவது நடைமுறையாகவும் இருந்து வருகிறது.

1978 அரசியலமைப்பு சிறுபான்மை மக்களுக்கு எந்த நன்மையையும் செய்து விடவில்லை. அடிப்படையில் சிங்கள - பௌத்த ஆதிக்கத்தை மேலும் ஸ்திரப்படுத்துவதாகவே அது அமைந்தது.

1. பௌத்த மதத்திற்கு வழங்கப்பட்ட அதியுயர்ந்த ஸ்தானத்தை உறுதிப்படுத்தியதுடன் நில்லாமல், பௌத்த சாசனத்தைப் பாதுகாக்கும் கடமை அரசுக்குரியது என மேலும் விதித்தது.
2. மொழி விவகாரத்தில் ''சிங்கள மொழியே அரச கரும மொழியாக இருக்கும் அதேசமயம் சிங்களமும் தமிழும் தேசிய மொழியாக இருக்கும் என இவ் யாப்புக் கூறிய போதும் சிங்களத்திற்கு வழங்கப்பட்ட உயர்ந்த இடத்தில் எதுவித மாற்றமும் இல்லை. 'தமிழுக்கு தேசிய மொழி' அந்தஸ்து என்பது சாராம்சத்தில் 1958 தமிழ் மொழிகள் (விசேட பிரமாணங்கள்) சட்டத்தில் வழங்கப்பட்டிருந்த அந்தஸ்தை விட உயர்வான எதையும் கொண்டிருக்கவில்லை.
3. மலையக மக்கள் தொடர்பான கெடுபிடியான பிரஜாவுரிமை சட்டங்கள் மாற்றியமைக்கப்படவில்லை. அடிப்படை மனித உரிமைகள் பற்றிய 14 (2) பிரிவில் ''வேறு எந்த நாட்டின் பிரஜையாகவும் இராமல்'' இந்நாட்டில் நிலையாகவும், சட்ட ரீதியாகவும் வாழ்வோருக்குப் பத்து வருடங்களுக்கு அரசமைப்பில் கூறப்பட்ட அடிப்படை மனித உரிமைகளை அனுபவிக்க'' ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஸ்ரீமா - சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் இந்தியப் பிரஜாவுரிமை பெற்றவர்களுக்கு இவ் ஏற்பாட்டால் எந்த பயனுமில்லை. ''நாடற்றவர்களுக்கு'' இது ஒரு தற்காலிக நிவாரணம் -1988ம் வருடம் வரை!
4. 1987 ஜுலை 29ந் திகதி செய்து கொள்ளப்பட்ட இலங்கை -இந்திய உடன்படிக்கையின்படி இரு முன்னேற்றங்கள் காணப்பட்டன. ஒன்று, சிறுபான்மைப் பிரச்சினைக்குத் தீர்வாக அதிகாரப் பரவலாக்கம் பிரதேச அடிப்படையிலான ஏற்பாடு என்பன முதற்தடவையாக அங்கீகரிக்கப்பட்டன. இரண்டு, இலங்கை ஒரு பல்தேசிய அரசு என்ற யதார்த்தம் ஏற்கப்பட்டது. இருப்பினும் மலையக மக்களின் உரிமை பற்றிய விவகாரத்தில் எதுவித கரிசனையும் 13வது திருத்தச் சட்ட மூலத்தில் அடங்கவில்லை.

பிரஜாவுரிமை பறிக்கப்பட்ட பின்னர் வாக்குரிமை இழந்த மலையக மக்களின் பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் மேலும் பெரும் பின்னடைவுற்றது.

### 1952 பொதுத் தேர்தல்

மலையக மக்களின் வாக்குரிமை பறிக்கப்பட்ட பின்னர் நடைபெற்ற முதலாவது தேர்தல் இதுவாகும். இதில் ஒரு மலையகப் பிரதிநிதி தானும் தெரிவாகவில்லை. 1947ல் தமிழ்ப் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்ட தேர்தல் தொகுதிகளிலிருந்து சொற்ப வாக்குகள் பெற்றுச் சிங்களப் பிரதிநிதிகள் பாராளுமன்றம் சென்றனர்.

உதாரணமாக 1947ல் மொத்தம் 24,295 பதிவு செய்யப்பட்ட வாக்காளரைக் கொண்டிருந்த நுவரெலிய தேர்தல் தொகுதியிலிருந்து 9,386 வாக்குகளைப் பெற்று திரு.தொண்டமான் தெரிவானார். அவரை எதிர்த்துப் போட்டியிட்டு தோல்வியடைந்த ஜே.ரி.ராஜரட்னம் 3,251 வாக்குகளைப் பெற்றார். 1952இல் இதே ஆசனத்திலிருந்து 3,852 வாக்குகள் பெற்ற பீ.பீ.சுமணதிலக்க வெற்றி பெற்றார். நுவரெலிய தேர்தல் தொகுதியின் பதிவு செய்யப்பட்ட வாக்காளர் தொகை 9,279 ஆக (38% வீதமாக) வீழ்ச்சியடைந்தது.

1956 பொதுத் தேர்தலிலும் ஒரு மலையகப் பிரதிநிதி தானும் தெரிவாகவில்லை.

வரும்

# ஜனாதிபதி சந்திரிகா இன்னும் தாமதித்தால்...

பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் இனப் பிரச்சினையைத் தீர்க்க முன்வைப்பதாகக் கூறும் அதிகாரப் பகிர்வை அடிப்படையாகக் கொண்ட அரசியல் தீர்வுத்திட்டம் இன்னும் வெளிவரவில்லை.

இன்னும் அது சரிவரத் தயாரிக்கப்படாததால் வெளியிடப்படவில்லை என அரசாங்கம் கூறுகிறது. இருந்தாலும் இன்றைக்கு மூன்று நான்கு மாதங்களுக்கு முன்பு எமது யோசனைகள் தயார் - தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமே அவை பற்றிப் பேசத் தயாரில்லை'' என இவ் அரசாங்கம் அறிவித்திருந்தது. ஆனால் தற்போது அதன் வேலைகள் இன்னமும் முடிவடையவில்லை எனக் கூறுகிறது.

அதற்கிடையே யுத்தத்தை மீண்டும் ஆரம்பித்துள்ளதோடு யுத்தத்திற்கான புதிய அர்த்தமொன்றையும் வழங்கியுள்ளது. அதாவது ''சமாதானத்திற்கான யுத்தம்'' என்பதே அதுவாகும். இதற்கு முன்பிருந்த ஐ. தே. க அரசாங்கம் கூறியதிலிருந்து இது வேறுபட்டது அல்ல. சமாதானத்தை ஏற்படுத்த யுத்தத்தில் வெற்றி பெற வேண்டுமெனவே அவர்களும் கூறினர்.

ஆனால் சந்திரிகா அரசு அதிகாரத்திற்கு வரும்போது யுத்தத்திலும், சமாதானத்திலும் அரசியலிலும் முக்கியமான மாற்றங்களைச் செய்யுமென்ற எதிர்ப்பார்ப்புகள் இன்னும் முழுமையாக முறிவடையவில்லை. இருந்தாலும் ஒரு வருடம் கழிந்த பின்பும் அவ் எதிர்ப்பார்ப்புகளை நிறைவேற்றுமென உறுதிப்படுத்தக் கூடிய நடவடிக்கைகளைப் பொதுசன ஐக்கிய முன்னணி அரசு இன்னும் எடுக்காதுள்ளது.

சந்திரிகாவின் தலைமையில் பொதுசன ஐக்கிய முன்னணி தேர்தலில் போட்டியிடும் போது தெளிவாகவே அதிகாரப் பகிர்வை அடிப்படையாகக் கொண்ட அரசியல் தீர்வொன்றினூடாக இனப்பிரச்சினையைத் தீர்ப்பதாகத் தெரிவித்தது.

அதற்கு எதிராக அன்று பாரிய பிரச்சாரமொன்றை எதிராளிகள் நடத்தினர். சந்திரிகாவின் வேலைத்திட்டம் சிங்கள மக்களைக் காட்டிக் கொடுக்கும் ஒன்றெனவும் 74% சிங்கள மக்கள் அதனை எதிர்ப்பார்கள் எனவும் அவர்கள் பெருங் குரலெழுப்பிக் கூறினர். நாடு இரு கூறாகப் பிளவுபடுமெனச் சித்திரிக்கும் அறிவித்தல்களைப் பத்திரிகைகளில் பிரசுரித்தனர்; சுவர்களில் ஒட்டினர்.

இருந்தாலும் சிங்கள, தமிழ், முஸ்லீம் மக்கள் ஏகோபித்த குரலில் சந்திரிகாவை ஏற்றுக் கொண்டனர். அது, அவர் யாரெனப் புரிந்து கொண்டேயாகும். அது அவர் என்ன செய்கிறார் எனப் புரிந்து கொண்டேயாகும். இனவாத சக்திகள் இதனை விடப் பலமானதாக இருக்கையில் தமிழ் ஆயுதக் குழுக்களைச் சந்திக்கச் சென்னைக்குச் சென்ற சந்திரிகா, ஐ.தே.க. கொண்டு வந்த மாகாண சபைகளுக்கு கொலை அச்சுறுத்தல்கள் மத்தியில் ஒத்துழைப்பு வழங்கிய சந்திரிகா, சிறுபான்மை மக்களின் உரிமைகளுக்காக முன் நின்ற சந்திரிகா, முறையான அதிகாரப் பகிர்வினூடாக இந்நாட்டின் இனப் பிரச்சினையைத் தீர்ப்பார் எனச் சமாதானத்தை விரும்பும் சக்திகளும், மக்களும் அவர்மீது எதிர்பார்ப்புக்களை வைத்தனர். அதனை அவர்கள் 62% மக்கள் ஆணை மூலம் உறுதிப்படுத்தினர். அச்சமாதானம் விரும்பும் சக்திகள் அதிகாரத்திற்கு வந்து சமாதானத்திற்கான நடவடிக்கை மேற்கொண்டது வரை உங்களுடன் இருந்தார்கள். ஆனால் யுத்தம் மீண்டும் ஆரம்பித்ததுடன் இன்று உங்களுடன் இருப்பது யாரென நாம் அடையாளங் கண்டு கொள்வது அவசியமாகும். உங்களதும், உங்கள் அரசின் அமைச்சர்களினதும் யுத்தவாதப் பேச்சுக்களுக்குக் கை தட்டுவது யாரென நாம் தற்போது அடையாளங் கண்டு கொள்வோம்! யுத்தத்தினால் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை அடித்து நொறுக்குமாறும், அதுவரை அரசியல் தீர்வைக் கொண்டு வர வேண்டாமெனவும் கூறுவது யாரென நாம் அடையாளம் கண்டுகொள்வோம்! அரசியல் தீர்விற்கு இன்னும் சந்தர்ப்பம் வரவில்லையெனக் குசு குசுப்போர் யாரென நாம் அடையாளங் கண்டு கொள்வோம்.

அன்று சந்திரிகா தலைமைக்குத் தேசத் துரோகக் குற்றச்சாட்டை சுமத்தித் தேர்தலிற்குச் சென்று தோல்வியுற்றவர்கள், தற்போது மீண்டும் வீதியில் இறங்கியுள்ளதை நாம் காண்போம். அன்று தீர்வொன்றிற்கு எதிராகச் சென்று மக்களினால் நிராகரிக்கப்பட்ட இவர்கள் மீண்டும் கூச்சல் போடுவதோ, தாம் இந்நாட்டின் 74 வீதத்தையோ அல்லது 67 வீதத்தையோ பிரதிநிதித்துவப்படுத்துவதாகக் கூறியேயாகும். இன்னும் பொய்ப்பிரச்சாரத்தையே தொழிலாகக் கொள்வோரும் இவர்களுடன் ஒன்று சேர்ந்துள்ளனர். அக்கூச்சலைப் பெருப்பித்துக் காட்டியது கடந்த காலத்தில் தோல்வியுற்ற சில பொதுசனத் தொடர்பு சாதனங்களே.

சந்திரிகா அவர்களே, அரசு தற்போது என்ன செய்கிறது? உங்கள் பழைய எதிரிகளுடன் ஒன்று சேர்ந்து யுத்தத்தின் மீது நம்பிக்கை வைத்து அதனை தொடர்ந்து நடத்துவதா? அல்லது சமாதானத்தை விரும்பும் சக்திகளின் மீது நம்பிக்கை வைத்துத் தைரியமாக விரைவானதும், தீர்மானகரமானதுமான நடவடிக்கை எடுப்பதா? இவ்விரண்டில் ஒன்றை உங்கள் அரசு தெரிவு செய்ய வேண்டும். உங்கள் அரசு இச்சக்திகள் இரண்டிற்குமிடையே இழுபறிப்படுவதைப் பார்க்கப் பொதுமக்கள் தயாரில்லை. இருந்தாலும் அவ்வாறானதொரு நிலைமை உள்ளதாகவே தற்போது தெரிகிறது.

உங்கள் அரசு இந்நாட்டின் சமாதானத்தை விரும்பும் சக்திகளை அடிப்படையாகக் கொண்ட அரசாகும். அவற்றைப் பலவீனமாக்குவதும் யுத்தவாத சக்திகளுடன் எந்தவிதமான முறையற்ற கூட்டிற்குச் செல்வதும் கேடானதாகும். தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் யுத்தத்தை ஆரம்பித்ததன் பின் தற்போது அவ்வாறான தொன்றே நடைபெற்று வருகிறது. அதனை நிறுத்த வேண்டும்.

இனப்பிரச்சினைக்கு அரசின் தீர்வை உடனடியாக முன் வைத்து அதற்காகத் துணிவாக முன் நிற்பதனூடாக மட்டுமே இதனைச் செய்ய முடியும். தற்போதே அது மிகத் தாமதமாகியுள்ளது.

இத் தீர்மானகரமான நடவடிக்கையை மேலும் தாமதிக்காது வட பகுதியிலும் தென்பகுதியிலும் உள்ள மக்கள் அரசின் மீது வைத்த நம்பிக்கையை உறுதிப்படுத்தத் தற்போதாவது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**'யுக்திய', (அரசியல் தீர்வுத்திட்டம் வெளியாக முன்பு எழுதப்பட்ட ஆசிரியர் தலையங்க இது.) 1995/07/30**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கல்முனை: காணிப் பதிவகத்தில் குழப்பங்கள்!

கல்முனை மேலதிக மாவட்டப் பதிவாளர் அலுவலகம் - இதுதான் இதன் முழுப்பெயராகும்.

இவ்வலுவலகத்தின் மூலம் விவாக/பிறப்பு/இறப்பு பதிவுகள் வழங்குதலும் அத்துடன் தொடர்புபட்ட ஏனைய நடவடிக்கைகளும் காணி உறுதிப் பதிவுகளும் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

பிறப்பு/ இறப்பு/விவாகப் பதிவுகளும் அதனோடு சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளும் பிரதேச செயலகங்களுக்கு கையளிக்கப்பட்டபடியால் தற்போது காணிப்பதிவு வேலைகளை மாத்திரமே (உறுதி) இவ் அலுவலகம் மேற்கொண்டு வருகிறது.

இவ் அலுவலகத்தில் மேலதிக மாவட்டப் பதிவாளராக (ADR) நீண்ட காலம் கடமையாற்றிய திரு.வே. கனகராஜா அவர்கள் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக மாவட்டப் பதிவாளராக 01.02.93ம் திகதி இடமாற்றம் பெற்றதால் திருகோணமலை மேலதிக மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் பிரதம எழுதுவினைஞராகக் கடமையாற்றிய திரு.எஸ் சரவணமுத்து அவர்கள் மேலதிக மாவட்டப் பதிவாளராகப் பதவியுயர்வு பெற்று 01.02.93ம் திகதி முதல் நியமிக்கப்பட்டார்.

யாழ்ப்பாணம் மாதகலைச் சேர்ந்த சரவணமுத்து அவர்கள் நல்ல மனிதர், பழகுவதற்கு இனியவர், கோபம் வரத் தெரியாத ஒரு கனவான். ஆனால் நிர்வாகத்திறன் இவரிடம் பூஜ்ஜியமே. இவரின் நிர்வாகக் காலத்தில் கல்முனை காணிப்பதிவகம் நிலைகுலைந்து சென்றது. குடியும் கும்மாளமும் கொடிகட்டிப் பறந்தன. அருகிலுள்ள அலுவலகங்களிலிருந்தும் குடிப்பதற்காக ஊழியர்கள் சிலர் இங்கே வருமளவிற்கு இவ் அலுவலகம் பிரசித்தம் பெற்றிருந்தது.

காணிப் பதிவுக்காகச் சமர்ப்பிக்கப்படும் உறுதிகளின் இணைப் பிரதி (Duplicate) (சட்டப்படியான முத்திரைப் பிரதி) பெற்றுக் கொள்ளாமலேயே உடனுக்குடன் பதிவு செய்து கொடுத்து நொத்தாரிசுமார்களையும், பல சட்டத்தரணிகளையும் உற்சாகமூட்டினார். அத்துடன் தானும் அவர்களின் ஆழமான அன்பிற்கும் பேரபிமானத்திற்கும் உரியவரானார்.

அலுவலர்கள் அலுவலகத்திற்கு வரும் விடயத்திலும் செல்லும் விடயத்திலும் விரும்பியவாறு நடந்து கொள்வதற்கு பூரண அனுமதியளித்திருந்தார். தினவரவுப் புத்தகம் நாளாந்தம் கோடிடப்படுவதில்லை. இதன்மூலம் அங்கு கடமைபுரியும் பல உத்தியோகத்தர்கட்கு நல்ல ஐயாவாகத் திகழ்ந்தார்.

இவரின் நடவடிக்கைகளை துல்லியமாக கவனித்து வந்தார் வட கிழக்கு வலய உதவிப் பதிவாளர் நாயகம் திரு.எஸ்.முத்துக்குமாரன் அவர்கள். இவரை நேரடியாக அழைத்தும், தொலைபேசி மூலமும் பல தடவைகள் அறிவுரைகள் மேற்கொண்ட போதிலும் பலன் கிடைக்கவில்லை.

இது இவ்வாறிருக்க சேவை நீடிப்புக்கு விண்ணப்பித்தார் சரவணமுத்து அவர்கள். உரிய காலத்திற்கு முன்பு விண்ணப்பிக்காததும் இவரின் சேவையில் திருப்தியின்மையைக் கருத்திற் கொண்டும் சிபார்சினை உதவிப் பதிவாளர் நாயகத்தினால் வழங்க முடியவில்லை.

இவர் மூலம் நன்மை பெற்றவர்கள் அவர்களின் அரசியல் செல்வாக்குகளைப் பிரயோகித்து இவருக்கு சேவை நீடிப்பைப் பெற்றுக் கொடுத்து தங்கள் சௌகரியத்தை தொடர்ந்தும் உறுதிப்படுத்திக் கொள்ள பகீரதப் பிரயத்தனம் செய்தனர். முடிவு பூச்சியமானது. 02.04.95 முதல் திரு சரவணமுத்து அவர்கள் சேவையிலிருந்து ஒய்வு பெறச் செய்யப்பட்டார்.

கல்முனை மேலதிக மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் மேலதிக காணிப் பதிவாளராகவும், பிரதம எழுதுவினைஞராகவும் கடமையாற்றிய திரு.வே.உமாபதி அவர்கள் தற்போது மேலதிக மாவட்டப் பதிவாளராக 02.04.95ம் திகதி முதல் பதிவாளர் நாயகத்தினால் நியமனம் செய்யப்பட்டார்.

சரவணமுத்து அவர்களின் நிர்வாகச் சீர்கேடு காரணமாக அதிகம் மனம் நொந்தவர்களில் உமாபதி பிரதானமானவர். இதனால் சரவணமுத்துவின் சந்தேகப் பார்வைக்கு உள்ளானவர்.

உமாபதி அவர்கள் மிகவும் நேர்மையானவர். சரியெனப்படுவதை உடன் செய்பவர். கண்டிப்பானவர். எக் கருத்தினையும் நேரிடையாகச் சொல்லக் கூடியவர் என்பதாலும் நிலைகுலைந்து போயுள்ள அலுவலகத்தை சீராக்குவதற்கு பொருத்தமானவர் என்பதாலும் வடகிழக்கு வலய உதவிப் பதிவாளர் நாயகம் அவர்கள் மேலதிக மாவட்டப் பதிவாளராக நியமனம் செய்வதற்கு பதிவாளர் நாயகத்திற்கு பூரண சிபார்சு செய்திருந்தார்.

இவர் மேலதிக மாவட்டப் பதிவாளராக நியமிக்கப்பட்டது சரவணமுத்து அவர்களின் காலத்தில் சௌகரியம் பெற்றவர்கட்டும், நன்மை அடைந்தவர்கட்கும் மகிழ்ச்சியை உண்டு பண்ணவில்லை.

உமாபதி அவர்கள் 30.05.95ம் திகதி மேலதிக மாவட்டப் பதிவாளர் என்ற அடிப்படையில் சக உத்தியோகத்தர்களுடன் அலுவலகம் தொடர்பாக கலந்துரையாடல் ஒன்றை நடாத்தினார். பழைய நிர்வாகச் சீர்கேடுகளைச் சீர் செய்து புதிய கோணத்தில் அலுவலகத்தை நடைமுறைப்படுத்த ஒத்துழைக்குமாறு வினயமாக வேண்டிக் கொண்டார். அதில் ஒரு அலகாக காரியாலய திறப்பினை பொலிஸ் நிலையம் சென்று பெறுவதற்கும்/ ஒப்படைப்பதற்கும் சிற்றூழியர் மூவருக்கும் கடமை ஒழுங்கினையும் வகுத்திருந்தார்.

இவரின் தலைமைத்துவத்தை ஆட்டம் காணச் செய்ய வேண்டும் என்று நினைத்தார்களோ என்னவோ 22.06.95ம் திகதி சிற்றூழியர் மூவரும் சொல்லாமல், கொள்ளாமல் அலுவலகத்திற்கு வராமல் விட்டார்கள். உரிய வேளைளக்கு அலுவலகம் திறக்கப்படவில்லை இதனால் தாமே பொலிஸ் நிலையம் சென்று முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்து விட்டு (முறைப்பாட்டிலக்கம் 3571) திறப்பைப் பெற்று காலை 9.30க்கு அலுவலகத்தைத் திறந்து நடவடிக்கைகளை மேற்கொண்டார் உமாபதி அவர்கள். இதுவிடயமாக மூன்று சிற்றூழியர்களுக் கெதிராகவும் திணைக்களத்தின் மூலம் ஒழுங்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. - ஷ -

## படையதிகாரிகள் எதிர்ப்பு

இராணுவத்தின் உயர் அதிகாரிகள் சிலர் மத்தியில் உள்ள பல்வேறு கருத்து முரண்பாடுகளைத் தூண்டிவிட்டு அதற்காக அரசின் பொறுப்பு வாய்ந்தவர்களைத் தலையிட வைக்கும் நுண்ணிய உபாயகரமான இயக்கமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மிகுந்த நம்பிக்கையான தகவல் வட்டாரமொன்றிலிருந்து யுக்தியவிற்குத் தெரிய வருகிறது.

அரசியல் தீர்வொன்றிற்கு எதிரான இராணுவத்தின் அதிகாரிகளில் சிறு தொகையினரே இவ்வியக்கத்திற்கு முன்னுரிமை கொடுத்துச் செயற்படுகின்றனர் எனவும் சில பொதுசனத் தொடர்பு நிறுவனங்களின் உதவியும் கிடைத்துள்ளதாகவும் தெரிய வருகிறது.

**யுக்திய - 950806**

## கிழக்குப் பல்கலைக்கழகப் பிரச்சினை

கிழக்கு மாகாணத்தில் சிறந்த மத்திய மகா வித்தியாலயமாகத் திகழ்ந்த ஒரு கல்விக் கூடத்தை கிழக்குப் பல்கலைக்கழகக் கல்லூரியாக மாற்றிய பொழுது எம்மக்களிடையே பாரிய ஏமாற்றம் ஏற்பட்டபோதும் இப்பகுதி மக்கள் தாமாகவே முன் வந்து தம் காணிகளை பல்கலைக்கழகத்திற்கு கையளித்துள்ளனர். இதற்கு காரணம் கூடிய விரைவில் இங்கு ஒரு உன்னத பல்கலைக்கழகம் உருவாகும் என்ற எதிர்பார்ப்பிலேயேயாகும். ஆனால் இப்பல்கலைக்கழகத்தின் இன்றைய நிலை என்ன? இதற்கு யார் பொறுப்பு? நாட்டின் இன்றைய நிலையைத் தொடர்ந்தும் குறை கூறிக் கொண்டிருப்பது சரிதானா? மிகமோசமான சூழ்நிலைகளில் கூட யாழ்ப் பல்கலைக்கழகம் பெரும் முன்னேற்றம் அடைந்துள்ளது எமக்கு நல்ல எடுத்துக்காட்டாகும். அதனுடன் ஒப்பிடுகையில் எமது கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வீழ்ச்சி மிக வேதனையானதும், வெட்கப்படக்கூடியதாகவும் இருக்கின்றது.

தற்பொழுது இப்பல்கலைக்கழகத்தில் 700க்கும் குறைவான மாணவர்களே தமது கற்கை நெறிகளில் ஈடுபடுகின்றனர்.. விவசாய பீடத்தின் முதலாம், இரண்டாம் ஆண்டுகளில் முறையே ஐந்து இரண்டு மாணவர்கள் மாத்திரமே உள்ளனர். ஆனால் இப்பீடத்தில் ஐம்பதிற்கும் அதிகமான விரிவுரையாளர்களும் ஊழியர்களும் உள்ளனர். இதன் காரணமாக இவ்விவசாயபீடம் இப்பல்கலைக்கழகத்தில் இருந்து பிரிக்கப்பட்டு யாழ் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்படும் நிலையில் உள்ளது. தற்பொழுது கல்வி பயிலும் ஐந்து முஸ்லிம் மாணவர்களும் வேறு பல்கலைக்கழகங்களுக்கு மாறுதலை எதிர்பார்த்து இருக்கின்றனர். கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வீழ்ச்சிக்குக் காரணம் என்ன? சடுதியான, அதிரடி நடவடிக்கையின் மூலம் பல்கலைக்கழகத்தின் இரு பீடங்களை மட்டக்களப்பில் இருந்து வந்தாறுமூலைக்கு மாற்றியதன் மூலம் முஸ்லிம் மாணவர்களுக்கும், விரிவுரையாளர்களுக்கும் ஏற்பட்ட தாக்கங்கள் என்ன? என்பது பற்றி எல்லாம் அதிகார மட்டத்தில் உள்ளவர்கள் சிறிதும் சிந்திக்கவில்லை. இவர்கள் வடக்கு, கிழக்கு வேற்றுமையை வளர்த்து, தங்கள் ஆடம்பர வாழ்க்கைக்கும், அதிகாரத்திற்கும் எந்தவித பாதிப்பும் வராமல் பாதுகாப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்து வந்திருக்கிறார்கள் என்பது நன்கு புலனாகின்றது.

யதார்த்த நிலையை உணராது மலினத்துவ முடிவுகளை நிறைவேற்ற முன்னின்றதால் மாணவர்களும், விரிவுரையாளர்களும் விரக்தி நிலையை அடைந்து பெரும் பீதிக்குள்ளாகி இருக்கின்றார்கள். கல்வி நிலை தடைப்பட்டுள்ளது. பீடங்களை இடமாற்றுவதில் சிறிது அக்கறையுடன் செயற்பட்டிருந்தால் ஒலுவிலில் ஒரு பல்கலைக்கழகம் அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்றிருக்க முடியாது. முஸ்லிம் மாணவர்கள் பிரிந்து செல்வதற்கான காரணங்களை இவர்களே ஏற்படுத்திக் கொடுத்துள்ளனர் என்பதை யாராலும் மறுக்க முடியாது. தற்பொழுது கூட முஸ்லிம் மாணவர்களுக்கும், ஊழியர்களுக்கும் வெள்ளிக்கிழமைகளில் அவர்களுக்கு அனுமதிக்கப்பட்ட இரு மணித்தியால விடுமுறை இரத்துச் செய்யப்பட்டுள்ளது. இச்சந்தர்ப்பத்தில் சரிநிகர் 75வது சிறப்பிதழில் 'அடுத்த காலடி' என்று தலைப்பிடப்பட்ட கட்டுரையின் ஒரு பகுதியை நினைவுபடுத்துவது மிகப் பொருத்தமாகும். ''தங்களுடைய தனித்துவத்தையும், உரிமைகளையும் வலியுறுத்துகின்ற தமிழ் மக்கள் முஸ்லிம் மக்களினதுஉரிமைகள் தொடர்பாக தங்களது பொறுப்புணர்வுகள் என்ன என்பதையும் சிந்திக்க வேண்டும்.

இப்பகுதி மக்கள் சார்பாகக் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நிர்வாகிகளைத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்வது என்னவெனில் எமது இளம் சந்ததியினரின் எதிர்காலம், இச்சமூகத்தின் விடிவு, சமூகங்களின் ஒற்றுமை, மக்களின் அபிலாஷை. இம்மண்ணின் வேர் என்பன யாவும் இப்பல்கலைக்கழகத்திலேயே தங்கியுள்ளது. இவற்றிற்காக உங்களின் மேலான முயற்சிகளையும், தியாகத்தினையும் சிறிதளவேனும் தந்துதவுங்கள். மாணவர் சமூகத்திற்காகவும் இப்பகுதி மக்களுக்காகவும் உறுதியான, தீர்க்கமான, காத்திரமான முடிவுகளை எடுக்க முன் வாருங்கள். முடியாவிடில் தயவு செய்து விட்டு விலகுங்கள்.

**பொன். ரா. நாதன்**
**செங்கலடி**

## போருக்கு இன்னொரு பேர் சமாதானம்!




யுத்தத்துக்கு நிதி சேர்க்க சு(த்துமாத்)து நெலும் இயக்கம் 250 ரூபாவுக்கு விற்பனை செய்யும் ஸ்டிக்கர் மேலேயுள்ளது. சமாதானத்துக்கும் அரசியல் தீர்வுக்குமான இயக்கம் என்றவாறு ஆரம்பிக்கப்பட்ட சு(த்து மாத்)து நெலும் இயக்கம் சென்ற வாரம் பாணந்துறையில் பாதயாத்திரை ஒன்றை மேற்கொண்டது. இந்த யாத்திரையில் இயக்கத்தின் அமைப்பாளரான மங்கள சமரவீரவுடன் ஜெனரல் கொப்பேகடுவவின் மனைவி லாலி கொப்பேகடுவவும் பங்கெடுத்தார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சரிநிகர்
SARINIHAR

## செயல்; அதுவே சிறந்த சொல்!

இனத்துவப் பிரச்சினைத் தீர்வுக்கான அரசாங்கத்தின் திட்டம் இப்போது வெளியாகி விட்டது. இந்தத் தீர்வுத் திட்டத்தை உத்தியோகபூர்வமாக நாட்டு மக்களுக்குச் சமர்ப்பித்து ஜனாதிபதி சந்திரிகா அவர்கள் கடந்த வியாழக்கிழமை ஆற்றிய உரை அவருடைய உறுதியையும் கடப்பாட்டையும் வெளிக்காட்டிற்று. தேர்தல் வெற்றிகளுக்குப் பிற்பாடு நாட்டு மக்களுக்கு கடந்த வருடம் அவர் ஆற்றிய உரையைச் சில அம்சங்களில், நீண்ட காலங்களுக்குப் பிற்பாடு, இவ்வுரை நினைவு படுத்தியது. இலங்கையின் முன்னாள் ஜனாதிபதிகள் பிரதமர்கள் எவருமே இத்தகையதொரு துணிச்சலையும் அரசியல் கடப்பாட்டையும் வெளிக்காட்டுமளவுக்கு விரியங் கொண்டவர்களாக இருக்கவில்லை.

ஜனாதிபதியின் தீர்வுத் திட்டத்துக்குத் தென்னிலங்கையின் புத்திசீவிகள், எழுத்தாளர், பத்திரிகையாளர், பல்கலைக்கழகக் கல்விமான்கள் போன்ற பல தரப்புகளிலிருந்தும் ஆதரவு கிடைத்திருக்கிறது. எல்லா மட்டங்களிலும் இத் தீர்வுத்திட்டத்துக்கு ஆதரவைப் பெற அரசாங்கம் பல ஆலோசனைக் குழுக்களையும் பிரசாரக் குழுக்களையும் அமைத்துள்ளது. திட்டத்திற்கான எதிர்ப்பும் இதுவரையில் வலியதாக எழவில்லை.

இப்போது ஜனாதிபதி சந்திரிகா முன்வைத்துள்ள தீர்வுத்திட்டம் இரண்டு அம்சங்களில் முக்கியத்துவம் வாய்ந்தது. முதலாவதாக, இலங்கை - இந்திய ஒப்பந்தம் போலன்றி எத்தகைய வெளிப்புற நிர்ப்பந்தங்களுமின்றி வரையப்பட்டுள்ளது. இரண்டாவதாக, இனத்துவப் பிரச்சினைக்குத் தீர்வாக இதுவரை முன்மொழியப்பட்டுள்ள திட்டங்களுள் இதுவே முன்னேற்றகரமானது. நேரடியாகப் பெயர் குறித்துச் சொல்லப்படாவிட்டாலும் இது ஒரு சமஷ்டித்திட்டம் தான் என்பது திட்டத்தை வாசிக்கிற எவருக்கும் புரிந்து விடும். இந்திய சமஷ்டியைப் போலன்றி மாநில அரசை (பிராந்திய சபை என்று வேண்டுமானால் சொல்லிக் கொள்ளலாம்!) கலைக்கிற அதிகாரம் மத்திய அரசிடம் இருக்காது என்பதால் இந்திய சமஷ்டியமைப்பை விடவும் இப்போது முன்மொழியப்பட்டுள்ள அரசியல் தீர்வுத் திட்டம் மிகவும் முன்னேற்றகரமானது என்பதில் ஐயமில்லை. தமிழீழத்துக்கு மாற்றாக அர்த்தபூர்வமான ஒரு சமஷ்டி அரசியலமைப்பை அரசாங்கம் முன்வைத்தால் அதுபற்றிச் சாதகமாகப் பரிசீலனை செய்வோம் என்று பல சந்தர்ப்பங்களில் உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ள விடுதலைப்புலிகள் இத்தீர்வுத்திட்டத்தைப் புறங்கையால் தட்டி விட முடியாது. தீர்வுத்திட்டம் அவர்களுக்கு "உத்தியோகபூர்வமாக" அறிவிக்கப்படவில்லை என்பதால் அவர்கள் "உத்தியோக பூர்வமாக" மௌனம் சாதிக்கலாம். எனினும் தீர்வுத்திட்டம் பற்றிய ஆரோக்கியமான அடுத்த கட்ட வளர்ச்சிக்கு அரசும் விடுதலைப் புலிகளும் இணக்கப்பாட்டுக்கு வருவது ஒரு முன் நிபந்தனையாக இருக்கும், என்பது இப்போதைய அரசியலின் அடிப்படை விதியாகும்.

யுத்தம் தொடருமானால், அரசாங்கத்துக்கும் புலிகளுக்கும் இடையே இணக்கப்பாடு ஏற்படாமல் போகுமானால், தீர்வுத் திட்டத்தை எதிர்க்கிற சிங்கள இனவாதிகளின் பலமே ஓங்க நேரிடும். இத்தகைய சூழலில் சிங்கள இனவாதிகளின் கரங்களைப் பலப்படுத்தும் நடவடிக்கைகளுக்குத் துணைபோகும் எந்த நடவடிக்கைகளும் விலக்கப்பட வேண்டும்.

இப்போது அறிவிக்கப்பட்டுள்ள தீர்வுத்திட்டத்திலும் தெளிவு படுத்தப்பட வேண்டியதும் விரிவு படுத்தப்பட வேண்டியதுமான அம்சங்கள் உள்ளன. குறிப்பாக அதிகாரப் பரவலாக்கத்தின் புவியியல் எல்லைகள், தேசிய நிதி ஆணைக்குழு ஆகியன மிகவும் அடிப்படையான விஷயங்களாகும். இவை பற்றித் தெளிவுபடுத்தப்படுவது அவசியம்.

எத்தகைய நெருக்கடி வந்தாலும் இந்தத் தீர்வுத்திட்டம் கிழித்தெறியப்படாது என்று சூளுரைத்திருக்கிறார் ஜனாதிபதி. வரவேற்கிறோம்.

தீர்வுத் திட்டத்தை எவ்வாறு அவர் செயல்படுத்தப் போகிறார் என்பதில் தான் எல்லாமே தங்கியிருக்கிறது. சிங்கள இனவாதிகளையும் யுத்த மோகிகளையும் திருப்திப்படுத்திக் கொண்டே அரசியல் தீர்வுத் திட்டத்தை முன்னெடுப்பது இயலாத காரியம் என்பதை ஜனாதிபதி உணர வேண்டும்.

இத்தகையவர்களைத் திருப்திப்படுத்த முயன்றதனாலும் தங்களுடைய அரசியல் எதிர்காலத்துக்குப் பயந்து சிங்கள பௌத்த மலினத்துவ அரசியலுடன் சமரசம் செய்தமையாலுமே கடந்த காலத்துத் திட்டங்களும் ஒப்பந்தங்களும் காற்றில் பறந்தன.

இனப்பிரச்சினையைத் தீர்க்க எடுக்கப்படும் ஆக்கபூர்வமான முயற்சிகளுக்கு இறுதிவரை துணை நின்று சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்த முயற்சிப்பது பொறுப்புணர்வு மிக்க தமிழ், முஸ்லீம் அரசியலாளர் அனைவரதும் கடமையாகும். இதற்கு விடுதலைப் புலிகளும் விலக்கல்ல. பிரச்சினையைத் தீர்க்க முடியாமைக்கான 'பழி'யை சிறுபான்மை மக்கள் மீது சுமத்திவிட முடியாத வகையில் அரசியல் முன்னுணர்வோடு நடந்து கொள்ள வேண்டிய காலத்தின் கட்டாயம் எம்மோடு உள்ளது.

ஜனாதிபதியைப் பொறுத்தவரை திட்டத்தை அவர் எப்படி நடைமுறைப்படுத்தப் போகிறார் என்பதிலும் பல்வேறு போக்குகளையும் முகங்களையும் கொண்ட பொ.ஐ.முன்னணி என்ற கூட்டமைப்பினுள் சமநிலையை எவ்வாறு அவர் பேணப் போகிறார் என்பதிலும்தான் அடுத்த கட்டம் தங்கியிருக்கிறது.

## அரசியல் தீர்வுப் பொதி! (முன்பக்கத் தொடர்ச்சி)

எல்லைகளை மீள வரைவதன் மூலம் - இதன் அர்த்தம் தமிழ், சிங்கள, முஸ்லீம் மக்களின் பாதுகாப்பு, நிலம் மற்றும் கலாசார நலன்கள் பேணப்படும் என்பது - வடக்குக் கிழக்கில் தமிழ், முஸ்லீம், சிங்கள மக்களிடையே நல்லுறவு பேணப் படும் என்று அரசாங்கம் கருதினால் மலையகத்திலும் இத்தகைய மீள் வரைவு செய்யப்பட வேண்டும். மலையக மக்களும் தாம் தனித் துவமான இனத்துவக் குழு என்ற அடிப்படையில் தமது பாதுகாப்பு, கலாசாரத் தனித்துவம், அரசியல் பிரதிநிதித்துவம் என்பவற்றைப் பேண உரித்தானவர்கள். இந்த அம் சத்தில் தொண்டமான் அவர்களும், சந்திரசேகரன் அவர்களும் அடிப் படைக் கருத்தொருமை கொண்டவர் களாகவே காணப்படுகிறார்கள். தீர்வுப்பொதி குறித்த அவர்களது எதிர்வினை இதனால் முக்கியத் துவம் பெறுகிறது.

தொண்டமான் அவர்கள் ஜனாதிபதி க்கு அனுப்பிய கடிதத்தில் இதனைச் சுட்டிக் காட்டியிருந்தார். அரசியல் தீர்வுப் பொதியில் வடக்குக் கிழக்குத் தமிழ் மக்களுக்கும் கிழக்கு முஸ்லீம் மக்களுக்கும் உரிய அரசியல், மாநில ஏற்பாடுகள் இருக்கின்றன என் பதால் மலையகத்தில் இருந்து எழும் கேள்வி நியாயமானது. எல்லைப் பிரிப்பு என்பது பிரச்சினையானது இலங்கை சுதந்திரம் பெற்ற போது இருந்த எல்லைகளைப் பேணுவது இன்னொரு வழி முறையென்று தொண்டமான் அவர்கள் தெரிவித்து ள்ளார்.

அதிகாரப் பரவலாக்கல் அரசிய லைப் பொறுத்தவரை மாநில மத்திய அரசுகளிடையேயான கயிறிழுப்பு க்கான சாத்தியங்கள் இல்லாத வகை யிலேயே பரவலாக்கல் இடம்பெற வேண்டும். இலங்கை - இந்திய ஒப் பந்தத்தின் பிற்பாடு உருவான வட க்கு - கிழக்கு மாகாண அரசு குறுகிய காலத்தில், மிகுந்த நெருக்கடிக்கும் மத்தியில் பரவலாக்கப்பட்ட அதி காரங்களை முற்றாகப் பயன்படுத்த முற்பட்ட போதுதான் மத்திய அரசின் அதிகாரத்தைப் பரவலாக்கல் தொடர்பான விருப்பின்மை வெளிப் பட்டது.

வடக்குக் கிழக்கில் தெருக்களை அபி விருத்தி செய்யவும் நிர்மாணிக்கவும் வடக்குக் கிழக்கு மாநில அரசு முய ன்றபோது தேசிய நெடுஞ்சாலைகள் (National High Ways) அவை என்பதால் அது மத்தியஅரசின் ஆணைக்குட் பட்டது என்று சொல்லி மத்திய அரசு மறுத்து விட்டது. முக்கியமான தெரு க்களை தேசிய நெடுஞ்சாலைகள் என்று வேறு மத்திய அரசு பிரகடன ப்படுத்தி விட்டிருந்தது!

இப்போது முன்வைக்கப்பட்டுள்ள தீர்வுப் பொதியில் மத்திய அரசுக்கு ஒதுக்கப்பட்ட அதிகாரங்களில் சில வற்றுக்கும் மாநில அரசுக்கென வழங்கப்பட்ட அதிகாரங்களில் சில வற்றுக்கும் இடையே முரண் பாடுகள் காணப்படுகின்றன. இந்த முரண்பாடுகள் பரவலாக்கப்பட்ட அதிகாரத்தை மீண்டும் வேறு வழி களால் பறித்தெடுப்பது போலாகும்.

உதாரணங்கள் சிலவற்றைப் பார்க்க லாம்.

வீட்டு வசதிகளும் வீடமைப்பும் மாநில அரசுக்கு வழங்கப்பட்டு ள்ளது. எனினும் விசேட தேசிய வீடமைப்புத் திட்டங்கள் மத்திய அரசிடமே இருக்கும்.

விசேட தேசிய வீடமைப்புத்திட்டம் என்று மத்திய அரசு கருதும் எந் திட்டத்தின் மீதும் மாநில அரசுக்கு அதிகாரம் கிடையாது. இத்தகைய வீடமைப்புத் திட்டங்கள் யாருக்கு வழங்கப்படும் என்பது பற்றியும் மாநில அரசுக்கு அதிகாரம் கிடை யாது. வடக்குக் கிழக்கில் படையி னர் நிர்மூலமாக்கிய வீடுகளின் எண்ணிக்கையை மட்டும் கருத்தில் கொண்டாலே வீடமைப்பு, வீட்டு வசதிகள் முற்றாகவே மாநில அரசிடம் விடப்பட வேண்டும்.

கனிப்பொருள் வளங்களும் சுரங் கங்களும் மத்திய அரசிடமே இருக்கும். எனினும் இவை மீதான வரிவிதிப்பை மாநில அரசு பொறுப்பேற்கலாம். எவ்வளவு வரி என்று யார் தீர்மானிப்பது என்பதில் குழப்பமுள்ளது. மேலும் தேசிய வளங்கள் மத்திய அரசிடமே என்று ஏற்றுக் கொள்ளப்பட்டுவிட்டால் முறைப்படி மாநில அரசுக்கு அவை மீதான எவ்வித நியாயாதிக்கமும் கிடையாது.

சிறு துறைமுகங்களும் இறங்குதுறை களும் மாநில அரசுக்கு வழங்கப் படுகிற அதேவேளை விமான நிலை யங்கள், துறைமுகங்கள் மற்றும் சர்வதேச இறங்குதுறைகள் மத்திய அரசிடம் இருக்கும். திருகோண மலையும் காங்கேசன்துறையுமே வடக்கு கிழக்கு மாநிலத்தில் உள் ளன. எனினும் திட்டத்தின்படி அவை மத்திய அரசுக்குரியவை. சிறு துறைமுகமான பருத்தித்துறை மட் டுமே மாநிலத்தின் அதிகாரத்துள் வரும். ஊர்காவற்றுறை, உடுத்துறை போன்ற பழைய துறைமுகங்களை மாநில அரசு மீளவும் நிர்மாணிக்கிறது என்று வைத்துக் கொண்டாலும் சென்னையிலிருந்து அல்லது வேதாரணியத்திலிருந்து ஒரு மூட்டை மைசூர் பருப்பை இறக்கு மதி செய்த உடனேயே இந்தத் துறை முகங்கள் சர்வதேசத் துறைமுகங் களாக மாறி மத்திய அரசின் கட்டுப் பாட்டுக்குக் கீழ் போய்விடும்.

விவசாயம், விவசாய சேவைகள் போன்றவையும் மாநில அரசுக்கு ரியன. இவற்றின் அபிவிருத்தி, ஆய்வு, மற்றும் தேசியத்தராதர நிர்ணயம் போன்ற கொள்கை சாராத விஷயங்கள் மத்தியிடமே இருக்கும். உல்லாசப் பயணத்துறை, சுற்றுச் சூழல், சுகாதாரம்மற்றும் மருத்துவ சேவைகள் தொடர்பாகவும் இந்த நிலையே காணப்படுகிறது.

தொலைக்காட்சி, மாநிலத்திற்குரிய தென்றாலும் நகைப்புக்கிடமான வகையில் தொலைக்காட்சி நிறுவன ங்கள் மத்திய அரசுக்குரியவை. இது முரண்பாடு.

இவை போன்ற சிக்கல்கள் இருந் தாலும் அரசாங்கம் இவற்றைத் தெளிவுபடுத்தும் என்றும் இத் தீர்வுப் பொதியின் அடிப்படையில் மேலும் கலந்துரையாடல்களும் பேச்சு வார்த்தைகளும் நிகழ்த்தப் பெற்று அதிகாரப் பரவலாக்கல் இடம் பெறும் என்று தீர்வுப் பொதியின் உருவாக்கத்துக்காக உழைத்த வர்களில் ஒருவர் தெரிவித்தார்.

முற்றுமுழுதான அர்த்தமுள்ள அதி காரப் பரவலாக்கத்துக்கு வழி கோலும் வகையில் உத்தேசமாக முன்வைக்கப்பட்டுள்ள இத் தீர்வுப் பொதி சிறுபான்மை மக்களுக்கான தீர்வுப் பொதியாக மாறிவிடாது என்று நம்புவோம்.

## திருமலை: எல்லோரும் நகரபிதாவாக முடியுமா?

திருக்கோணமலையில் அண்மை யில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச்சம்பவம் பாதுகாப்புப் படை யினரை மேலும் உஷார்படுத்தி யிருக்கிறது. கடந்த வாரத்தில் நகரின் மையப் பகுதியான சிவன் கோவி லடியை அண்மித்து சமாது ஒழுங்கை யில் பட்டப்பகலில் நடந்த இச் சம் பவத்தில் படுகாயமடைந்த சம்பூரை சேர்ந்த புஷ்பன் என அழைக்கப் படும் நபர் அன்றிரவே தள வைத்தியசாலையில் மரணமானார்.

உளவுத்துறைக்கு மிகவும் உதவி கரமாக இருந்தவர் என நம்பப்படும் இவர் அரசியல் நீரோட்டத்துக்குத் திரும்பி விட்ட இயக்கமொன்றின் முன்னாள் உறுப்பினராவார். இந்தச் சம்பவத்தால் உடனடியாகவே அப் பகுதி சுற்றிவளைப்புக்கு உள்ளா க்கப்பட்டது. தீவிர தேடுதலின் பின் கூட்டுறவுச் சங்கக் கிளையொன்றின் பெண் மனேஜரும் அக் கடையின் விற்பனையாளர் ஒருவரும் அழை த்துச் செல்லப்பட்டனர்.

கடுமையான விசாரணைகளின் பின் மனேஜர் விடுதலை செய்யப் பட்டார். விற்பனையாளர் தொடர் ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இரண்டொரு நாள் கழித்து அதற்கு அண்மித்த பகுதிகள் சுற்றி வளைக்க ப்பட்டு விசாரணைக்குப் பலர் கொண்டு செல்லப்பட்ட போதும் அனேகமாக எல்லோரும் விடுவிக் கப்பட்டுள்ளனர். சல்லிக் கிராமமும் சுற்றி வளைக்கப்பட்டு இளைஞர் ஒருவர் கைதாகியுள்ளார். இச் செய்தி எழுதும் வரை விடுவிக்கப்பட வில்லை.

பொலிஸாருடன் சோதனை நிலை யங்களில் ஊர்காவல் படையைச் சேர்ந்தவர்களும் நிறுத்தப்பட்டுள்ள னர். பயணிகளைச் சோதனையிடு வதில் இவர்கள் மகிழ்ச்சியடைகி றார்கள். பொலிஸாரிடம் இல்லாத கெடுபிடி இவர்களிடம் காணப்படு வதாக பொதுமக்கள் முகம் சுளிக் கிறார்கள்.

நகரபிதா சூரியமூர்த்தியையே இந்த ஊர்க்காவல்படை வீரர் ஒருவர் சோதனையிட முயன்ற சமயம் சிக் கல் எடுத்ததாம். அங்கு நின்ற பொலி சார் மன்னிப்புக் கேட்டதைத் தொட ர்ந்து விசயம் மேலிடம் வரை எடுத் துச் செல்லப்படாமல் சமாளிக்கப் பட்டுள்ளது. எல்லோரும் நகரபிதா வாக முடியுமா என்பதுதான் இங்கு ள்ள கேள்வி.

உட்துறைமுக வீதியில் ஊர்காவல் படையைச் சேர்ந்தோர் தாங்களா கவே ஒரு காவலரண் போட்டு மாலையானதும் வருவோர் போவோரைச் சோதனையிடத் தொடங்கினார்கள். வேட்டைக் காரர்கள் போல் துப்பாக்கியை ஸ்டைலாகச் சுழற்றியபடியே நின்ற இவர்களது காவலரண் மூன்று நாட் களுள் கலைக்கப்பட்டது. விசாரி த்துப் பார்த்ததில் த.வி.கூ. செயல திபர் இரா.சம்பந்தனும், நகரசபைத் தலைவர் சூரியமூர்த்தியும் உடனடி யாக இதை நிறுத்துமாறு மேலிட த்தைக் கேட்டிருக்கிறார்கள் என்ற தகவல்.

நகரத்தில் இனம்புரியாத மரண அமைதி குடிகொண்டாற் போல் இருக்கிறது. எப்போது எங்கே சுற்றிவளைப்புகள் நடக்குமோ என்ற கவலை மக்களுக்கு. எந்த நேரத்தில் யாருக்குப் புலிகள்வேட்டுத் தீர்ப் பார்கள் என்ற கவலை பாதுகாப்புத் துறைக்கு.

**விவேகி**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்